www.tamilarangam.net

3

ஆவணி'97

# அம்மா



## உள்ளே...



- சிவக்கொழுந்து பரமானந்தன்
- செந்தமிழர்
- சிவலிங்கம் சிவபாலன்
- ஓட்டமாவடி அறபாத்
- நா. கண்ணன்
- ஷோபா சக்தி
- ஆர். கே. நாராயன்
- பொ. கருணாஹரமூர்த்தி


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# தேவதைகளின் தேவைகள்



அள்ளிக்குடுத்தனல்லோ.......... நான் அணைத்தெடுக்கும் கையாலே,ஓ.." அம்மாதான். அம்மாவேதான் ஒப்பாரி வைக்கிறா. அம்மாவுக்கு இது வழக்கம். எங்களுக்கும், சுத்தி இருக்கிற ஆட்களுக்கும் இது பழக்கமா போச்சு. முந்தி துவக்கத்திலை எல்லாரும் வந்து அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுவினம், இப்ப ஒருதரும் வாறதில்லை. அம்மா ஒப்பாரி வையாத நாளிலைதான், ஏன் ஒப்பாரி வைக்கேல்லை எண்டு கேட்பினம். அந்த அளவுக்குஇந்தக் குடியேற்றத்திலை சிரிச்சு போச்சு.!

அம்மா செத்துப்போன அப்பாவுக்காக, அண்ணாவுக்காகத் தான் அழுகிறாவோ..... அல்லது..... உயிரோடை இருக்கிற எங்களுக்காக அழுகிறாவோ?....... எனக்கு அது தெரியாது. யோசிக்கிறன், ஆறாம் ஆண்டு படிக்கிற என்ரை சின்ன மூளைக்கு அது நெடும்பிரித்தல் மாதிரி.........
பிடிபடுகுதில்லை. தேவாரம் முடிந்த பிறகு வகுப்புகள் துவங்கிற மாதிரி அம்மாவின்ர ஒப்பாரி முடிஞ்ச பிறகே அன்றாட வேலைகளை நாங்கள் துவங்குவம். சுத்திவர இருக்கிறவையும் அப்படித்தான்.

"சன்னதியானே! என்ரை நாலுதேவதைகளிலை ஒண்டை கொண்டு போட்டாய், இந்த மூன்று தேவதைகளை யாவது காப்பாற்றிப்போடு அப்பனே" அம்மாவின் ஒப்பாரிக்கு அம்மாவே வைக்கிற முற்றுப்புள்ளிதான் அது. அம்மா மூன்று தேவதைகள் எண்டது என்னையும் பெரியபிள்ளையையும் தங்கச்சியையும்தான். எங்களுக்கு எல்லாமே அம்மாதான். அம்மாவுக்கு எல்லாமே நாங்கள்தான்.
கணிதபாடம் முடிய ஆங்கிலம் தொடங்கிறமாதிரி அம்மாவுக்கு ஒன்று முடிய இன்னொரு கஸ்ரம். கஸ்ரம் தாங்க மாட்டாமல் எங்களுக்கும் அடிப்பா. எங்களுக்கு அடிச்சுப்போட்டு, தான்தான் அழுவா. அம்மாவின் அழுகை, ஒப்பாரி அடி எல்லாத்தையும் நான் இடைக்கிடை மறந்து போவன். ஆனால் அம்மா சொல்லுற ஒன்றை மட்டும் நான் மறக்க மாட்டன். ஈரச்சோக்காலை எழுதின எழுத்துப் போலை என்ர மனதிலை இருந்து அழிக்க முடியாது.

"குஞ்சு, கெலிச்சத்தம் கேட்டால் விட்டுட்டு ஓடி வந்திடு பள்ளிக்கூடம் நாளைக்கும் நடக்கும்தானே. உன்னை நம்பித்தானே நாங்கள் இருக்கிறம்". அம்மா திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்லுவ. பன்னிரண்டு வயதிலை என்னை இந்த வீட்டிற்கு மொனிற்றர் ஆக்கினது ஆர்? அப்பாவோ...... கடவுளோ..... வேறை ஆருமோ, எனக்குத் தெரியாது.

அப்பா ஏன் செத்தவா?, நான் அம்மாவை ஒரு நாளும் கேட்கேல்லை. எனக்குப் பயம். அம்மா அழுவா, ஒப்பாரி வைப்பா. துண்டுதுண்டாக கிழிச்ச உலகப்படத்தை பொருத்திப் பாப்பமே அப்படி அம்மா சொல்லுற ஒப்பாரி துண்டுகளை நான் பொருத்திப் பார்த்து கண்டு பிடிச்சனான். எங்கடை சொந்த கிராமத்தை விட்டிட்டு வந்த பிறகு அப்பாவுக்கு வேலை என்ற ஒன்று இல்லை. கொம்பிளவுக் காட்டிலை விறகுவெட்டி அதைச் சைக்கிளிலை கட்டிக் கொண்டுபோய் ஆவரங்கால் புத்தூர் பக்கம் தேத்தண்ணிக் கடையளுக்கு குடுக்கிறவர். எல்லா நாளும் எண்டில்லை. ஆனால் அம்மாவுக்கு கஸ்ரம் இல்லை. அம்மா சந்தோசமாக இருந்தவ. ஒரு நாள் விறகுக் கட்டுக்கை இருந்த விரியன் பாம்புக்குட்டி அப்பாவுக்கு முதுகிலை கொத்தி அப்பா சைக்கிளோடை விழுந்து உடம்பெல்லாம் நீலம் பாரிச்சு வாயாலை நுரைதள்ளி - அந்த இடத்திலயே செத்துப்போனார். அம்மா பட்ட பாடும் - அழுத அழுகையும் எனக்கு வாய்பாடுமாதிரி ஒரு மனப்பாடம்.

"நீங்கள் இல்லாமல் இந்தத் தேவதைகளையும் வைச்சுக்கொண்டு நான் இனி என்ன செய்யப்போறன்?" அப்பா செத்தபிறகு அம்மா கேட்டுக்கேட்டு அழுதா. உயிரோடை இருக்கேக்கை அம்மா ஒருநாளும் அப்படிக் கேக்கஇல்லை. படிப்பிக்காத பாடத்திலை கேக்கப்பட்ட கேள்வி மாதிரி எனக்கு பெரிய அந்தரமாய் போச்சு.

சிவக்கொழுந்து பரமானந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"குஞ்சு எழும்படா பள்ளிக்கூடம் போறதில்லையே நானும் இண்டைக்கு நேரத்துக்கு போகவேணும்"
எனக்கு படுக்கையாலை எழும்புறதுக்கு விருப்பமில்லை. இருந்தாலும் எழும்பிறன். படுத்திருந்த உரச்சாக்கை சுத்தி வைக்கிறன். இந்த உரச்சாக்கு..... ஆ...... எனக்குத் தெரியும். அப்பா தோட்டத்திற்கு உரம் எடுத்தது. எங்கடை வீடு, தோட்டம் இப்ப எப்படி இருக்கும் தெரியாது.

சதுரநாள் போட்ட மாதிரி குறுக்கும் மறுக்குமாக நாற்பது ஐம்பது கொட்டில்களிலை எண்பது தொண்ணூறு குடும்பங்கள். எல்லோரும் எங்களைப் போல உடுத்த உடுப்போடை சேர்த்த செல்வங்களை விட்டுட்டு பெற்ற செல்வங்களோடை வந்தவைதான்.


கட்டித்தந்த புதிசிலை கொட்டில்கள் நல்லாத்தான் இருந்தது. போன மாரிக்கு அடிச்ச காற்றுக்கு எல்லாமே பென்சிலாலை எழுதி துப்பல் போட்டு அழிச்ச மாதிரி சிதைந்து போச்சு. அதை திருத்தி தர ஆருமே இல்லை. இப்ப இந்த கொட்டில்களை கண்கொண்டு பார்க்கேலாது. விளையாட்டுப் போட்டிக்கு போட்ட இல்லப்பந்தல் மாதிரி கிடைச்சதைகொண்டு,நினைச்சமாதிரி அவரவரே திருத்தி இருக்கினம். வெயில் காலம் கொஞ்சம் பரவாயில்லை. மழைக்காலம் தான் பெரிய கஸ்ரம். வீட்டு முற்றத்திலை முழங்காலளவு வெள்ளம். வீட்டுக்கை ஒரே சறுக்கல் பள்ளிக்கூடத்து பைப்படி மாதிரி. எங்களை ஆருமே கவனிக்கிறதில்லை.! . பள்ளிக்கூடத்திலை சமயபாடசேர் சொன்னது "புதிசா வந்த பொடியளை அகதிகள் என்று சொல்லப்படாது, இடம் பெயர்ந்தவை என்று சொல்ல வேணும்" என்று எப்படிச் சொன்னால் என்ன இரண்டும் ஒண்டுதானே. கவனிப்பாரற்றவை எல்லாரும் அகதிகள் தானே.

எப்பவாவது சிவப்பா கூட்டல் அடையாளம் போட்ட ஜீப் ஒண்டு வரும். ஏ . எல் படிக்கிற பொடியன்கள் மாதிரி வெள்ளை லோங்சும் வெள்ளை சேட்டும் போட்ட நாலஞ்சு பேர் இறங்குவினம். எல்லாரையும் கூப்பிட்டு கதைப்பினம். டாப்பு கூப்பிட்ட மாதிரி எல்லாற்றை பெயரையும் கூப்பிடுவினம். புதிசா வந்த ஆட்களை கூட்டி இடம் மாறினவையை கழித்து பெருக்கி பிரிச்சுக் கொண்டு போவினம். பிறகு எப்ப வருவினம் தெரியாது.

"குஞ்சு, பல்லை மினுக்கி, முகத்தை கழுவு, நேரம் போகுதெல்லே இனி நீ படிச்சு..... ஒரு மனிசனாகி, இந்தப் பெட்டைக் குஞ்சுகளுக்கு ஒரு வழி பண்ணி, இதையெல்லாம் பார்க்க நான் இருப்பனோ" அம்மா இழுத்துப் பறிச்சு கதைக்க எனக்கு பொல்லாத சினம் தான் வரும். பத்து வருசத்திலை செய்யிறதை பத்து நாளிலை செய்ய வேணுமென்று அவசரப்படுகிறா. ஏன் அப்படி. அப்பா மாதிரி தானும் செத்துப் போவனோ?, எண்டு அம்மாவுக்குப் பயம். தான் இல்லாட்டி நாங்கள் அகதிகளாகிப் போவமாம். இப்ப மட்டும் என்ன. அகதிகள் தானே இப்ப நாலு அகதி, அம்மா இல்லாட்டி மூண்டு அகதி. அவ்வளவு தானே.

கொடியிலை தொங்கிற காற்சட்டையையும் சேட்டையும் எடுக்கிறன். முந்தி எண்டால் எந்த சேட்டைப் போடுவம். எந்தக்காற்சட்டையை போடுவம் என்று யோசிப்பன். இப்ப கரைச்சல் இல்லை. ஒரு சேட்டு, ஒரு காற்சட்டை அதுவும் இனி தோய்ச்சால் கிழிவன் எண்ட மாதிரி. என்ரை அளவுக்கு சின்னனான அந்தக் காற்சட்டையையும் என்ரை அளவுக்கு பெரிதான அந்தச்சேட்டையும் போடுறன். சேட்டை காற்சட்டைக்குள்ளை விடுவம். அப்பதான் காற்சட்டை போட்டிருக்கென்று தெரியும். இப்ப எப்படி இருக்கும். வினோத உடைப்போட்டிக்கு போன மாதிரி இருக்குமோ!. எனக்கு தெரியேல்லை. கண்ணாடி என்றால் பார்க்கலாம், கண்ணாடி தான் இல்லையே.

பள்ளிக்கூடத்திலை போன திங்கட்கிழமை எல்லாருக்கும் சீருடைத்துணி குடுத்தது. எனக்கும் தான். வெள்ளை நிறத்திலை சேட்டுத்துணி, நீல நிறத்திலை காற்சட்டைத்துணி இரண்டுக்கும் நடுவில் ஒரு நோட்டீசும் வைச்சு தந்தது. அந்த நோட்டீஸ் நான் வாசிச்சனான். நல்ல தமிழிலை தடித்த எழுத்தில அச்சடித்த வசனங்களும் எனக்கு நல்ல ஞாபகம்.



இலவசக்கல்வி என்ற எமது கொள்கையின் முழுப்பயனையும் பெற, இலவச புத்தகங்கள்- இலவச மதிய உணவு என்ற தொடரில், இன்று இந்தச் சீருடைகளை இலவசமாக இந்த அரசு வழங்குகிறது. இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததிகள் இதன் பயனை முழுதாக பெற்று சிறந்த பிரஜைகளாக விளங்கவேண்டும்.

இங்ஙனம்,
மேன்மை தங்கிய ஜனாதிபதி.
சிறீலங்கா குடியரசு

என்றிருந்தது. எனக்கு சோதனைப் பேப்பரை கையிலை தந்த மாதிரி ஒரு நடுக்கம், வெள்ளைத்துணி சிவப்பாக, நீலத்துணி நாவலாக எனக்கு தெரியுது. எனக்கு இது வேண்டாம். வேண்டவே வேண்டாம். அடுத்த நாள் வகுப்பு சேர் கேட்டவர் "நேற்று என்ரை மேசையிலை சீருடைத்துணியை மறந்து போய் விட்டிட்டு போனது ஆர்? " நான் தான். பேசாமல் இருந்திட்டன். பிறகு சேர் அதைப்பற்றி அவர் கதைக்கவே இல்லை.

வகுப்பிலை இருக்கிறன். எனக்குப் பயம். படிக்க விருப்பமில்லை என்றில்லை. எந்த நேரமும் ஒரு யோசினை, ஒரே யோசினை. அம்மா இப்ப என்ன செய்வா? எங்கையாவது இடிக்க, குத்த போயிருப்பா. அம்மா அப்பிடி வேலை செய்தால் தான் எங்களுக்கு சாப்பாடு. பெரிய பிள்ளை பள்ளிக்கூடம் போனால் இப்ப மூன்றாம் ஆண்டு படிப்பாள். தங்கைச்சியைப் பார்க்கிறதுக்காக அம்மா அவளை மறிச்சுப் போட்டா. தங்கச்சி இப்ப நடந்து திரிவாள். எந்த நேரமும் பெரியவளோடை தான். அவள் பின் வாங்கில் பொடியள் மாதிரி ஒரே குளப்படி.

கொப்பியிலை முன்தாளை கிழிக்க பின்தாளும் விட்டுப்போகுமே எங்கடை வீட்டிலும் அப்படித்தான். ஒரு ஆளில்லாட்டி இன்னொரு ஆளும் இல்லை. ஏதோ இரைகிற சத்தம், என்னது கெலியோ........... நான் எழும்பி ஓடட்டோ. அம்மாவும் சொன்னவ கெலிச்சத்தம் கேட்டால் ஓடி வந்திடு. வடிவாக உற்றுக் கேட்கிறேன், அது லொறி ஒன்று போகுது. நான் கவனமாக இருக்க வேணும்,

அண்ணை மாதிரி நானும் செத்தால், ஐயோ, அம்மா துடிச்சு போவா. அண்ணையும் இந்தப் பள்ளிக்கூடத்திலை தானே செத்தவர். இரண்டாம் தவணை சோதினை நேரம். சோதினை எழுதிக்கொண்டு இருந்தனாங்கள். கெலி எங்கை இருந்து வந்ததோ தெரியாது, பட பட வென்று சுடுற சத்தம். எட்டாம் வகுப்பு மண்டபத்திலை ஐயோ என்றொரு குழறல் சத்தம். ஆரது? பழகின குரல். எல்லாரும் ஓடுகினம். நானும் ஓடிப்போய் பார்க்கிறன். ஒரு பொடியன் குப்புற விழுந்து கிடக்கிறான். அண்ணை, ஐயோ அண்ணைதான். கெலியாலை சுட்ட குண்டு கூரையை துளைத்து,

சோதனை எழுதிக்கொண்டிருந்த என்ர அண்ணையின்ர முதுகையும் துளைத்து..... ஐயோ கடவுளே. வெள்ளைச் சேட்டு சிவப்பாக- நீலக் காற்சட்டை நாவல் நிறமாக- இப்பவும் எனக்கு தண்ணீப்படம் ஒட்டின மாதிரி பளிச்சென்று தெரியுது. எல்லாரும் ஓடி வருகினம். கணித சேரும், தமிழ்பாடச்சேரும் அண்ணையை தூக்கினம். அண்ணையின்ரை முகத்தை தடவி அண்ணை...... அண்ணை என்று கூப்பிடுகிறன். கண்ணை முழுச்சு அண்ணை என்னைப்பார்க்கிறார். அம்மா.......... தங்கைச்சியவை....... அம்மாவின் மூத்த தேவதையின் ஆசை அது.அம்மா வந்தா. அழுது குழறி சன்னதம் ஆடினா. தானும் திப்பிலி ஆடி, எங்களையும் திப்பிலி ஆட்டி, அந்தப்பள்ளிக்கூடத்தையே ஆட்டி விட்டா. பெற்றார் தின விழாவுக்கு வந்த சனம் மாதிரி ஒருசேனை சனம். அம்மா மாதிரி இன்னும் எத்தனை அம்மாக்கள் இந்த பள்ளிக்கூடத்திலை இப்படி சன்னதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆடப்போகினம். தெரியாது. அப்பாவுக்கு கொள்ளி வைச்சது அண்ணை. அண்ணைக்கு கொள்ளி வைச்சது நான். எனக்கு...... ஆர். நான் சாக மாட்டன், நான் சாகக்கூடாது, என்ரை அம்மா- பெரியபிள்ளை- தங்கைச்சி மூன்று பேரையும் விட்டிட்டு நான் சாகவே மாட்டன். கெலியிலை இருந்து சுட்டால்....... எப்படி தப்புறது, யோசிக்கிறன், அதிபர் சொன்ன மாதிரி கடவுள் காப்பாற்றுவாரோ.?

அதிபர் மூன்றாம் தவணை பள்ளிக்கூடம் துவங்கின அன்று கூட்டம் வைச்சு சொன்னவர். "இந்தப் பள்ளிக்கூடம் ஒரு கோயில்- இந்த பிள்ளைகளெல்லாம் தேவதைகள். இந்த மண்ணிலை நடக்கிற எதுவும் தெரியாத- தெரிய விரும்பாத- தெரியமாட்டாத தேவதைகள் நீங்கள். உங்களுக்கு பாதுகாப்பு கடவுள் தான். அவர் ஒருவரே உங்களை காப்பாற்ற வேண்டும்" கடைசி பாடத்துக்கு மணி அடிக்குது, என்ன பாடம். அட்டவணையை திருப்பி பார்க்கிறன். தமிழ், தமிழ்தான். தமிழ் புத்தகத்தை எடுக்கிறன், முன்மட்டையும் இல்லை, பின் மட்டையும் இல்லை. எங்களைப்போலை, எங்களுக்கும் அப்பா என்ற முன்மட்டையும்- அண்ணை என்ற பின்மட்டையும் இலலைத்தானே. மிச்சதாள்களும் இன்னும் எத்தனை நாளைக்கு.

தமிழ் பாடத்துக்கு சேர் வாறார், சேர் நல்லவர், எனக்கு தமிழ் பாடமும் விருப்பம். சோதனையிலை தொண்ணூறு புள்ளிக்கு மேலை எடுப்பன். "மாலை வணக்கம் சேர்" எல்லாரும் எழும்பி நிக்கிறம். சேர் இருக்கச் சொல்கிறார். இருக்கிறம். "பிள்ளைகளே" சேரின்ரை குரலைக் கேட்கவே எனக்கு ஆசை. ஐஸ்பழக்காரன்ரை மணி அடிச்ச மாதிரி ஒரு தெளிவு. "நீங்கள் எல்லாரும் சீருடை தைத்து விட்டீர்களா?" சேர்தான் கேட்கிறார். போச்சு, போச்சு கொப்பி அடிச்சு பிடிபட்டமாதிரியாப்போச்சு. முழுசுறன், எல்லாரையும் சுத்திப்பார்க்கிறன். மோகன், சிவா, தருமன், ரூபன் எல்லாரும் போட்டிருக்கினம். பின் வாங்கில சுப்பிரமணியமும் போடஇல்லை. நான்........... நானும் போடஇல்லை. சேர் கேட்கிறார். "சுப்பிரமணியம் ஏன் சீருடை போட்டு வரஇல்லை."சேர் அது ரெயிலர் இன்னும் தைச்சு முடியஇல்லையாம். வாற கிழமை போட்டு வருவன் என்று சொல்லி போட்டு முதலாம்பிள்ளை ரிப்போட் வாங்கினது மாதிரி எல்லாரையும் ஒரு பார்வை பார்த்தான்.

அடுத்ததா சேர் திரும்பி என்னை பார்த்தார். புட்போல் மாட்ச் அம்பயர் மாதிரி. இந்திரன் நீ ஏன் சீருடை போட்டு வரவில்லை. வால் சிக்குப்பட்ட கடுதாசிப்பட்டம் மாதிரி எழும்பவும் மாட்டாமல் இருக்கவும் மாட்டாத ஒரு நிலமை. சமய பாடத்து திரிசங்கு சொர்க்கத் தேவனோ, உலகத்து கடவுள்கள் எல்லாரும் ஒரேயடியாக வந்து உதவ மாட்டினமே. அம்மா மாதிரி முருகா என்று குழறட்டோ.முருகன் எங்கடை வீட்டு முன் தட்டியிலை தொங்குகிற முருகன் படம். அது படமல்ல- எங்கேயோ கண்டெடுத்த பழைய கலண்டர். யாமிருக்கப்பயமேன் என்று சொல்லுகிற மாதிரி கையிலே வேலும் இடுப்பில கோவணமுமா அந்த முருகன். எங்களுக்கும் நாங்கள் இருக்கிற சூழலுக்கும் பொருத்தமான முருகன் படம். சேர் பிறகும் கேட்கிறார் "இந்திரன், வாற கிழமை நீயும் போட்டு வருவியா"? சுப்பிரமணியம் திரும்பி என்னை பார்க்கிறான். தான் சொன்ன விடையை என்னையும் கொப்பியடியடா என்ற பார்வை எனக்கு ஒரு மாதிரி இருக்கு.

சேர் கைகாட்டுகிறார். கிட்டவரட்டாம். வாங்காலை எழும்புறன், கை வாங்கிலும் ஒட்டிக்கொண்டு வருகுதோ இல்லை. என்னை ஒரு மாதிரிபார்க்கினம் நேரம் பார்க்க நிழலை அடி அளப்பினமே! அப்படி அடியளந்து கொண்டு சேருக்கு கிட்ட போறன். தெரிந்த விடையை சொல்லத் தெரியாத மாணவன் நான். "சேர் என்னட்டை சீருடைத்துணி இல்லை, நான் கொண்டு போக இல்லை" சொன்னன். உரேக்கா உரேக்கா எண்டு அந்த விஞ்ஞானிமாதிரி சேர் எழும்பி ஓட இல்லை. ஆனால் கண்டு பிடிச்சிட்டார்.
"ஓ என்னுடைய மேசையிலை சீருடைத்துணியை மறந்துபோய் விட்டுட்டு போனது நீயா" கேட்டார். வேறை யார் நான் தான். நானேதான். அதிபர் சொன்ன தேவதைகளில் ஒன்று. அம்மாவின் மூத்த தேவதை.
மறக்கவில்லை சேர், எனக்கு மறதி என்று இல்லை சேர். எனக்கு ஞாபகம், ஞாபகம்கூட, அதுதான் சேர் எனக்கு பிரச்சினை.

அப்ப வேணுமென்று தான் விட்டுட்டு போனியா? இலாச்சியை இழுத்து சீருடைத்துணியை எடுத்து மேசையில் வைத்தார். நான் போட்டிருந்த உடுப்பைப் பார்க்கிறார், பிறகு சீருடைத் துணியையும் மாறி மாறிப் பார்க்கிறார். அவருக்குக் கண் சிவக்கேல்லை. மீசை துடிக்க இல்லை. கோபம் வரவில்லை. எனக்கு காய்ச்சல் குறைகிற மாதிரி பயம் குறையிறதும் தெரியுது. "இந்திரன் இது அரசாங்கம் குடுக்கிற துணி, அதுவும் ஜனாதிபதி இலவசமாக தாறார். எல்லாரும் தைச்சுப் போட்டிருக்கினம், ஏன் நீ மட்டும் வோண்டாமெண்டுட்டாய்" சேர்தான், எனக்கு விடை தெரியும். எப்படிச் சொல்லுறது. செய்கைவழியே பிழை- விடைமட்டும் சரியா வருமோ. விளாங்காய் திண்டிட்டு தண்ணி குடிக்காட்டி தொண்டைக்கை விக்குமே. அப்படி ஒரு தவிப்பு. ஒரு மாதிரி சமாளிச்சுக்கொண்டு அவருக்கு சொல்லுறன். "சேர் சீருடைத்துணி இது வேண்டாம் எனக்கு இங்கிலீசுப் படத்திலை போடுவினம் சேர் மினுமினுப்பா- அலுமனிய நிறத்திலை சுட்டாலும் குண்டு துளைக்காத- துணி. அதிலை இரண்டு யார் துணி வாங்கித்தரச் சொல்லி அந்த
ஜனாதிபதிக்கு எழுதுங்கோ சேர். அப்பிடித்துணி எண்டால் தைச்சுப்போட்டு வருவன் சேர்."

சேருக்கு ஒரு மாதிரியாய்ப் போச்சு, அவற்றை மீசை துடிக்குது. கண்கள் சிவக்கிறதும் தெரியுது. ஒருமாதிரி முகம் வித்தியாசமா, ஆ... சேர் அழுவர்போலை முகம் தெரியுது. தலையைக் கவிண்டு கொண்டு மேசையிலை தெரியிற சூரிய வட்ட வெளிச்சத்தையே உற்றுப்பார்க்கிறார். பிறகு தலையை நிமிர்த்தி வெளிச்சம் வந்த துவாரத்தை கூரையிலை தேடுகிறார். ஒன்றல்ல பல துவாரங்கள். எல்லாம் எல்லாமே குண்டுச்சன்னம் வந்த அல்லது வரப்போகிற துவாரங்களாக அவருக்கும் தெரியுது போல. திரும்பி வகுப்பிலை இருக்கிற- அவர் அடிக்கடி சொல்லுகிற தேவதைகளை- வீடியோ படக்கமரா மாதிரி ஒவ்வொன்றா பார்க்கிறார். என்னைப்போல ஒரு ஏக்கம் அந்த முகங்களிலும் தெரியுதோ? சேர் திரும்பி வெள்ளைத் துணியையும் நீலத்துணியை கண்வெட்டாமல் பார்க்கிறர். வெள்ளைத்துணி சிவப்பா- நீலத்துணி நாவலாக அவருக்கும் தெரியுதோ என்னைப்போல. பிறகு இதுபற்றி ஒண்டுமே கதைக்கேல்லை.

●

தேவதைகளின் தேவைகள்
எனும் இச்சிறுகதை
பாரிஸிலிருந்து வெளியாகும்
'கதலி'' இரண்டாது இதழிலிருந்து
மறுபிரசுரமாகிறது.

சிவக்கொழுந்து பரமானந்தன் என்ற
செய்நேர்த்தி மிக்க இவ் எழுத்தாளர்
வேறெங்கும் எழுதியதாகவும்
அறியமுடியவில்லை.
புலம் பெயர்சூழலில் ஓர்
புதிய வரவாகக் கொண்டு வாழ்த்தி
இக்கதையினை மீள்பிரசுரம்
செய்வதில் அம்மா
மகிழ்ச்சி கொள்கிறாள்.
- அம்மா -

"KATHALI
P.Ganesalingam
9, Rue Perdonnet
75010-Paris





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“இஞ்சாருங்கோ, செல்லக்கா ரெலிபோன் எடுத்தவ... கொழும்பில நிமலதாசனோட லொட்ஜில வந்து நிற்கிறாவாம். உங்களையும் ஜெயாவையும் ரெலிபோன் எடுக்கட்டாம்.....”

“நிமலதாசனோ! ஆர் அது?..... சரி ஏதோ சிலவுக்கு வந்திருக்கினம்.”

“உங்களுக்கு ஒரு சவமும் தெரியாது. அப்பையாவின் பேர்தான் நிமலதாசன்...”

“சரி,சரி எனக்கு ஒன்றும் தெரியாதுதான், நீங்கள் எல்லாரும் எல்லாம் தெரிஞ்சனீங்கள். கொஞ்சம் சும்மா இருங்கோ”

●

“கலோ!, கலோ! சேகர் லொட்ஜா? இங்கை பிரான்சில் இருந்து கதைக்கிறம்.... Mrs. பரமநாதன் அன்னம்மாவுக்கு கதைக்கிறம், சண்டிலிப்பாய்....“

“ஓம், ஓம் கொஞ்சம் நில்லுங்கோ,”
“பன்னிரண்டாம் நம்பர் அறை Mrs. பரமநாதன்!, Mrs. பரமநாதன்! பிரான்ஸ் கோல்....”

“கலோ, கலோ நான் செல்லம் கதைக்கிறன்..... ஆர் அண்ணையோ?

“ஓம்! ஓம்! என்ன புதினம்?”

“ஒண்டும் இல்லை நான் இவன் நிமலதாசனை - எங்கடை அப்பையாவைக் கூட்டி வந்தனான். அங்கே வச்சிருக்கேலாது பயமாய் இருக்கு.... இங்கை எங்கடை இரத்தினம் மச்சாளும், உங்கை யாரோ நாகராசாவுடன் ஒழுங்கு பண்ணியிருக்காம். அந்தாளின் மச்சான் சுதாகர் எண்டவர் செட்டித் தெரு முத்துமீனாட்சியில வேலையாம். அவரைச் சந்திச்சால் பண்டாரநாயக்கா மாவத்தையில இருக்கிற சீலன் எண்டவர் மூலம் அனுப்பலாமாம்......அது தான்....”

“அது சரி, இப்ப காசுப் பிரச்சனை, நான் என்ன செய்ய... என்பாடும் சரியான கஸ்டம்.... உங்களுக்கு இங்கை உள்ள பிரச்சனையள் தெரியாது. சொன்னாலும் விளங்காது, அதுதான் யோசிக்கிறன்...”

“அண்ணை நான் இரண்டு லட்சம் கொண்டு வந்தனான். இன்னும் ஒண்டரை லட்சம் வேணும். நீங்களும் ஜெயாவும் உதவி செய்யுங்கோ. அப்பையா உங்கை வந்து உழைச்சு தருவான்.”

“அது சரி, ஏஜென்சி எப்படி? கதைச்சனீங்களோ?”

“காசுக்கு உங்கை உள்ள நாகராசா பொறுப்பாம். எல்லாத்துக்கும் இரத்தினம் மச்சாளின்ர அப்பனோட கதையுங்கோ.”

“அது சரி இரண்டு லட்சம் எங்காலை?”

“ஐயோ அண்ணை, என்ன செய்யிறது? என்ரை நகைகளையும், மூன்று குமர்களின்ர இருந்த நகைகளையும் நித்தியரிட்ட கொடுத்திட்டு வாங்கி வந்தனான்.”

“நித்தியோ, பாவம் அந்தாள் நல்ல மனுசன்.”

“ஓமண்ணை வட்டி வேண்டாமெண்டவர், நகையையும் தேவை இல்லை எண்டவர், நான்தான் சரியில்லை நகைகளை வைச்சிருங்கோ எண்டு கொடுத்தனான்.”

“நல்ல மனுசன், இப்ப வீட்டோடதானோ, அவவும் போய்ச்சேந்திட்டா. பிள்ளைகள் மூண்டும் யேர்மனியில எண்டு அறிஞ்சன்”

“ஓமண்ணை அவர் பாவம், எங்கடை பாலசுப்பிமணியர் கோயிலை அவர்தானே முன்னுக்கு நிண்டு, கட்டி ஒப்பேற்றி கும்பாபிஷேகம் எல்லாம் சிறப்பாகச் செய்தவர். அவரை நாங்கள் மறக்கலாமே?”

“சரி, சரி ரெலிபோன் யுனிட் முடியுது. ஜெயா கதைப்பான். எல்லாம் சொல்லுவான் சரியே!”

●

“அப்பனோ! நான் இங்கை சித்தப்பா”

“ஓம் சித்தப்பா, இப்பதான் கொழும்புக்கு கதைச்சனான். செல்லம் அன்ரியும் கதைச்சார்.”


“என்ன அப்பன்? என்ரை நிலைமை தெரியுந்தானே இங்கை நாங்கள் படுற பாடுகள்.”

“சித்தப்பா, என்ன செய்யிறது அங்கை கிராமங்கள் எல்லாம் புகுந்திட்டாங்கள். இளம் பெடியள், பெட்டையள் பாடு பயங்கர நிலைமை! தம்பி, வயத்திலை நெருப்பைக் கட்டி வைச்சு கொண்டு இருக்கிறம் என்று அம்மா சொன்னா. ஜெயாவோட கதைச்சனான். இங்கை உள்ள நாகராசரிட்ட இண்டைக்கு கதைப்பம். எங்கடை தம்பியையும், உங்கட மருமகனையும் ஒண்டா எடுக்கப்பாப்பம்.”

“முடிவா இருக்கட்டும். சரி நான் வைக்கிறன்.”

●

“கலோ! கலோ! பிரான்சில இருந்து கதைக்கிறன். பன்ரெண்டாம் நம்பர் றூம் Mrs. பரமநாதனுக்கு கதைக்கச் சொல்லும்.”
“Mrs. பரமநாதன், Mrs. பரமநாதன் கோல், பிரான்ஸ்



# பொறி

- செந்தமிழர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோல்.•

•கலோ யார் கதைக்கிறது?•

•ஓம் நான்தான். நாங்கள் இங்கை ஏஜென்சியின்ர சொந்தக்காரன் நாகராசாவோட கதைச்சு சரி, அப்பன் தம்பியார் கணக்காய் தாய்க்கு இரண்டு அனுப்பியிருக்கிறார்....•.

•ஓமண்ணை மச்சாளும் கொண்டு வந்து குடுத்தவ...•

•நீயும் அவவும் முத்து மீனாட்சி, சுதாகர் மூலமா சீலனிட்ட காசை குடுங்கோ, நிமலதாசன் கணக்கால நீ ரெண்டு குடு, மச்சாள் பாஸ்கரன் கணக்கால் ரெண்டு குடுக்கட்டும். மிச்சம் ஒண்டரையை ஆக்கள் இஞ்சால வந்தாப்பிறகு குடுக்கலாம் எண்டு நாகராசா சொன்னார், சரிதானே!•

•ஓமண்ணை... இங்கை அப்பையா உங்களுடன் கதைக்கப் போறானாம்...•

•மாமா நான் அப்பையா, நான்தான் நிமலதாசன்...•

•ஓம் ஓம் என்ன நீ ஊரில் குழப்படியாம்?•

•இல்லை மாமா, நான் ஒரு குழப்படியும் செய்யேலை. அம்மாவுக்கு ஒண்டும் விளங்காது, நான் என்ரை கடமைகளைத்தான் செய்தன்....•

•சரி, சரி, ஏஜன்சிக்கு காசு கட்டுவினம், கவனமாய் இஞ்சால வந்து சேர். என்ரை, ஜெயாவின்ர ரெலிபோன் நம்பர்கள் குறித்து வைத்துக் கொள். எங்கை நிண்டாலும் தொடர்புகொள்... பாஸ்கரனிட்டயும் சொல்லு. சரி, கொம்மாட்ட குடு....•

•ரெண்டு பேரும் வெளிக்கிட்டவுடன ஊருக்கு போறியளோ? அங்கை குமர் பிள்ளைகள்...•

•நாங்கள் இரண்டு பேரும், இதுகள் உங்கை வந்து சேர்ந்த பிறகுதான் போவம்....•

•சரி, சிலவுக்கு ஆயிரம் பிராங் அனுப்புறன். இதுதான் என்னால முடியும். ஜெயாவும் அனுப்புவான்தானே...•

•மதி பாடு எப்படி?•

•இருக்கிறான்.... வயித்தியம் நடக்குது. பரவாயில்லை, பள்ளிக்குப் போறான். நான் என்னத்தை இதுகளுக்குச் சொல்ல எல்லாம் கடவுள் விட்ட வழி....•

•மதி சின்னபிள்ளை. இப்படியாச்சே எண்டுதான் இஞ்ச எல்லாருக்கும் கவலை...
என்ன செய்ய அவனால் அவனுக்கும் கவலை, எங்களுக்கும் கவலை. அவனும் வெளியிலை காட்டுறதில்லை, நாங்களும் வெளியிலை காட்டுறதில்லை. அவனை சந்தோஷமா வைச்சிருக்க வேண்டியதுதான்....•

•நினைக்கிறதெல்லாம் நடந்திட்டால் பிறகேன் தெய்வத்தை நினைக்கப்போறம்? சரி, நான் வைக்கிறன்"

●

•மாமா, பெரியமாமாவோ, நான் நிமலதாசன். நானும் பாஸ்கரனும் கியூ எண்ட இடத்துக்கு வந்திட்டம். இங்கை தயா என்டவர் வேற நாப்பது பேரோடு என்னையும் பாஸ்கரனையும் விட்டிருக்கிறார். நான் ரெலிபோன் பூத்தில் நிற்கிறன்... நம்பரைத் தாறன் ஒருக்கா எடுக்கிறீங்களே?•

•சரி, சரி நம்பரைத் தா"

●

•யார் அப்பையாவோ?•

•ஓம் மாமா. இஞ்ச ஒரு காட்டுப் பகுதியில ஒரு பழைய வீட்டில் விட்டிருக்கினம். நாப்பது பேருக்கு மேலே. எங்கடை ஊர் ஆக்கள் இருபத்தாறு பேர் ஒரு பெரிய அறையில் இருக்கிறம். லயிற் இல்லை, மெழுகுதிரிதான்...•

•சாப்பாடு எல்லாம் என்ன மாதிரி?"

"பிளேனில் சாப்பிட்ட சாப்பாடுதான் மாமா.....•

•சரி, சரி அழாதை. ஏஜென்சிகாறன் உங்கை நிக்கிறான்தானே...•

•அவன் இங்கை போலோன்காறரிட்ட எங்களை பாரம் கொடுத்திட்டு, வேற இடத்தில கொட்டலிலதான் தங்கிறான்.....•

•சரி, எப்படியும் உங்களைப் பார்க்க வருவான் தானே! அப்ப ரெலிபோன் நம்பரை வாங்கி வைச்சிரு. எனக்கிப்ப அவசரம். நாளைக்கு இதேநேரம் பூத்தில வந்து நில். நான் கோல் எடுக்கிறன். சரியே....•

●

•கலோ, யார் நிமலதாசனோ?•

•ஓம் மாமா•

•சாப்பிட்டியோ?•

•இன்னும் இல்லை மாமா•

•ராத்திரி என்ன சாப்பாடு?•

•ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு அவிச்ச உருளைக்கிழங்கு!•

•அட கடவுளே! ஏஜென்சி நம்பர் தந்தவனே?•

•ஓம் மாமா எழுதுங்கோ......•

•சரி, நான் அவரோட கதைக்கிறன், நாளைக்கு இதே நேரம் பூத்தில் நில். ரெலிபோன் எடுப்பன். கொண்ணண் ஜெயா கதைச்சவனே?....•

•ஓம் மாமா, அவருக்கும் ஏஜென்சியின்ர ஹோட்டல் நம்பர் கொடுத்தனான்.•

•சரி, நாளைக்கு இதே நேரம் கதைக்கிறன். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை, பயப்படாதை. சரியோ.•

●

•கலோ Mr. தயா!•

•ஓம் நான்தான்.....•

•தம்பி நான் இங்கை பிரான்சில் இருந்து கதைக்கிறன், என்ரை மருமகன் நிமலதாசன், பாஸ்கரன் என்றவர்களை கொழும்பு சுதாகர், சீலன் ஆட்கள் மூலமா வந்தவையள். அவயளின்ரபாடு எப்படி?•

•பிரச்சனை இல்லை. அவையளை வேறு ஆட்களோடை ஒரு வீட்டில விட்டிருக்கு. உங்கடை மருமகன் ஜெயாவும் என்னோட கதைச்சவர். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். மிச்சம் ஒண்டரையையும் இஞ்ச அனுப்புங்கோ கூடிய கெதியில் அலுவல் பாக்கலாம்....•



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தம்பி, இஞ்சால வந்த பிறகுதான் மிச்சம் எண்டு சொன்னவை. நீர் இப்ப இப்பிடிச் சொல்றீர்?"

"கெதியில் அனுப்ப வேண்டும் என்றால் காசை அனுப்புங்கோ... எனக்கு வேற வேலை இருக்கு.."

●

"கலோ! நாகராசாவுக்கு கதைக்கலாமோ?"

"நான்தான் நாகராசா"

"இங்கை நான் லோகன்ர சித்தப்பா கதைக்கிறன்...."

"சொல்லுங்கோ"

"என்ரை மருமகனும், அப்பன்ர தம்பியும் கியூவில் நிற்கினம், கியூ ஏஜென்சி தயாவோட கதைச்சனான்... அவர் மிச்சம் ஒண்டரையும் தனக்கு அனுப்பினாதான் கெதியில இவயளை இஞ்சால அனுப்புவாராம்."

"ஓமோம். அப்படித்தான் உங்கட மருமகன் ஜெயாவுக்கும், அப்பனுக்கும் சொல்லயிருக்கிறார். என்ன செய்வது காரியம் ஒப்பேற வேணுமே! எப்ப சந்திக்கிறியள்? நீங்கள் காசைத் தந்தால் உடன கொழும்புக்கு அனுப்பிவைப்பம். அலுவல்நடக்கும்"

"அட கடவுளே! நான் மருமகனை கேட்டு சொல்கிறன் தம்பி. சரி வைக்கிறன்"

●

"கலோ! மாமாவோ! நான் ஜெயா"

"ஓம். சொல்லு"

"மாமா, நான் ஏஜென்சிகாரரோட கதைச்சனான். மிச்சம் ஒண்டரையும் குடுத்தால் கெதியில அனுப்புவாங்கள். அல்லாட்டில் நாள் செல்லுமாம்...."

"சரி இனி என்ன செய்யிறது... ஆக்கள் இஞ்சாலை வந்து சேரட்டும்...."

●

"கலோ! Mrs. அன்னம்மா பரமநாதனுக்கு கதைக்க வேணும். பரிஸ் கோல். மகன் ஜெயா என்று சொல்லுங்கோ...."

"Mrs. பரமநாதன் றூம் நம்பர் 12... பரிஸ் கோல்...."

"கலோ கலோ ஆர் கதைக்கிறியள்..."

"அம்மா, நான் ஜெயா. நானும், அப்பனும் ஏஜென்சிக்கு ஒண்டரை அனுப்பியிருக்கிறம்...."

"நீங்களும் இரத்தினம் மாமியும் போய் ஏஜென்சிகாரரைக் கண்டு கெதியில் அனுப்பச் சொல்லுங்கோ"

"ஏன் ஜெயா உங்களிட்ட ஆட்களை கொண்டு வந்து விட்ட பிறகுதானே மிச்சம் எண்ட பேச்சு?.."

"அம்மா அது உங்களுக்கு சொன்னால் விளங்காது, உவங்கள் உப்பிடிதான்..நடுவழில கொணந்து அந்தரிக்க விட்டிட்டு பிடுங்குவாங்கள்.."

"ஐயோடா தம்பி! அதுகளின்ர சாப்பாடுகள் என்னமாதிரி ராசா?

"நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ. நான் நூறு டொலர் கியூ ஏஜென்சிக்காரனுக்கு அனுப்பியிருக்கிறன். அவன் அப்பையாவிட்ட கொடுப்பான். அப்பனும் தம்பியாருக்கு நூறு டொலர் அனுப்பியிருக்கிறான்".

"தம்பி, அப்பையாவை ஒருக்கால் என்னோட கதைக்கச் சொல்லு..... எனக்கு ஒரே யோசனையா இருக்கு....."

"சரி சரி, நான் சொல்றன். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். நான் வைக்கிறன்"

●

"கலோ! நான் கியூவில் இருந்து கதைக்கிறன். பன்னிரண்டாம் நம்பர் றூம் Mrs. அன்னம்மாவுக்கு கதைக்கச் சொல்லுங்கோ..."

"கொஞ்சம் நில்லும். Mrs. பரமநாதன்.... கோல், கியூ கோல்...".

"கலோ! நான்தான் கதைக்கிறன்...."

"அம்மாவோ, நான் அப்பையா....."

"என்ர செல்லம். உங்க என்னடி செய்யிறாய். ஒழுங்காய் சாப்பிடுறியா?"

"அம்மா நான் சுகமாய் இருக்கிறன்.... அண்ணை நூறு டொலர் அனுப்பினவர்.... அதிலதான் காட் வாங்கி உங்களுடன் கதைக்கிறன்....."

"அம்மா ஒரு நாளைக்கு ஒராளுக்கு ஒரு அவிச்ச உருளைக்கிழங்குதான் தாறாங்கள். கொட்டாவி விட்டால் உதைக்கிறாங்கள் அம்மா...."

"ஐயோ தெய்வமே! இது என்ன சோதனையப்பா? எங்கடை பிள்ளைகளை காப்பாத்தையா! என்ரை ராசா அப்பையா தேத்தண்ணி கோப்பியாவது ஒழுங்காய் தாறாங்களோ?"

"ஓம் அம்மா, நீங்கள் சொல்லுவியள் கோப்பி கிளுவங்கரி மாதிரி எண்டு, அப்படி ஒரு முடறு கோப்பி ஒரு நாளைக்கு ஒரதரம்"

"கடவுளே! எங்களை மட்டும் ஏன் இப்பிடிச் சோதிக்கிறாய்?"

"அம்மா ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ. இஞ்ச ஊராக்கள் கனபேர் இருக்கிறம். உங்கை ஏஜென்சிகாரரைக் கண்டு கூடிய கெதியில் எங்களை பிரான்சுக்கு அனுப்பச் சொல்லுங்கோ...."

"சரி ராசா, கன நேரம் கதைக்க காசு போகுமாம்...."

●

"கலோ! தம்பி தயாவோ, நான் இங்கை பரிசில இருந்து நிமலதாசன்ர மாமா கதைக்கிறன்...."

"ஓம் சொல்லுங்கோ என்ன விஷேசம்?"

"விசேஷமோ தம்பி? ஏன் தயா! முழுக்காசுசும் கட்டி இரண்டு மாசம் ஆச்சு. இந்த பிள்ளையளை ஏன் இன்னும் அனுப்பி வைக்கேல்லை?"

"ஐயா, நான் சொல்லுறதை கேளுங்கோ... நான் தான் ஒண்டரையை எனக்கு அனுப்பி வையுங்கோ... கெதியில் அனுப்புறன் என்று சொன்னனான்... நீங்கள் கொழும்புக்கு அனுப்பினியள்... அவங்கள் இஞ்ச எனக்கென்னும் அனுப்பிவைக்கேல்லை. போலன்காறன் காசு முழுக்க கொடுத்தால்தான் ஏதன் செய்வான்...."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அப்ப என்ன தான் சொல்கிறீர்?

"காசை எனக்கு அனுப்பிவையுங்கோவெண்டு சொல்றன்..."

●

"ஜெயாவோ! ஏஜென்சியுடன் கதைச்சனியோ? என்னவாம்?"

"அவன் மாமா போலன்காறர் றேற் கூட்டிப் போட்டாங்களாம். இன்னும் ஒண்டு அனுப்பட்டாம். அல்லது தங்களுக்கு ஒண்டும் செய்ய முடியாதாம்....!"

"யார் சொன்னது?"

"நான் கொழும்புக்கு கதைச்சனான். அப்பனும் கதைச்சவன். ஒண்டும் செய்யேலாது, இரண்டு பேரையும் இன்னும் ஒவ்வொண்டு அனுப்பட்டாம். அதுதான் நாங்கள் காசுக்கு ஓடி திரியிறம்...."

"நாகராசா என்னவாம்?"

"அவரும் சொல்றார், என்ன செய்யிறது! குடுத்து விஷயத்தை ஒப்பேற்ற வேணும்தானே எண்டு...."

"சரி நான் நாகராசாவுடன் கதைக்கிறன்"

●

"கலோ, நாகராசாவோட கதைக்கலாமோ?"

"அவர் குளிக்கிறார். கொஞ்சம் செல்ல எடுங்கோ...."

●

"கலோ! நாகராசாவோட கதைக்கலாமோ?"

"அவர் குளிக்கிறார். நீங்கள் யார் கதைக்கிறியள்?"

"நான் லோகன்ர சித்தப்பா, இப்ப ஒருமணித்தியாலத்துக்கு முதல் எடுத்தனான், குளிக்கிறார் எண்டு சொன்னியள்..."

"இல்லையே. நான் சொல்லேல்லை. சிலவேளை மகளா இருக்கும்!"

"பரவாயில்லை. லோகனின் சித்தப்பா ரெலிபோன் எடுத்தவர், ஒருக்க கதைக்கட்டாம் எண்டு சொல்லுங்கோ...."

●

"கலோ! நாகராசாவோட கதைக்கலாமோ?"

"அவர் குளிக்கிறார். நீங்கள் யார் கதைக்கிறியள்?"

"நான் அவருக்குத் தெரிஞ்சவர்....."

"அவர் குளிக்கிறார்..... ஆ... ஆ... கொஞ்சம் பொறுங்கோ. இங்க வந்திட்டார். அப்பா உங்களுக்கு தெரிஞ்சவர் கதைக்கிறாராம்......"

"கலோ! யார் கதைக்கிறியள்?"

"நான் லோகன்ர சித்தப்பா....."

"சொல்லுங்கோ"

"என்ன சொல்ல இருக்கு, ஏஜென்சி இன்னும் ஒண்டு கேட்குதாம்!....."

"ஓம் அப்பிடித்தான் ஜெயாவும், அப்பனும் சொன்னவை. நான் கொழும்புக்கு அடிச்சுக் கேட்டனான்... நாலரைதான் றேற், முதல் மறந்து போய்ச் சொல்லியாச்சாம்.. அதை அனுப்பி வைச்சால் கெதியில செய்யலாமாம்...
என்ன செய்யிறது? இன்னும் ஒண்டுதானே. அதையும் அனுப்பினால் காரியம் நடக்கும். அப்பன் ரெலிபோன் பண்ணினது காசு அனுப்ப வரச்சொல்லி. நான் இப்ப போறன். அனுப்புவம். நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். இனி சரி வரும்."

●

"நான் ஜெயா கதைக்கிறன், மாமாவோ!...."

"ஓம் நான்தான், என்ன நடந்தது?"

"அப்பையா ரெலி அடிச்சவன் தனக்கு கதைக்கச் சொல்லி, உடனே நான் அவன் நின்று கதைத்த ரெலிபோன் பூத் நம்பருக்கு அடித்து கதைச்சன். பாஸ்கரனுக்கு அம்மை நோயாம், ஒழுங்கான சாப்பாடு இல்லையாம். இருபத்தாறு பேருக்கு இரண்டு நீள பாணைக் கொடுத்தாங்களாம். ஏதன் கேட்டால் போலன்காறர் பொல்லைத் தூக்குறாங்களாம். நிலைமை மோசம், சில பெடியள் வெளிக்கிட்டு ஓடி போலன்ற் பொலிஸ் பிடித்து காம்பில வைத்திருக்கிறார்களாம்..... பாஸ்கரனுக்கு வருத்தம் அல்லாட்டி தானும் வெளிக்கிட்டு போடுவன் என்று அழுகிறான்... மாமா!"

"நீ என்ன சொன்னனி?"

"கொஞ்சம் பொறுமையாய் இருங்கோ, முழு காசும் கட்டியாச்சு.... நாலரை லட்சமடா... என்னை என்ன செய்ய சொல்கிறாய்? எண்டு நானும் அழுதன்...."

"என்ன செய்யிறது.... சரியாய்ப் பொறியில் மாட்டுப்பட்டுப்போனம். இன்னும் ஒரு கிழமை பாப்பம். சரிவராட்டி வேறை ஒழுங்கை பாக்கவேண்டியதுதான்...."

"கொம்மாவுக்கு கதைச்சனியோ?..."

"ஓம் மாமா அவவும், அன்ரியும் அங்கே அழுதபடி. ஏஜென்சியை கண்டவையாம்.... பயணம் என்றால் அப்படித்தான், உங்கட அவசரத்துக்கு ஒண்டும் செய்யேலாது.... இப்ப அந்த நாட்டில் குளிர்... பொலிஸ் பிரச்சனை.... காசு வாங்கினாங்கள் அனுப்புவம்தானே, அடிக்கடி வந்து கரைச்சல் தர வேண்டாம் எண்டானாம்....
இனி அவங்களோட கனக்கக்கதைச்சால் வேற ஏதேன் பிரச்சினையள் வருமெண்டும் அம்மா பயப்பிடுகிறா அவவுக்கு நம்பிக்கையில்லை"

"சரி, சரி பொறுத்தனாங்கள் இன்னும் ஒரு கிழமை பாப்பம்"

●

"கலோ நாகராசாவுக்குக் கதைக்கலாமோ"

"நான் நாகராசாதான் கதைக்கறன், யார் நீங்கள்?"

"நான் லோகனின் சித்தப்பா!"

"அ... சொல்லுங்கோ, குரல் விளங்கேல்லை....."

"என்னத்தைச் சொல்ல, உமக்கு தெரிஞ்ச விஷயம்தானே! நாலு மாசத்துக்குமேல், நாலரை லட்சம் கொடுத்து அந்த பெடியள் இரண்டும் சாப்பாடு இல்லாமல் கஸ்டப்படுதுகளாம்.... இது உங்களுக்கு அழகா?"

"நான் என்ன செய்ய பாருங்கோ!.... அப்பன் கேட்டார் தம்பியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூப்பிட ஏஜென்சி தேவை என்று, நான் உதவி செய்தனான் ஒழிய இப்படி இவங்கள் செய்வாங்கள் என்று யார் கண்டது?....”

“என்ன நாகராசா இப்படி கதைக்கிறீர்? ஏஜென்சி உம்மட மச்சான். எல்லாம் ஒழுங்காய் நடக்கும். நாங்கள் யோசியாமல் பணம் அனுப்பலாம். பொறுப்பு நீர் எண்டெல்லாம் சொல்லி நீரும் நிண்டுதானே காசுகள் அனுப்பினது. இப்ப இப்படி சொல்லுறீரே?....”

“ஆர் சொன்னது மச்சான் எண்டு, அவர் தூரத்துச் சொந்தம். ஐயா அவங்களோடு கடுமையா கதைக்கவுமேலாது. இனி உங்கடையாட்கள் பொம்பளையள் அதுகளுக்கு பிரச்சனை வந்தால் என்ன செய்யிறது? முள்ளில் சீலையை மாட்டினால் மெள்ளதானே கழட்ட வேண்டும். உங்களுக்கு விளங்கவேணும்....”

“ஓம் ஓம் விளங்குது! நாங்கள் முள்ளில் இருந்து சீலையை மெள்ளமாய் கழட்டறம், எல்லாம் நன்மைக்குத்தான்”

●

“மாமா நான் ஜெயா....”

“ஓம் சொல்லு!”

“அப்பையாவும், பாஸ்கரனும் கியூவில் இருந்து வெளிகிட்டு வந்திட்டினம்”

“என்னவாம், என்ன நடந்ததாம்?”

“போலன் ஏஜென்சிகாறன் கண்டபடி எல்லாருக்கும் அடிக்கிறானாம். பசிக்குது எண்டு அழுதால் பொல்லால அடிக்கிறானாம். அங்க இருந்த பொம்பிள ஒண்டுக்கு மனிசி அழுது கொண்டு இருக்க பொல்லால அடிச்சானாம். உடன அப்பையா திருப்பி போலன்ற்காரனுக்கு அடிக்க பெரிய கலவரமாய்போச்சாம். பிறகு அவன் பயத்தில பாஸ்கரனையும் கூட்டிக்கொண்டு ஓடிப்போய் பொலிஸில பிடிபட்டு இப்ப பொலிஸ்காம்ல இருக்கிறானாம்.”

“கடவுளே இது என்ன சோதனையடா?

“அங்க சிலவேளை திருப்பிஅனுப்பினாலும் அனுப்பிப்போடுவாங்களாம்”

“இனி யோசிக்கேலாது. வேறவழியைப்பாப்பம்”

“மாமா ஜேர்மனில ஒராள் இருக்கிறானாம். ஜேர்மனிக்கு கூட்டி வந்தபிறகுதான் காசாம்”


“கதைச்சுப்பாரன். கவனமா கதை.”

“சரி மாமா. நீங்களும் ஆரையும் விசாரியுங்கோ”

●

“கலோ! நான் இஞ்ச பிரான்ஸில இருந்து பேசிறன். என்ர தம்பியும், மைச்சானும் போலன்ரி வந்து............”

●



....... 20 ம் பக்கத் தொடர்ச்சி......

## . . . மைசூர் ராசா . . .

முட்டுச்சந்துக்குள்ளேயோ, அழுகி நாற்றமெடுத்துப் போன கொம்பிரதோர் அரசுகளுக்குள்ளேயோ, தொழிற்சங்கவாத அலுகோசு தலைமைகளுக்கு கீழையோ நீர் உமக்கான பருப்பை வென்றெடுத்துவிட முடியாது. சோவியத்யூனியன், பல்கன் உடைவுகளைப்பற்றிய பாடங்களை கவனமாக உள்ளீர்த்துக்கொண்டு உம்முடைய வர்க்கத்தோழர்களோட சர்வதேச அளவில ஐக்கியம் கொண்டால் மட்டுமே, ஏகாபத்தியத்தாலும், மல்ரிநஷனல் கொம்பனிகளாலும், குட்டிமுதலாளித்துவ ரடிகல்களாலும் ஆகாயத்துக்கு அனுப்பப்பட்ட பருப்பை கீழே இறக்கிற வரலாற்றுக்கடமையை நீர் பூர்த்திசெய்ய முடியும்.'

ஒரு நூறுவருஷ வரலாற்றையும் படிச்சு சொந்தமா ஒரு கட்சியும் கட்டினால்தான் அவர் மைசூர்பருப்பை கண்ணிலையே காட்டுவார் போலப்பட்டதால் சலித்துப்போன மைசூர்ராசா 'இப்ப உடன பருப்பின்ர விலையைக்குறைக்க ஒரு ஐடியா சொல்லுங்கோ? என்று கேட்டான். அவர் 'எங்களுக்கு 'மஜிக்' தெரியாது' என்று சொல்லி ஒரே அடியில் மைசூர்ராசாவை 'நொக்கவுட்' பண்ணிவிட்டு வீதியால்வந்த இன்னொரு இளைஞனை கலைத்து மறித்துப்பிடித்து, அவனை தன்முகத்தை பார்க்க விட்டுவிட்டு இவர் அண்டவெளியை பார்த்துக்கொண்டு பேசத்துடங்கினார்.

இப்ப என்ன பிரச்சனை என்றால் மைசூர்ராசா இன்னும் நடுச்சந்தியில் நின்று ஆகாசத்தில்போய் ஒட்டிக்கொண்டிருக்கும் மைசூர்பருப்பை வெறித்துப் பார்த்துக்கொண்டேயிருக்கிறான். ஏன் நீங்களும்கூட விடாமல் ஆகாசத்தை வெறித்துப்பாரப்பவர்களாக இருக்கக்கூடும். நடுச்சந்தியில் நின்று ஏசுநாதர் படாதபாடுகளை மைசூர்ராசா பட்டுக்கொண்டிருப்பதை நீங்களும் கண்டிருக்கிறீர்கள். உங்களுக்கும் இப்போது ஏதாவது 'ஐடியா' தோன்றியிருக்கக்கூடும் வந்து மைசூர்ராசாவுடன் சேர்ந்து ஒருகை பிடியுங்களேன். ஆகாசத்தை பூமிக்கு இறக்கிவிடலாம். ◆


www.tamilarangam.net

# மலர்வு

சிவலிங்கம் சிவபாலன்

வழமைபோலவே அன்றும் அவர்கள் வீட்டுக்கு பொலிஸார் வந்துவிட்டனர். 'வோக்கி ரோக்கி' யில் அவர்களது பாசையில் ஏதோவெல்லாம் பேசுகிறார்கள். எதுவும் எங்களுக்குப் புரியவில்லை. கதவு திறந்திருந்தது. உள்ளே ஒருசில பொலிஸாரும், வெளியே ஒருசில பொலிஸாரும் எதைப் பற்றியோ உரத்துக் கதைத்த வண்ணமிருந்தார்கள். இதைப்பற்றி நாங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இது நடைபெறுவது இங்கு சாதாரணம். என்றாலும் விடுப்புப் பார்ப்பதில் குறைவிடுவதில்லை. கதவின் கண்ணாடித் துவாரமூடே பல நிமிடங்கள் தொடர்ந்து நின்று கழுத்து வலித்ததுதான் மிச்சம். என்ன நடைபெற்றது. என்ன நடைபெற்றதென்பது இறுதிவரை தெரியவில்லை. ஏதோ ஒரு ஊகத்தின் அடிப்படையில் விட்டுவிட்டேன்.

அவர்கள் ஆபிரிக்காவில் 'கானா' தேசத்தவர் என்பது தெரியும். இந்த வீட்டிற்கு வந்து ஐந்து வருடங்களாகிறது. அவர்களைப்பற்றி அதிகம் தெரியாதவர்கள் நாங்களாகத்தானிருக்கும். எங்கள் வீட்டிற்கு அருகில்தான் அவர்களுடைய வீடு. எதிரில் பிரஞ்சுக்காரர், அதுக்கு அடுத்த படியாக ஒரு அரைக்கறுவல். 'மாட்டினிக்' நாட்டவர் யாரைக் கண்டாலும் காலை வணக்கம், ஒரு சிரிப்பு, ஒரு தலையாட்டு அவ்வளவுதான். மேலே பேசவும் தெரியாது, பேசினால் விளங்கவும் மாட்டுது.



எங்கள் மூன்றாம் மாடியில் அந்தக் கட்டடத்தொகுதியின் பன்னிரெண்டு மாடிகளிலும் 'கானா'க்காரி 'மௌலிவான் தீயோ' (Maffulivevan deue) வைப்பற்றி யாவரும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர் என்பது எங்களுக்கு போகப்போகத்தான் தெரிந்தது. இவ்வளவு ஒரு வசதியானவீடு குறைந்த வாடகையில் எங்களுக்கு கிடைத்தது ஏன் என்பது பின்னர்தான் தெரிந்தது. அடுத்த வீட்டுக்காரி 'தியோ' அதுதான் 'கானா'காரிதான் காரணமென்பது.

இவளது வீட்டுக்கு அருகில் இவ்வளவு காலமும் தொடர்ந்து குடியிருப்பதென்றால் நாங்கள் எவ்வளவு பொறுமைசாலியாக இருக்கவேண்டும் என்பது நான் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. எங்கள் தலைக்குமேல் விழவிருந்த எத்தனையோ பிரச்சனைகளை நாங்கள் பொறுமையாகவே தாங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த வீட்டை விட்டுவிட்டு வேறு இடத்துக்கு குடிபெயருவதென்பது என்னைப் பொறுத்தவரை முடியவே முடியாத காரியம். இந்த வீடு கிடைத்ததே பெருங்காரியம்.

ஒழுங்கான விசா இல்லை, ஒழுங்கான வேலையில்லை, இப்படியே ஒழுங்கான.................. என்று எண்ணிக்கொண்டே போகலாம். சுருக்கமாகவே அவளை 'கறுப்பி' என்று மட்டுமே எங்களுக்க நாங்கள் கதைத்துக் கொள்ளுவம். அவளுக்கு முன்னால் அல்ல. அவர்களுக்கு இப்போ அனேக அசிங்கத்தமிழ் வார்த்தைகள் தெரியும். நாங்கள் அவர்களை 'கறுவல்கள்' என்கிறோம் என்பதுவும் புரியும். இவளுடைய ஒரு புருஷன், அதாவது இந்த 'ஒரு' என்பதன் பொருள் பின்னர் விளங்கும். நேரடியாகவே என்னைக் கேட்டுவிட்டான். தங்களது நிறத்தை வைத்தே நாங்கள் தங்களை அழைப்பதாக. எனக்கு இதைக் கேள்விப்பட்டதும் தூக்கிவாரிப் போய்விட்டது. ஒருவாறு சமாளித்து விட்டேன். அதன்பின் அதுபற்றிய பேச்சு எடுப்பதையே அவன் விட்டுவிட்டான் என்றே தோன்றியது.

எங்கள் வீட்டிற்கு வருபவர்கள் யாராயிருந்தாலும் முதலில் ஒரு அரைமணி நேரம் வரையில் மூச்சு எடுக்க மாட்டார்கள். வந்ததும் முதல் வேலையாக சுகம் விசாரிக்கிறார்களோ இல்லையோ 'பக்கத்து வீடு கறுவலா?' என்று கேக்க தயங்குவதில்லை. 'எப்படி இந்த வீட்டுக்கை இருக்கிறியள்?' போன்றவற்றில் இருந்து அனேக கேள்விகள் அடுத்த வீட்டுக்காரனைப்பற்றி. வேறு வழியில்லை நாங்களும் வந்தவர்களுடனையே சேர்ந்து பாடி எங்கள் ஊத்தைகளை மறைத்துவிடுவோம்.

மூன்றாவது மகள் என்றபடியால், எனது மனைவிக்கு சரியான சந்தோஷம். முன்னான இரண்டும் பெடியள். நட்டுவக்காலிகள், அண்ணனைப் பார்த்து தம்பி செய்யும் அட்டூழியங்களுக்கு குறைவில்லை. அவர்களது கைவரிசைகள் அடுப்படி, படுக்கையறை, கழிவறையீறாக என்னைப்பார்த்து சிரிக்கும். மனைவியோ முதலில் கெஞ்சிப் பார்த்தாள், சொல்லிப்பார்த்தாள், விரட்டிப்பார்த்தாள், அடித்துப்பார்த்தாள் நொருக்கிப்பார்த்தாள் எதுவித பலனுமில்லை. இனிச் செய்வதாக இருந்தால் இரண்டு கால்களிலும் பிடித்துத்தூக்கி நிலத்தில் ஒரு அடி அடிக்க வேண்டியதுதான். அருவிவெட்டி சூடு அடிப்பதுபோல. அது முடியாத காரியம்.

கறுப்பிக்கு குடும்ப அங்கத்தவர் அதிகம். இந்த ஐந்து வருட எங்கள் வாழ்க்கையில் அவள் கர்ப்பிணியாக இருந்த கோலத்தை பார்த்திருக்கிறோம். அதுஒரு இயந்திரம். பிள்ளை பெறுவதற்காகவென மருத்துவமனைக்கு போவது தெரியும் அடுத்தநாள் விடிய பிள்ளையை கொண்டு வீட்டுக்கு வந்துவிடுவாள். பிள்ளை இரவுபகலாக கத்தும், கூடவே அவளும் இரவுபகலாக கத்துவாள். அவளுக்கு எல்லாமாக எத்தனை பிள்ளைகள் என்று அறிய முற்பட்டோம் முடியவில்லை. ஆணோ பெண்ணோ எல்லாம் ஒரே மாதிரியாக இருக்கும், ஒரே அளவாக இருக்கும். ஏறத்தாள எட்டு இருக்கும் என எண்ணிக்கொள்வோம். சமாதானப் பட்டுகொள்ளுவோம். அந்த எட்டிலும் எட்டல்ல எண்பது குணங்கள் இருக்கும். வலிய வந்து மோதுங்கள். எங்களையே ஏசிவிட்டுப் போகுங்கள். மீறிப்பார்த்தால் எல்லாம் சேர்ந்து நின்று நாக்கை நீட்டி துப்பி, கண்டகண்ட வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்து கைச்செய்கையால் பலவற்றை எல்லாம் துரிதமாக விளங்கிக் கொள்ளக்கூடிய அபாரசக்தி அதுகளிடம்.

பிள்ளைகள் எதாவது விளையாட்டுப் பொருட்களையோ, தொப்பி, தின்பண்டங்களை வெளியே கொண்டுபோனால் போதும், கருடனின் பார்வை கொண்டவர்கள் பற்றிவிடுவார்கள். தங்களுக்குள்ளேயே தினமும் அடிபிடி. சத்தம், காயம், இரத்தப்பெருக்கம். இவர்களுடைய இப்பேற்பட்ட நடவடிக்கைகளினால் நானோ, மனைவி பிள்ளைகளோ.... ஏன் மற்றவர்களோ இவர்களுடன் பழகுவதில்லை. காணும்போது வணக்கம் சொல்வதுடன் நிறுத்திக்கொள்வது. எம் பிள்ளைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களுடன் சேரவிடுவதில்லை.

இரவு ஒரு மணிவரையிலும் தூங்க மாட்டார்கள். விளக்கு எரிந்த வண்ணம் இருக்கும். சமையலறையிலிருந்து விபரிக்க முடியாத அளவு நாற்றம் வெளிவரும். அவர்களது சமையலறை யன்னல் கதவும், எங்களது யன்னல் கதவுக்கும் ஒரு முழம்கூட வித்தியாசம் வராது. அவர்களது சமையல் அறையின் புகையில் அரைவாசி எங்கள் சமையலறையினுள் அத்துமீறிக் குடியேறும்.

எங்கள் வீட்டு மீன்பொரியல் மணத்தைக் கலைக்கவே நாங்கள் யன்னலைத் திறந்து விடுகிறோம் என்பது எங்களுக்கு மட்டுமே தெரியும். 'நிண்ட வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டுபோய் விட்டது. ' என்று கேள்விப் பட்டிருக்கிறோம் இது 'நிண்ட புகையுடன் வந்த புகையும் சேர்ந்து நிண்டு நாத்திச்சுது' என்ற மாதிரியான நிலை. குறைந்த பட்சம் அரைப்பன்றி வாங்கித்தான் சமைப்பாள். மீனாக இருந்தால்அரை மீற்றர்படி இரண்டு மீன்கள் வாங்கிக் கொண்டு வருவாள். தினமும் நாலாஞ்சடங்குச் சமையல்தான்.

எங்கள் வீட்டிற்கு வருபவர்கள், தொடர்மாடி வாயிலிலேயே மோப்பம் பிடித்து அறிந்து கொள்வார்கள். இந்த மீன்அவியல், பருப்பு அவியல் பெருஞ்சீரகத்துள், எங்க வீட்டு வாசனையைத்தான் இந்த வாடைக்காற்று அள்ளி வருகின்றதென, மேலே ஏறிவரும் போதுதான் மிகுதியை உணர்ந்து, அனுபவித்துக் கொள்வார்கள். அருவருத்துக் கொள்வார்கள்.

**மேற்படி கறுப்பியைக் கண்டாலே எனது மனைவிக்கு வயிற்றைக் குமட்டும். எற்கனவே தினமும் வயிற்றைக் குமட்டிக் கொள்வாள்........ இவளுடைய நிறத்தையும் கூடவே வரும் வாசனையையும் அனுபவிக்காதவர்களுக்கு சொல்லி விளக்க முடியாது.**

மேற்படி கறுப்பியைக் கண்டாலே எனது மனைவிக்கு வயிற்றைக் குமட்டும். எற்கனவே தினமும் வயிற்றைக் குமட்டிக் கொள்வாள்........ இவளுடைய நிறத்தையும் கூடவே வரும் வாசனையையும் அனுபவிக்காதவர்களுக்கு சொல்லி விளக்க முடியாது. இருந்தாலும் அவளுடைய கண், புருவம் தாடை முதலிய எடுப்பான அளவுதோற்றம் அனேகரை அவளின்பால் அடங்க வைத்தது என்பதுதான் உண்மை. நான்கூட என் மனைவியிடம் கூறுவதுண்டு. 'சிலிப்பிக் காயச்ச இந்த மரம் இப்பவும் இப்படியெண்டால்...... ஒரு இருவது இருபத்தொண்டிலே எப்படி இருந்திருப்பாள்...! ' பத்திரகாளிபோல மாறுவாள் என் மனைவி. பின் அடங்கி விடுவாள். உலகத்திலே கறுப்பியளும் உலக அழகிகளாக வந்திருக்கிறளவை தானே. எனக்குள் ஒரு சமாதானம். அவளுடைய வெளியரங்கை இன்னும் அலங்கரிக்கலாம்.

எனது மனைவிக்கும் 'மாட்டினிக்' காறிக்கும் இடையே உறவு சுமூகநிலை. காரணம் அவள் நல்ல அழகி என்பது மட்டுமல்ல, எங்களுடன் அவள் பேசுவது புரியாவிட்டாலும், நல்ல அந்நியோன்யமாக பழக எத்தனிப்பதாலும் மட்டுமல்ல சிலதடவைகள் எனது மனைவியை அழைத்து காது கழுத்தில் உள்ளவைகள் பற்றியும் அணிந்திருக்கும் 'பஞ்சாபி கிற்' பற்றியும் அறிந்ததோடு நில்லாமல் மேலும் ஒருபடி மேலேபோய் 'நீ நல்ல அழகாயிருக்கிறாய்...... நீ எது அணிந்தாலும்.....' இந்த வார்த்தைகளுக்காகவே அவளுக்கு இவள், அதுதான் என் துணைவி தோசையும் சம்பலும், இடியப்பமும் சொதியும், இட்டலியும் சாம்பாரும் மட்டுமல்லாமல், கடலைவடை, உழுந்துவடை, கட்லற் என்ற ஏராள தின் பண்டங்களைத் தின்னக் கொடுத்திருப்பாள். அவளும் நன்றி மறவாதவள். நன்றிக் கடனாக மேற்படி கறுப்பியினுடைய உள்ளந்தரங்கம், எங்கள் வீட்டில் நாங்கள் வரமுதல் நடைபெற்ற திருகுதாளங்கள் காதல்லீலைகள் முதற்கொண்டு தனது பழைய இனிய நினைவுகளையெல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லித் தொலைத்திருந்தாள்.

நித்திரைவராத புழுக்க இரவெல்லாம் எனது துணைவி இதையே இடித்து இடித்து உரைப்பாள். வேறு வழியில்லை நானும் கேட்டுத்தான் ஆகவேண்டும். சுவராஸ்சியமாகவும் இருக்கும். கேட்காவிட்டாலும் பிரச்சனை. ரெலிபோனைத் தூக்கினாளென்றால் மணித்தியாலக் கணக்காக யாருக்காவது ஆலாபனை செய்வாள். சில சம்பவங்கள் கூடிக்கொள்ளும், குறைந்து கொள்ளாது. மாதம்முடிய ரெலிபோன் பில் வரும்போதுதான் சத்தம் போடுவாள். 'நீங்கள்தான்....... ரெலிபோனில அலட்டுனீங்கள்.... காசைக் கட்டுங்கோ' நான்தான் கட்டியும் ஆகவேண்டும். ஆற்றையோ கதையளை, ஆருக்கோ சொல்ல ஆரோ ரெலிபோன் காசு கட்டவேண்டியிருக்கு. இதை ஆருக்கு போய்ச்சொல்ல...?

'மாட்டினிக்'காரி சொல்லிய செய்தியின்படி மேற்படி கறுப்பிக்கு இப்ப வந்து போறவனுடன் நாலு புருஷன். அதாவது கணவன். இதென்ன ஊரில உலகத்தில நடக்காததா? முதலாவது புருஷன், எங்கே என்று என்னவள் கேட்காமலா விட்டிருப்பாள். கேட்டாள் தான். முதலாவது புருஷன் விபத்தொன்றில் இறந்துவிட்டானாம். இரண்டாவது புருஷன் இவளது கொடுமை தாங்காமலோ என்னவோ இவளை அம்போ என்று விட்டுவிட்டு போய்விட்டானாம். அவனைப்பற்றிய தகவல் ஒன்றும் இல்லை. அடுத்தவனும் மற்றவர்களைப் போலவே வாழ்வுத் தடம்பதித்துக் கொண்டிருந்தவேளை இவளே அவனை விரட்டிவிட்டாளாம். மூவருக்குமாகப் பிறந்தவர்களைத்தான் இவள் வளர்க்கிறாள் எத்தனை பேர் என்பது, இந்த விபரத்தை சொன்னவளாலும் சரியாக சொல்ல முடியவில்லை. நாங்கள் எண்ணிப்பார்த்தும் சரிபார்த்துக் கொள்ள முடியவில்லை.

அடிக்கடி பொலிஸ் வரும் சங்கதி இவளுக்குப் புரியவில்லை. ஒருவேளை அந்த மாடிவீட்டில இருப்பவர்கள் இவர்களது தொந்தரவு தாங்க முடியாமல் பொலிஸாருடன் தொடர்பு கொள்கிறார்களோ, அவர்கள் வந்து இவர்களை எச்சரிக்கை செய்துவிட்டு போகிறார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. மருத்துவரின் ஆலோசனைப்படிதான் என் துணைவியும் நடந்து கொள்கிறாள். ஓய்வு, சாப்பாடு என்று எதிலும் கவனம். இதுதவிர உறவினர் நண்பர்களென்றும் தொலைபேசியூடே சுகப்பிரசவத்துக்கான ஆலோசனைகளையும் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். எனவே பிள்ளைகள் இருவரையும் நான்தான் கவனித்துக்கொண்டே வந்தேன். இரவிலும் அவர்கள் என்னுடனையே தூங்குவார்கள், விழிப்பார்கள், உதைவார்கள், கனவுகண்டு கத்துவார்கள். நான் சிவராத்திரியாக இருந்த நாட்களும் உண்டு.

கறுப்பி என் துணைவியைக் கண்டால் வணக்கம் சொல்லுவாள், எத்தனை மாதம் என்று கேட்பாள், எதாவது உதவிகள் தேவையா என்றெல்லாம் கேட்பாள். ஒற்றைவரியில் பதில் சொல்லிவிட்டு போய்விடுவாள் என் துணைவி. நான்தான் வேறு வழியில்லாமல் கறுப்பியுடன் ஏதாவது சமாளித்துக் கதைப்பேன். எனது நிலை அவளுக்கு நன்கு தெரியும்.

நான் வீட்டுக்கு வரும்வரை கதவுத் துவாரத்தினூடே பார்த்துக்கொண்டேயிருப்பாள் என் துணைவி. வந்ததும் துள்ளி விழுவாள். 'அவளோட என்ன கதை உங்களுக்கு?' இதில் தொடங்கி அவளுடைய அந்தரங்கங்களை எல்லாம் சொல்லி அர்ச்சிப்பாள். 'சரி...சரி... விடு.... அவள் கேட்டதுக்குத்தானே நான் பதில் சொன்னனான்...... அவளோட வரப்போறேன் எண்டே நிண்டனான். ' ஒருவாறு சொல்லிச் சமாளிப்பேன்.

அவளுடைய கண், புருவங்களைப்பற்றி இவளுக்குச் சொன்னதுதான் இவளுக்கு என்மீது சந்தேகம் வரக் காரணமாயிருந்தது. 'எத்தினை புருஷன் புடிச்சுப்போட்டாள்........ அவளோட போய்......' நான் எதுவும் தொடர்ந்து பேசுவதில்லை. ஒருவாறு முடிவுக்கு கொண்டு வந்துவிடுவேன். கறுப்பி சண்டை பிடிக்கும்போதும், பிள்ளைகளை போட்டு மிதிக்கும்போதும் இந்தக் கட்டிடமே தகர்வதுபோல இருக்கும். பின்னர் மருத்துவமனை இளைபோடப்பட்ட உடல்களாகவும், கால்வைக்க முடியாமல் பிள்ளைகள் தடியை ஊன்றியபடி நடக்கும் காட்சிகள் என்றும் ஏராளம்.

வீட்டில் ஓய்வான வேளைகளில் தொலைக்காட்சி போட்டுவிட்டால் போதும் சோமாலியா, எதியோப்பியா, ருவண்டா, கொங்கோ போன்ற ஆபிரிக்க நாடுகளும், அங்கு நடைபெறும் சில்லெடுப்புகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீ.என்.என். (C.N.N.) தெட்டத்தெளிவாக காட்டும். தட்டித்தவறி சாப்பிடும் போது மட்டும் தொலைக்காட்சி செய்தி போடுவதேயில்லை. மனைவி அமாவாசை, பறுவம் அட்டமி நவமி என்று கனத்த நாட்களை கலண்டரில் பார்த்த வண்ணமேயிருப்பாள். தெரிந்தோ தெரியாமலோ தொலைக்காட்சியை பார்த்து விட்டால் போதும் கூடவே கறுப்பியையும் சேர்த்துவிடுவாள்.

'உங்களுக்கு அந்த நாடுகள்தான் சரி' ஒருநாள் ருவண்டா பிரச்சனையின்போது உயிருடன் ஒருவரைக் கொண்டுவந்து இரண்டு கைகளும் பின்னே கட்டப்பட்ட நிலையில் பதின்மூன்று(13) பேர் சேர்ந்துநின்று பாரங்கல்லொன்றினால் அவன் தலையை பச்சடிபோட....... உதைப்பார்த்து நாங்கள் பட்டபாடு. இதே போலவே சில நாட்களுக்குள்ளாகவே ஐந்து லட்சம் மக்களை வெட்டிக்கொலை செய்த கோரக்காட்சி, உடல் அழுகிய நிலையிலும் உடல்பருமன் பெருத்து ஈ மொய்த்த காட்சிகளுமாக...... அவற்றை நினைக்கும்போது, 'ஈன இரக்கமற்ற சாதியள்...... உதுகளோடபோய் சாவகாசம் வைக்கக்கூடாது.' 'எல்லோரையும் அப்படிச் சொல்லேலுமோ' கருடன் பார்ப்பதுபோல என்னைப் பார்த்தாள். நான் வழக்கம் போலவே அடங்கிவிட்டேன்.

கதவை பலமாகத் தட்டுவார்கள் எனக்குத்தெரியும் இவர்கள் தானென்பது. திறந்து பார்த்தால் கதவைச் சுற்றி கூட்டமாக நிற்பார்கள். திடீர் சுற்றிவளைப்புப்போல, இனிப்புத் தின்பண்டங்கள் கொடுக்க வேண்டும். கொடுத்துத்தான் ஆகவேண்டும். இல்லையேல் வீட்டுக்கதவு நாறும், துப்புவார்கள் மட்டுமல்ல, நாங்கள் இல்லாத நேரம்பார்த்து வரிசையாய் நின்று மனிதசல அபிசேகம் செய்துவிட்டிருப்பார்கள். இதைவிட எதையாவது கொடுத்துத் தொலைத்து விடுவது, கதவைக் காப்பாற்றிக் கொள்வதைத்தவிர எனக்கு வேறெதுவும் செய்யத் தோன்றாது. சுவர்கள் தினமும் அழகான வாசகங்களைத்தான் தாங்கி நிற்கும். இதுவும் இவர்களின் கைவரிசைகளில் ஒன்று.



மருத்துவர் சொல்லிய திகதிக்கு பத்து பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே பிரசவமாகும் என யாவரும் சொல்லியிருந்தார்கள். அதன்படியே நானும் சற்று தொலைவிலுள்ள எனது உறவினர் குடும்பத்தினரிடம் எனது பிள்ளைகள் இருவரையும் பார்த்துக் கொள்ளும்படி கேட்டிருந்தேன். இவர்கள் இருவரது குழப்படிகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்திருந்தும் இவர்களை சிலகாலம் பராமரிக்க ஒப்புக் கொண்டிருந்தனர். குறித்த திகதியில் நான் இவர்களை அங்கு கொண்டுபோய் சேர்ப்பிப்பதாகவும் தெரிவித்திருந்தேன். துணைவியும் துணிவுடன் தான் இருந்தாள்.

மற்றவர்கள் சொல்லியபடியே பன்னிரெண்டு நாட்களுக்கு முன்னர் மனைவி துடித்தாள். மருத்துவமனையும் அதிக தூரத்திலில்லை. நடந்தே போய்விடலாம். வீட்டின் எதிர்ப் பக்கத்திலேயே வாடகைக்கார்கள் ஏராளம். தேவையானவற்றை பெற்றுக் கொள்ளலாம். ஒருவண்டியில் ஏற்றி பிள்ளைகளை உறவினர் வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு, இவளை மருத்துவ மனையில் அனுமதிப்பதென முடிவெடுத்தேன். எல்லாம் கணநேர ஏற்பாடு.

மனைவி சகுனம் பார்ப்பதில் நல்ல தேர்ச்சியுடையவள். பிராமணன் எதிரேவந்தால், பெண்பிள்ளை எதிரேவந்தால், வெறும்குடம் எதிரேவந்தால், மரம் வெட்டுகிறவன் எதிரேவந்தால்........... இப்படியே அடுக்கிகொண்டே போவாள். எல்லாத்துக்கும் பஞ்சாங்கத்தை பாராமலே பலன் சொல்லக் கூடியவள். இடுப்புவலி இறுக்கிக் கொண்டபோதும் கூட 'கறுப்பியில முழிக்காமல் போகவேணும்' என்று அடம் பிடித்துக்கொண்டாள். ஏற்கனவே அறுவைச்சிகிச்சை கறுப்பியில் முழித்தால் இதுவும் அறுவையாகிப் போய்விடுமோ என்றுதான் இவள் பயப்படுகிறாள் என்பது தெரியும்.

உறவினர்களுக்கு விபரம் தெரியப்படுத்தப்பட்டது. வாடகைக்கார் கட்டிடப் பகுதியின் கீழ்பகுதியில் வந்து நின்றது. யாவருக்கும் உடுப்புகள்கூட மாற்ற முடியாத நிலை. நான் மட்டும் என்னை சாறத்திலிருந்து விடுவித்துக்கொண்டு, கசங்கிய வெளிறிய கால்சட்டைக்குள் என்னைத் திணித்துக்கொண்டு மருத்துவமனை கொண்டு வரச்சொல்லிய அனைத்துப் பொருட்களுடன் பிள்ளைகள் இருவரையும் பிடித்துக்கொண்டு, மனைவியை எனது தோள்களில் பிடித்துவரும்படி வேண்டிக் கொண்டேன்.

வீட்டில் சாமி அறையென்றில்லை, ஆனால் அது எங்களுக்கு சாமியறைதான். அங்கே வைக்கப் பட்டிருந்த சுவாமிப்படங்களை, தீபாவளி பொங்கல், புதுவருட முருகன், கிருஷ்ணர், பிள்ளையார் படங்கள் உட்பட மாதா சிலுவைகள் என்று யாவற்றையும் தொட்டு மனமுருகி வேண்டிக் கொண்டாள். வீட்டின் கீழ்பாகத்தில் வாடகைக்கார் நின்று கொண்டிருந்தது. அதன் மீற்றர் வேறு ஓடிக் கொண்டிருந்தது. தேவையான பொருட்களுடன் கூடவே எனது விசாவையும் ஒருமுறை சரிபார்த்துக் கொண்டேன். மனைவியை வரும்படி வற்புறுத்தினேன். வந்தாள். 'சோறு கறியெல்லாம் கிடக்கு...... போட்டுச் சாப்பிடுங்கோ...... கதவை வடிவாப் பூட்டுங்கோ...... கறுவல்கள் வாரநேரம் பாத்து வெளியால போகதேங்கோ.......' போன்ற ஊரிப்பட்ட வேண்டுதல்கள் என்னிடம்.

ஒவ்வொரு படியாக கறுப்பி மூன்றாம்மாடிக்கு ஏறிவருகிறாள் என்பது தெரிந்தது. அவளுடைய நடையை வைத்தே அவளைக்கண்டு கொள்ளலாம். அவளில்தான் முழிக்கப்போகிறோம் என்பது முடிவாகிவிட்டநிலை. எனது நடையை தாமதமாக்கிவிட்டாள் என் மனைவி. முழுவியளம், எதிரே வந்துவிடாள் கறுப்பி. ஒருகையில் பொலித்தீன்பையில் மரக்கறிகள், மற்றக்கையில் பெரிய பொலித்தீன்பை ஒன்றில் மூன்று செத்த முயல்கள். பூனையைப்போல கண்கள் மினிங்கிக் கொண்டிருந்தது.

கொண்டுவந்த பொருட்களை அப்படியே இறக்கி வைத்துவிட்டு அவளது பாசையில் 'மருத்துவமனைக்கா...? ' என்ற தொனியில் கேட்டாள். 'ஆம்..' என்ற தொனியில் தலையை ஆட்டினேன். இவளில் முழித்தது போதாமல் பேச்சுவேறையோ என்ற விதமாக மனைவி என்னைப் பார்த்தாள். ஒருதாய் எச்சரிப்பது போலவோ என்னவோ எனது பிள்ளைகளைப் பிரித்து, பறித்துவிட்டு, எனது துணைவியைக் கையில்பிடித்து ஏதோவெல்லாம் மூச்சை உள்ளிழுத்து வெளியே விடுகிற மாதிரியெல்லாம் காண்பித்தாள். எனக்குச் சிரிப்பாக இருந்தது.

ஒருவேளை தனது, இதுபற்றிய தனது அனுபவங்களையெல்லாம் சொல்லிக் கொடுத்தாளோ என்னவோ. மனைவியின் வயிற்றையும் நாடியையும் தடவி எத்தனையோ ஆறுதல் வார்த்தைகள் எல்லாம் சொன்னாள். 'நீ ஒண்டுக்கும் பயப்படாதே..... இஞ்சைபார்....... நானும்தான் இருக்கிறேன்' என்று எதாவது சொன்னாளோ தெரியாது. எனது பிள்ளைகளை கடைசிவரை அவள் என்னிடம் தரவேயில்லை. அவர்களிடம் எனது பிள்ளைகளை விட்டுவருவதில் எனக்குக்கூட கடுகளவும் விருப்பமில்லை. வேறு வழியில்லை நான் ஒவ்வொரு படிப்படியாக இறங்கி மருத்துவமனையடைந்து, நித்திரையிழந்து 'சுகப்பிரசவம்' என்ற நல்லசேதி கேட்டது.

இருந்தாலும் பிள்ளைகள் இருவரையும் கிணற்றுக்கட்டில் விட்டுவந்ததாகவே எங்கள் மனது அரற்றிக்கொண்டது. 'பிள்ளையளை கவனமாப் பாப்பாள்' என்ற ஒருவித சமாதான். நாங்களே எங்களிடம் தெரிவித்துக் கொண்டிருந்தோம். பெடிச்சி, அவள்தான் இப்போ பிறந்தவள் வீரிட்டுக் கத்திக்கொண்டிருந்தாள். பசியென நினைத்து பாலைக் கொடுத்தாள் என் மனைவி. பாலைக்குடித்த தெம்பில் மேலும் வீரிட்டுக் கத்தினாள் மகள். வாய்க்குள்ள புரியாத ஒரு பெயரைச்சொல்லித் தேற்றினாள் மனைவி. இந்த வித்தையை பார்த்துக்கொண்ட போது தூர யன்னலூடே தெரிந்தாள் கறுப்பி. எனது இரண்டு பிள்ளைகளையும் இரண்டு கரங்களிலும், கூடவே கையில் ஏதோ சிறிய பார்சலுடன் நடந்து வந்து கொண்டிருக்கிறாள் 'தீயோ' அக்கா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ப் ர மை

மிக நீண்ட இடைவெளிக்குப்பின் இவனின் தரிசனம் வாய்த்திருக்கிறது. இங்கு வரக்கிடைக்கும் சந்தர்ப்பங்களை எல்லாம் இயல்பாகவே நிராகரித்து விடும் வழக்கத்தை சமீபத்தில்தான் தளர்த்தியிருந்தான்.

இவன் விட்டுப்பிரியும்போது இருந்த சூழல் பிரமாதமாய் சொல்லிக்கொள்ள எந்தமுன்னேற்றமும் தென்படவில்லை. ஆங்காங்கு மழைக்காலத்து காளான்களென வெள்ளைத் தீந்தை பூசிக்கொண்டு புதிய கட்டிடங்கள் சுருக்கம் விழுந்த விழிகளை இடுக்கிக்கொண்டு புதியதைப்பார்த்து பொருமிக்கொண்டிருப்பதாய்பட்டது இவனுக்கு.

வந்ததிலிருந்து பரிச்சயமற்ற முகங்களைத்தான் தரிசிக்க முடிந்தது. சிநேக பூர்வமாய் சிரித்து வைப்பதுடன் அவர்களுடனான தொடர்பை துண்டித்துவிடவே விரும்பினான். ஒட்டிக்கொண்டு பேசிக்கொண்டிருக்க எதுவும் இருப்பதாக தோணவில்லை. அப்படி உரையாட வாய்ப்புக்கிடைத்தால் 'கிரிக்கற' பற்றிய வர்ணனைக்குள் அவனை இழுத்துவரவே அவர்கள் முயற்சிப்பர். இவனுக்கு கணிசமாக எரிச்சலூட்டும் விளையாட்டுக்குறித்து மிகுந்த ஈடுபாட்டுடன் சம்பாஷிக்க அவன் விரும்புவதில்லை. அல்லது அவர்களின் துப்புத்துலக்கும் கேள்விகளுக்கெல்லாம் மிகுந்த மன உளைச்சலுடன் பதில் சொல்லியாக வேண்டும் என்ற அச்சமும்வேறு. எனினும் அந்தவீட்டில் தொடர்ந்தும் தரித்து நிற்க மனம் ஒப்பவில்லை.

நாளைய திருமணத்திற்கு இன்றே விழுந்தடித்துக் கொண்டு வந்திருக்கத்தேவையில்லை.அவர்கள் வற்புறுத்தி கடிதம் எழுதியதற்காக இப்படி தனியே கிடந்து தவிக்க நேரிடுகிறது என நொந்து கொண்டான். அப்படி வந்ததிற்கு ஒரு உள் நோக்கமும் இருந்தது. றினோவை சந்திக்கும் ஒரு சந்தர்ப்பத்தை வலிந்து ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நப்பாசையும் புறப்படும்போது இலேசாக நெருடிக்கொண்டிருந்தது. இங்கு வந்தபின்புதான் அது எத்தனை கடின முயற்சியென புரிந்துகொண்டான். 'றினோ அவனதுகாதலியாக நேற்றுவரைஇருந்தாள். நாளை அவளுக்குத் திருமணம். ஆனால் அவனுடன் அல்ல. இவனுக்கென்று இங்கு செய்வதற்கு வேலை ஏதும் காலி இருப்பதாகவும் தெரியவில்லை. எதையாவது தொடப்போனால் யாராவது தெரிந்தவர்கள் பாய்ந்து வந்து "ஐயையோ இதெல்லாம் நீங்கள் செய்யுறதா நாங்க எதுக்கு" என்ற கண்டிப்புடன் பிடுங்கிக்கொள்வதையும் சகித்துக்கொண்டு அங்குதொடர்ந்து நிற்கப்பிடிக்கவில்லை. எனவே இரண்டுவருடமாய்முங்கிக்குளித்ததாமரைக் குளத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.



ஓட்டமாவடி அறபாத்

படிக்கட்டில் எப்போதும் போல்சனங்கள் நிரம்பி வழிந்தனர். தாமரைப்பூக்கள் மிகுதமாய் பூத்துக்கிடந்தன. அதன்மேல் சிறுகுருவிகள் சாவகாசமாய் குந்திக்கொண்டு நீருக்குள் சொண்டுகளை செருகிக்கொண்டிருந்தன. அவற்றிக்குரிய மீன்குஞ்சு கள் இன்னும் வரவில்லைபோலும். இரண்டாம் படிக்கட்டை தாண்டுகையில் பழக்கதோசத்தால் திரும்பிப்பார்த்தான். பழையமுகங்களுடன் சில புதிய முகங்களும் குளித்துக்கொண்டிருந்தனர். அது பெண்களுக்கான படித்துறை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவனை அடையாளம் கண்டிருக்கவேண்டும். கும்மாளத்தை நிறுத்திவிட்டு அவர்கள் தங்களுக்குள் குசுகுசுப்பதைக்கேட்டான். அவர்களைக் கடந்தபின் தன்முதுகின்மேல் இளமையான விழிகள்மொய்ப்பதையும் உணர்ந்தான். அவர்களில் பெரும்பாலானோர் றினோவின் தோழிகள். அவர்களிற்சிலர் இவனுக்காக பரிதாபப்பட்டிருக்கவும் கூடும். இவனைக்கடந்து சிலர்குளித்துவிட்டுச்சென்றனர்.
ஈரக்கூந்தலை முதுகுக்குப்பின் உலறப்போட்டவாறு சென்றவர்கள் இவனைப்பார்த்து சிரித்துவிட்டுச்சென்றனர்.
"என்னகலியாணத்திற்கோ"
அவளின் நெருங்கிய சிகப்பி கேட்டுவைத்தாள்.
இவனுக்கு சுருக்கென்றது. மனம் இலேசாக வலிக்கத்தொடங்கிற்று.

மூன்றாம் படித்துறையில் போய்க்குந்திக்கொண்டான். இதில் ஒருவரும் குளிப்பதற்கு வரவில்லை. இவன் தற்கொலை செய்துகொண்ட படிக்கட்டு இதுவென கண்டபின் இங்கு ஒருவரும் குளிப்பதில்லையோ. அங்கிருந்தவாறே இரண்டாம்படிக்கட்டை பக்கவாட்டில்பார்த்தான். அவளின் பிம்பமே எழுந்து நின்றது. சிலசுந்தரிகள் குளித்துவிட்டு கரையேறிக்கொண்டிருந்தனர். ஒன்றிரண்டுபேர் முதுகுதேய்த்துக்கொண்டும் குறுக்குத் துண்டை அவிழ்த்து நீர் விட்டு தேய்த்துக்கொண்டிருப்பதையும் கண்டான். பிராவின் கொக்கிகளை எத்தனிக்கும் முதுகுப்புற அவஸ்தைகளும் படிக்கட்டில் அரங்றேிக்கொண்டிருந்தன. அந்த படித்-துறையில்தான் றினோவும் குளித்தாள். நேற்றும் குளித்துவிட்டு இந்த தாமரைக்குளத்திற்கும் எஞ்சிய இவன் நினைவுக்கும் சமாதி கட்டிவிட்டுச் சென்றிருப்பாள்.

பரந்த வெளியில் பச்சை புற்தரையில் தனித்துவிடப்பட்ட செம்மறியாடாய் மனம் குதியாட்டம் போடத்தொடங்கிற்று. அதன்ஆட்டம் இரண்டு வருடங்களை தாண்டிப்போய் அவளில் நிலைகுத்தி நின்றது. ஆறுமணியடிக்க அவள் இந்தக்குளத்துக்கு வந்து விடுவாள். அதற்கு முன்போ அல்லது சற்று பிந்தியோ மூன்றாம்துறைக்கு இவன் வந்திருப்பான். இரண்டிலிருந்து மூன்றுக்கு காதல் பார்வைகள் பரிமாறிக்கொள்வார்கள். பிரதானமாக விழியும் மௌனமும் ஊடகமாயிருந்தது. அவ்வாறும் பேசிக்கொள்ளாத இரு சந்தர்ப்பங்கள் வந்துதொலைத்தன. ஒன்று மழைக்காலம். இரண்டு பொதுத்தேர்தல் அசம்பாவிதங்களால் பிரகடனபடுத்தப்பட்ட ஊரடங்கு. இவ்விருகாலங்களில் மழைக்காலமே இவர்களது பிரதான எதிரி. எனவே அவள் வீட்டில் தொட்டியில் நீர் நிரப்பிக்குளித்துக்கொள்வாள்.

இவன் அறையை ஒட்டினாற்போற்தான் றினோவின் வீடிருந்தது. மாலையில் அவள் முற்றத்து ஜே மரத்தில் இவன் விழிகள்போய்க்குந்தும். அதன்கீழ் நாற்காலிஒன்றை போட்டுக்கொண்டு புத்தகமோ பேப்பரோ படித்துக்கொண்டிருப்பாள். இடையிடையே புத்தகத்தை தாழ்த்தி அவன் ஜன்னலைநோக்கி ஒருபார்வைவிழும். கந்துகளை சவட்டி ஜேம்பழம் ஆய்ந்து கொண்டு கொத்துகளின் இடுக்கால் பார்வை வரும். மிஞ்சிப்போனால் கடைவாயில் வழியும் புன்னகையை துடைத்துக்கொண்டு உள்ளே ஓடிப்போவாள். வேருன்றி விழுது விட்டு சடைத்து நிற்கும் ஆலமரத்தோப்புக்களான அவளுடனான ஒவ்வோர் நிகழ்வுகளும் மிக அடர்த்தியாய் இவனுள் உவகைபீச்சின. அவள்படித்துவிட்டு அனுப்பும் பத்திரிகைகளின் ஓரத்தில் இவன் கவிதை எழுதி அனுப்புவான். அதற்குப்பதிலாக மறுநாள் தினசரியின் ஓரம் அவள் எழுதியிருப்பாள். ஓர் வினோதம் குறுக்கும் நெடுக்குமாய் கோடிட்டு இவனுக்குமட்டும் புரியும்படி எழுத்துக்களை சிதைத்திருப்பாள். குறுக்கெழுத்துப்பகுதியில் றினோ விட்ட கட்டங்களை இவன் பூர்த்தி செய்து அனுப்புவதுண்டு.

அவள் அருகாமையை விட்டுப்பிரிந்த இரவில் இவன் அழுதஅழுகையும் தவிப்பும். அவள்கைபட சமைத்த சமையலை இறுதியாக உண்டுவிட்டு விடைபெற்றான். விடைபெறும்போது அவள்வேண்டுமென்றே எதிர்த்த ஸ்டூலில் உட்கார்ந்திருந்தாள்.
அழகு முகத்தில் சோகம் கப்பி விழிகள் நீர் நிறைந்திருந்தது. வீட்டிற்கு தெரிந்து விடக்கூடாதென்ற தவிப்பில் அவள் ஓரிடம் என்றில்லாமல் அலைந்துகொண்டிருந்தாள். சற்றைக்கெல்லாம்அழுது விடுவாளோ என இவன் அந்தரப்பட்டு வீதியில் இறங்கி நடந்தான்.

ஓடிவந்து ஜன்னலால் இவனைப்பார்த்தபடி நின்றாள். கலங்கி நின்ற அவளை திரும்பிப்பார்த்தபடி நடந்தான். இவனைப்பற்றி அவள் என்னதான் நினைத்திருப்பாள். ஒரு விவஸ்தைகெட்ட ஆண்மகன் என்றா. எப்படியும் நினைத்துவிட்டு போகட்டுமே. அவனளவில் அவள் குடும்ப நண்பன் என்ற கௌரவத்தை இழக்காதது என்னவோ ஆறுதலாய் இருந்தது.

இனி அவள் கைபடஒரு ரீயோ சாப்பாடோ கிடைக்காதென்ற நினைப்பு பெரும் அவஸ்தையாய் இருந்தது. சரியாக ஐந்தரைக்கு ரீ போட்டு அனுப்புவாள். பத்துமணிக்கெல்லாம் பிளேன்ரீயும் கொறித்துக்கொள்ள ஏதாவது முறுக்கும் மதியத்தில் புழுங்கிக்கொண்டிருக்க ஜுஸ் வரும். பின்பு ஒருகப் ரீ இப்படி எத்துணை சிரத்துடன் இவனை கவனித்துக்கொண்டாள். இனி அவற்றையெல்லாம் அனுபவிக்க முடியாதென்ற ஏக்கமும் ஆற்றாமையும் அவனை இம்சைப்படுத்தின. எதைக்கொண்டு வந்தாலும் அவளின் தந்தை "ஸேர் றினோ ஓங்களுக்கு தந்திச்சி" "சேர் றினோ சொல்லிச்சி ஓங்கட கதை பேப்பருல வந்திருக்காம்" இப்படி அவனைச் சூழ்ந்திருந்த யாவுமே அவள் பற்றிய எதிர்பார்ப்புக்களை மனசுக்குள் இயல்பாகவே விதைத்துவந்தன.

இதென்ன இழவுகாத்த காதல். இரண்டுபேரும் ஒருவார்த்தையேனும் பேசிக் கொள்ளாமல் உருகி வழிந்தால் எங்ஙனம் சாத்தியமாகும்.
அதற்குப்பின் வந்தகாலங்களில் அவள்தான் அவனின் கவிதைகளை அலங்கரித்தாள். "எசல பெரஹரா"க்கள் வரும் போதெல்லாம் நிலாவை வெறித்தபடி முற்றத்தில் படுத்திருப்பான். பெரஹராவில் கண்ட அவள் முதல் வதனம் அப்படியே நெஞ்சில் நசிபட்டுக்கிடந்தது.

நிழல் வாகை குளத்தோரம் நிற்பது அன்றிலிருந்தே இவனுக்குப்பிடித்தவிஷயம். அதன்செந்நிறப்பூக்களும் நீரில் மிதக்கும் கரிய நிழலும் அவனை மகிழ்வூட்டின. நாளைக்குள் அவளின் தரிசனம் கிடைத்துவிடவேண்டுமென்ற தவிப்பு வேறு. அப்படிக்காண நேரின் அவளின் மனோநிலை எப்படி இருக்கும். இவனைக்கட்டிக்கொண்டு ஓவென்று நெஞ்சில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதைந்துவிசும்புவாளோ?
"என்னை எங்கேயாவது அழைத்துச்செல்லுங்கள் நான்உங்களைத்தான் பார்த்துக்கொண்டிருந்னே" என குமுறுவாளோ, அன்றில் இவன்தான் விழியுடைய பொங்கிக்குமுறி சுவருடன் தலையை மோதிக்கொண்டு ஆற்றுப்படுத்துவானோ. எதுவரினும் றினோவைக் காணவேண்டும் என்ற அவாவே மிகைக்கத் தொடங்கிற்று.

நடைபோடும் எண்ணத்த மாற்றிக்கொண்டு மறுபடியும் அந்தவீட்டிற்க்கே திரும்பினான். இப்போது இவனுக்கு நன்கு பரிச்சயமானமுகங்களும் தோழமைமிகு இதயங்களுமாக அவ்வீடுநிறைந்திருந்தது. இவனைக்கட்டிக்கொண்டு மகிழ்ச்சிப்பிரவாகத்தில் நண்பர்கள் ஹோவென வாய்பிளந்தனர். சற்று பெருத்துவிட்டதாய் இவன் தொந்தியில் செல்லமாய் குத்துவிட்டு களுக்கென்றனர். இவன் விட்டுப்பிரிகையில் மூக்குச்சிந்திக்கொண்டிருந்த இவனுக்குபிரியமான அழகியமலர்கள் சற்றுமிரண்டு பின்ஓடிவந்து கட்டிக்கொண்டு குதூகலித்தன. அவனைச்சூழ சிரிப்பும் கும்மாளமும் பொங்கிப்பிரவகித்தன. அவனோ அவளைக்காணும் வேட்கையில் இருந்தான்.

பெண்கள் குழுமியிருக்கும் அறையில்தான் அவள் இருக்கவேண்டும். அதைத்தாண்டிப்போகவென எந்த தேவையும் அவனுக்கில்லை.

அந்த வீட்டின் புற வளவெல்லாம் எழுந்தமானமாய் சுற்றித்திரிந்தான். அவளின் மணக்கோல பிம்பம் மனசில் நிரந்தரருபமாய் தரித்துவிடுவதற்குள் அவளை சந்தித்துவிட வேண்டும் என்ற துடிப்பே இவ்வாறு அந்தரிக்க வைத்தது. புறாக்கள் வட்டமிட்டு அவள் வீட்டு முகட்டில் குந்திக்கொண்டன. அவள் ஒரு நங்நனம் வளர்த்தாளே என்னவாயிற்றோ.


இந்த ஆரவாரத்தில் அவளின் நங்நனமும் புறாக்கூடும் நினைவுக்குவந்து இன்பமாய் இருந்தது. அவள் அமர்ந்திருந்து புத்தகம் படிக்கும்கதிரை ஒரு காலுடைந்து விறகுக்கட்டுக்களிடையே மல்லாந்திருந்தது. ஒருவேளை இவனின் நினைவையும் சேர்த்து தாங்கொண்ணா பளுவுடன் அதன் ஒருகால் ஊனமாயுருக்கவும் கூடும் என நினைத்துக்கொண்டான். அந்த வளவுக்குள் நின்றாலும் அதன் விசாலித்த இடங்கள்தோறும் அவள்நின்று முற்றம் பெருக்குவதான பிரமை தட்டிற்று. வளவைசுற்றிக்கொண்டு முன்விறாந்தைக்கு வந்தான்.

தோழிகள் சூழ அவள் விறாந்தைக்குள் நின்றிருந்தாள். சோபாவில் ஒருஅல்பத்தை விரித்துவைத்துக்கொண்டு கும்மாளமடித்துக்கொண்டிருந்தனர். இவன் வருகையை யாரும் உணர்ந்ததாகதெரியவில்லை. அவளை நன்கு மனதார பார்த்துக்கொண்டான். முன்பைவிட சற்றுமெருகேறி அழகாக இருந்தாள். கன்னச்சிவப்பில் வெட்கத்தின்சாயல் மிகைத்திருந்தது. யாரோ ஒருத்தி குறும்புசெய்து அவளின் மார்பில் கைவைத்தாள். இவள் அவளைத்தள்ளிவிட்டு நிமிர்ந்தாள். இவன் அங்கு நிற்பதைக்கண்டுவிட்டாள். மனம் பதை பதைத்தது. பதற்றமும் தனக்குரிய ஒன்றை இழக்கப்போகும் பரிதவிப்பும் இவனில் ஒட்டிக்கொண்டன. அப்படி ஒன்றும் அவளில் மாற்றம் ஏதும் தென்படவில்லை என்பது இவனுக்கு மிகுந்தஏமாற்றமாய் போய்விட்டது.

இவனைக்கண்டதும ஓடிவந்து வரவேற்றாள். 'வாங்கோ' வந்திருக்கிண்டு வாப்பா சொன்னவர். காணக்கிடக்கல்ல வராம போவிங்களோன்னு நெனச்சன். எப்படி சுகமா ரொம்ப இளச்சுட்டிங்களே எங்க வீட்டுச்சாப்பாட்டுக்குப் பிறகுதான்." அவள் மிகுந்த உற்சாகத்துடனும் குதூகலத்துடனும் இருந்தாள். இவன் கோயில்மாடாய் தலையைஆட்டி குமுறலை மறைத்துக்கொண்டு பெயருக்குசிரித்து வைத்தான். பேசுவதெற்கென ஒத்திகை பார்த்துவந்த எல்லாவார்த்தைகளும் மனசின்வெப்பத்தில் அவிந்து போயிற்று.

அல்பம் விரித்தபடி சோபாவில் கிடந்தது. இவனைக்கண்ட அவசரத்தில் அதை அவர்கள் விட்டுவிட்டு ஓடிப்போயிருந்தனர். கொஞ்சம் இருங்க என்றவள் உள்ளேபோய் ரீ யுடன் வந்தாள். நீண்ட யுகங்களுக்குப்பின் கிடைத்த ரீ சுவைத்துப்பருகும் பக்குவத்தில் அவனில்லை. அல்பத்தில் இவனின் வயதை ஒத்தஒருவன் இவளுக்கருகில் அமர்ந்திருந்தான். அவன்தான் மணமகனாக இருக்கவேண்டுமென ஊகிப்பதில் அப்படி ஒன்றும் சிரமம் இருக்கவில்லை.

இவனைச்சுற்றிக்கொண்டிருந்த சகல பிரமைகளும் நொடிக்குள் உடைந்துபோயின. வெற்றுக்கோதென தான் அந்தரத்தில் பறப்பதை உணர்ந்தான். அவளை வாழ்த்தியபடி வெற்றுக்கிளாசை நீட்டினான். நேற்று இங்கு மழை இல்லயா என்றான். 'ஓம்' என்றவள் இன்றிரவும் மழைவரும் போல என சொல்லிக்கொண்டே உள்ளே போனாள். இவன் தனியனாய் கருக்கட்டிய வானத்தை வெறித்தபடி உறைந்திருந்தான்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உதிரிப்பூக்கள்

**நா. கண்ணன்**

**சி**ந்தனை உதிரியானது.
மூட்டைக்குள் இருந்தாலும் கடுகுகள் தனியானவைதான். மூட்டை கிழிந்தால் தனி மணியாய் சிதறிவிடும்.
சிந்தனையும் அப்படித்தான். உதிரிப்பாகங்கள் சேர்ந்து ஒரு கட்டமைப்பில் இருக்கும் போது உருவம் கொடுக்கின்றன.
கதையாகவோ, நாவலாகவோ!
உதிரியாய் இருப்பதில் லாபம் உண்டு.
இரண்டு உதிரிகள் பேசிக்கொள்ளலாம்.
கதை எழுதவேண்டும்! போன் போட்டுச்சொன்னார்.
கரு வைத்திருக்கிறாயா?
கரு இல்லாமலா பிறந்தேன்! கரு உண்டு எப்போதும். அது என்ன வடிவம் எடுக்கும் என்பது எழுதும் வரை தெரிவதில்லை.
சுவாரசியமாகத்தான் இருக்கிறது. எதை வைத்து எழுதப்போகிறாய்? எதை வைத்து வேண்டுமானாலும் எழுதலாம் தான்... ஆனால்...ஆனால்...
புகலிடத்துக்கதை வேண்டுமாம். புகலிடத்தில் நிகழும் நிகழ்வு குறித்து.
அதாவது சொந்த ஊர் கதையெல்லாம் கூடாது. நடக்கும் நடப்பைப் பற்றி எழுதச்சொல்கிறார்கள். அப்படித்தானே?
அப்படியான ஒரு நெருக்கடி. என்னைக்கேட்டால் நான் ருதுவான கதையைச்சொல்லுவேன்.
ஆம்பிளைக்கு ஏதுடா, ருது மங்கள ஸ்நானம்?
ஏன்? ஆம்பிள சமைஞ்ச கதையில ருசி இல்லையா?
இருக்கும் தான். எழுதவேண்டியதுதானே?
அது புகலிட இலக்கியத்தில் அடங்காது. பெண்ணியம் பற்றி எழுதலாம் அது முற்போக்காய் தெரியும். ஆணியம் என்று எதுவும் கிடையாது.

புகலிட இலக்கியம் என்றால் என்ன?
எஸ். பொ. வைத்தான் கேட்கவேண்டும். வரும் நூற்றாண்டின் வளமான கதைகள் அயல் மண்ணில் தான் உருவாகும் என்று சொல்கிறார்.
புகல் இலக்கியம் என்பது வெறும் புலம்பல் இலக்கியமாக இருப்பதாக ஒரு குற்றச்சாட்டு வைக்கப்படுகிறதே.

சாவு விழுந்தவீட்டில் ஒப்பாரிச்சத்தம் தான் பலமாய்க்கேட்கும். அதில் ஆச்சர்யமில்லை. ஆனால் இழவுவீட்டிலும் சாவு குறித்த தீர்க்கமான சிந்தனையுடையோர் சிலர் இருப்பர். அவர் தம் சிந்தனை இலக்கிய உருப்பெறும்போது காத்திரமான படைப்புக்கள் வந்துசேரும்.

இதுவரை கலங்கல்தானே தெரிகிறது.
ஆற்றில் ஊற்று தோண்டும்போது கலங்கல்தான் முதலில் வெளிவரும்.

கொஞ்சம் விளங்கச்சொல்லேன்.
தமிழன் கல்தோன்றா, மண்தோன்றாக் காலத்தின் முன்தோன்றியவன்.
அவனது பழம் இலக்கியம் முழுவதும் அறநூல்கள்.
அடடா, எவ்வளவு பெருமை!
பெருமையா? அறம் யாருக்குச் சொல்லவேண்டும்? நல்லவனுக்கு எதுக்கடா அறம்? ஆத்திசூடி ஆரம்பிக்கும்போதே, 'அறம் செய விரும்பு' என ஆரம்பிக்கப்படுகிறது. உயிர் எழுத்து முடிவதற்குள் மற்றவன் பசிக்கு உணவுகொடுத்து உண் என்று ஒளவையார் புலம்பித் தீர்த்துவிடுகிறார்.
அவ்வளவு சுயநலம் மிக்க சமுதாயம் என்று சொல்கிறாயா?
நான் சொல்வது என்ன? அதுதான் நடைமுறை. இரண்டாயிரம் ஆண்டுகளாய் தீர்வு எதுவும் இல்லாத சமுதாயத்தில் வந்து மாமணியாய் பிறந்த பாரதியும், தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் செகத்தினை அழித்திடுவோம் என்று சொல்லி ஏழையாய் செத்தான்.
சுயநலமிகள் கொண்ட சமுதாயம் கட்டுடையும்போது என்ன நேரும்?
சுயநலம் பிரகாசமாய் தெரியும்.

பொ. கருணாகரமூர்த்தியின் 'அகதிகள் உருவாகும் நேரம்' வாசித்தாயா? பார்த்திபனின் 'இழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'! கி.செ. துரையின் 'பாட்ஷா 2' ஐயர் மலர் - கிழக்கும் மேற்கும்? எத்தனை கதைகள்! எரியிற வீட்டில் சுருட்டுற சனம், தமிழ்சனம்!

ரொம்ப பரிதாபமான கதைதான். இதைத்தான் கலங்கல் என்று சொல்லுகிறாயா?
ஆமாம் மனித மனங்களின் கலங்கல்! நம்பவே முடியாத அளவுக்கு வக்கிரமாய் இருக்கு.

இந்த கலங்கலை வெளிச்சம் காட்டினால், தெளிவு வராதா?
வரலாம்தான். கொல்லன் பட்டறையிலே தங்கத்தை புடம்போடும்போது அழுக்கு முதலில் வெளியேவரும். புடம் போடுறது நல்லதுதான்.

அப்ப நீயும் ஒரு புடம் போடுற கதையைச்சொல்லேன்.

சொல்றேன். சொந்தச்சரக்கு இல்லே. ஒரு இதழ்லே படிச்சசேதியை விரிவா சொல்லறேன்.
அதுதான், உன் கதை இல்லையே, பின்ன எப்படி.....?
எல்லா கதையும் என் கதைதான். மானிடத்தின் வக்கிரம், ஆசை, துக்கம், கோபம், குமுறல் எல்லாம் இங்கேயும் இருக்கு தான். ஆத்து வெள்ளம் முதல்ல மழைத்துளியாய்த்தானே நிக்குது. என் கதையும் அவ கதையும் ஒண்ணுதான்.
அவங்கறே........ ஒரு பொண்ணோட கதையா?
ஆமாம், ஊர்சுலாவைஸ் என்கிற ஜெர்மன் பொண்ணோட கதை.
அவள உனக்கு எப்பத்தெரியும்?
நாலு கோடைகளுக்கு முன்னே. ஜூன் மாத மாலையில். பல்நாட்டு கூட்டுறவை வளக்கணும்னு நினைச்சு ஊரிலே கோடைவிழா.
ரஷ்யா, லுத்துவேனியா, போலந்து, இந்தியா, இலங்கை, அமெரிக்கா, இங்கிலாந்து இப்படி எல்லோரும் கூடுகிற ஒரு விஷயம். பல்சுவை நிகழ்ச்சி உண்டு. வெள்ளை கருப்பு மஞ்சள் சாம்பல்ன்னு பலநிறம் தோன்றும் நிறப்பிரிகை மாலை.
ஊர்சுலா முதல் முறையா இந்நிகழ்வுக்கு வந்தாள்.
மனிதர்களில்தான் எத்தனை வகை! வெள்ளை முடி, பச்சைக்கண், பொன்முடி, நீலக்கண், கருப்புமுடி, கருப்புக்கண், கருப்புமுடி, மரக்கலர் கண். குரங்குசாயலில் இருந்து தேவலோக யௌவனன் வரை அத்தனை சௌந்தர்யங்களும் கூடிய சனங்கள். ஊர்சுலாவால் மகிழ்ச்சியைத்தாங்க முடியவில்லை.

மெக்சிகன் நீரகத்தில் டக்கேலா குடித்தான். உலகம் இன்னும்

அவள் கருத்தரித்தாள். அவளுக்கு கறுப்பு மனிதனின் குழந்தையை தாங்குவதில் பெரிய பெருமை இருந்தது. தன் முன்னோர்கள் செய்த பாவச்செயலுக்கு இக்குழந்தை பரிகாரம் தருவதாய் எண்ணினாள். இவ்வுலகு முழுவதும் இத்தகைய கலப்பின தோற்றங்கள் ஆயிரம், ஆயிரமாய் மலரவேண்டுமென விரும்பினாள். வர்க்கங்கள் கலந்து, இனங்கள் அழிவுற்று மானுட சமுதாயம் மேம்படும் என்று நம்பினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலகுவாகத் தெரிந்தது.
துருக்கியபெண் இடுப்பையும், மார்பையும் வளைத்து, வளைத்து இளைஞர்களின் நாடி நரம்புகளை முறுக்கேற்றினாள். அடுத்து பிரேசிலியன் சாம்பா. மேடையில் உடலுறவு கொள்ளாதது தான் பாக்கி. அந்த கருத்த ஆபிரிக்க அழகும், ஸ்பானிய இனத்துப்பெண்மையும் அங்கு இருந்தவர்களை கலக்கிக்கொண்டிருந்தபோதுதான் அவள் கனகரட்ணம் சுரேஷ்குமாரை பார்த்தாள்.

அவனும் சொக்கிப்போய் கிறக்கத்தில் இருந்தான். செம்புலப் பெயல்நீர்போல் கலக்க அன்புடைநெஞ்சங்கள் காத்து இருந்தன. அவளுக்கு இவன் கந்தர்வன் போல் இருந்தான். அவனுக்கு இவள் மசியக்கூடிய வெள்ளைக்காரச்சியாய் தெரிந்தாள்.

அவளுக்கு இவன் மானுடக்கலப்பின் சௌந்தர்யங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்த புதுமையாய் இருந்தான். அவனுக்கு இவள் கற்பு என்பதை சொல்லிக்குடுக்காத குடும்பத்தில் பிறந்திருக்கும் கோரிக்கை அற்றுக்கிடக்கும் வேரில் பழுத்தபலாவாய் இருந்தாள்.

அவளுக்கு இவன் 'எக்கோடிக்'காக இருந்தான். ஓரியண்டலாகத் தெரிந்தான். யோகிபோல் தெரிந்தான். ஆன்மீகத்தால் கரைகண்ட குரு போல் தெரிந்தான். அவனுக்கு இவள் பீரிட்டு நிற்கும் முலை தெரிந்தது.
அவளுக்கு தன் தந்தையர்கள் முன்னோர்கள் செய்த கொடுமைகள் முன் நின்றன. ஆதரவு அற்ற யூத இளைஞர்களும், நாடோடி இனத்தவரும் ஈவு இரக்கமில்லாமல் கொலை செய்யப்பட்டது மாறாதபழியாய் உள்ளே நின்றது. அவன் தூக்கும் சிலுவையாய் அவள் நாட்டு சரித்திரம் இருந்தது. இவ்விளைஞனுடன் வாழ்வது அப்பாரத்தைக்குறைக்கும் எனத் தோன்றியது. சுரேஷ்குமாருக்கு வெள்ளைக்காரச்சியை படுக்கவைப்பதில் பெரிய பெருமிதம் இருந்தது.

*சரி..... கடேசியில் என்ன ஆனது?*

என்ன ஆகும்? அவள் கருத்தரித்தாள். அவளுக்கு கறுப்பு மனிதனின் குழந்தையை தாங்குவதில் பெரிய பெருமை இருந்தது. தன் முன்னோர்கள் செய்த பாவச்செயலுக்கு இக்குழந்தை பரிகாரம் தருவதாய் எண்ணினாள். இவ்வுலகு முழுவதும் இத்தகைய கலப்பின தோற்றங்கள் ஆயிரம், ஆயிரமாய் மலரவேண்டுமென விரும்பினாள். வர்க்கங்கள் கலந்து, இனங்கள் அழிவுற்று மானுட சமுதாயம் மேம்படும் என்று நம்பினாள்.

கனகரட்ணம் சுரேஷ்குமாருக்கு இதில் பாரிய லாபம் என்னவெனில், ஜேர்மனியில் அகதிசிறையிலிருந்து விடுபட்டு, நிரந்தர தங்கும் அனுமதி கிடைத்ததுதான். அவன் கனவெல்லாம் புதிய மெர்சிடிஸ் பென்ஸ், வீடியோ, ஸ்டீரியோ வகையறாவென அலைந்தன.

அவர்கள் குழந்தைக்கு சதீஷ் கனகரட்ணம் வைஸ் என்று பெயரிடப்பட்டது.
ஊர்சுலா தாய்மையின் எல்லா பொலிவுடன் குழந்தையை கவனித்து வளர்த்தாள்.

*அப்புறமென்ன? சுபம் என்று எழுதி கதையை முடித்துவிடவேண்டியதுதானே!*

புகலிடக்கதையில் சுபமாவது? மண்ணாவது? நம்ம பரம்பரை என்ன? குலம் என்ன? கோத்திரம் என்ன?

*குலம், கோத்திரத்தை இப்ப எதுக்கு இழுக்கறே?*

இழுக்காம. நம்ம அழுக்குமூட்டையை எப்பபார்த்தாலும் தலையிலே சுமந்துகிட்டுதானே அலையிறோம். அதுதான் ஊர்சுலாவுக்கு யமனாய் வந்தது?

*என்ன சொல்லறே?*

போன வாரம் 'ஊர்சுலாவை' பூங்காவில் பார்த்தேன். ரொம்ப சோகமா இருந்தா. என்னன்னு கேட்டேன். சுரேஷ் அவளை விட்டு போயிட்டானாம். மட்டக்களப்பிலேந்து உள்ளூர் பொண்ணாம். நல்ல சீர் கொடுத்தாங்களாம். கட்டிக்கிட்டானாம். ஊர்சுலாவை அம்போன்னு விட்டுட்டானாம். ஒன்னு அழறா!

*விவரம் கேட்டாயா?*

கேட்டேன். கேட்டேன். நம்ம ஆளு கதை தெரிஞ்சுதானே சுயநலமிக்க சமுதாயத்தின் வார்ப்பு பின் எப்படி இருக்கும்? அவன் அவளை நன்றாக உபயோகித்துக்கொண்டான். அவனது அக்கா, தங்கை மார் ஜேர்மனி வந்து சேர்ந்ததும் பிரிவினை ஆரம்பமானது. வெள்ளைக்காரச்சியை எப்படி நம்ம குடும்பத்தில் கூட்டிக்கிறது என்று பிரச்சினை ஆரம்பமாகி இருக்கிறது. கற்பிற்சிறந்த கண்ணகி குலத்தில் «டேட்டிங்» போகும் வெள்ளைக்காரியை எப்படி சேர்ப்பது?
நமது மொழி, தேசம், பாரம்பரியம், சமயம் எதிலும் ஒட்டாத ஊர்சுலாவை கத்தரித்து விட்டுவிட்டனர்.
இதிலும் சுரேஷிற்கு ஆதாயம் தான். அழகர் கோவில் மாடு மாதிரி தான் சொல்லுவதற்கு தலை ஆட்டும் உள்ளூர் பெண் கிடைத்திருக்கிறாள். அவள் அண்ணன், அப்பாமார் வெளிநாட்டில் கக்கூஸ் கழுவி பணம் சேர்த்து மாப்பிள்ளைக்கு மெர்சிடிஸ் பென்ஸ் வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள். நிரந்தர வதிவிட விசா பெற்ற மாப்பிள்ளை என்றால் சும்மா கிடைக்குமா?
*ஊர்சுலாவுக்கு ஆறுதலா எதாவது சொன்னாயா?*

ஆறுதல் எப்படி சொல்லுவது? அவள் குழந்தையின் அழகைச்சொல்லி மாளாது. கருத்த அருள் முடி. வெளுத்ததேகம். தென்னாசிய குழந்தைகளுக்கேயுள்ள பளிச்சிடும் விழிகள், ஷைனின் நீலம் கண்களில். இந்த கருவூலத்தை விட்டு பழைய அழுக்குமூட்டைகள் தான் சொத்து என்று எப்படி சுரேஷ்குமாரால் இருக்க முடிகிறது?

என்னால் எப்படி ஆறுதல் சொல்ல முடியும்? இந்த வண்ணக்களஞ்சியம் தந்தை இல்லாச்சிறுவனாய் ஜேர்மனியில் வளரும். இனத்துவேசம் கொண்ட சமுதாயத்தில் இச்சிறுவன் இங்கும் சேராத, அங்கும் சேராத இனமாக ஒதுக்கப்படுவான். சிறுமைப்படுத்தப்படுவான். அவன் அன்னை சுமந்த சிலுவையை வேறொரு பெயரில் இவனும் சுமப்பான். வெறிநாய் கூட்டத்தில் கடி பட்டு இவனுக்கும் ஒரு நாள் வெறி பிடிக்கும். திருடுவான், கொள்ளை அடிப்பான், மருந்து சாப்பிடுவான், ஊர்ச சுவர்களில் படம் வரைந்து வைப்பான். புதிய நாடோடிகள் கூட்டத்திற்கு ஆள் சேர்ப்பான்.

என்னால் எப்படி ஆறுதல் சொல்ல முடியும்? அழுக்கு மூட்டையுடன் அலைந்து திரியும் அகதிகளால் தன்னையும்புரிந்து கொள்ளமுடியாது,மற்றவர்களையும் புரிந்து கொள்ளமுடியாது. எஞ்சி நிற்பது வெறும் கலங்கல்தான்.

*கலங்கலை வெளிச்சம் காட்டி கதை எழுதிவிட்டாய், ஒரு வழியாய் நன்மைதான்.*

*இதுதான் புகலிட இலக்கியமா?*

இல்லை என்றுதான் சொல்வேன். அழுக்கு மூட்டைகளை எரி வைத்துவிட்டு பனிக்காலத்தில்
குளிர் காயும்போது புதிய இலக்கியம் பிறக்கும். அது சர்வதேச முகம் கொண்ட மானுட இலக்கியமாக இருக்கும். பண்டிதர்கள் அதற்கு புதிய பெயர் கொடுத்து, தமிழுக்கு பெருமை என்று மேடையில் சொல்லுவார்கள். ஆனால் அது முக்கியமில்லை. புதிதாய் மனிதன் பிறந்திருப்பான், புதிய இலக்கியம் மலர்ந்திருக்கும்.

சுபம்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மைசூர் ராசா

ஷோபா சக்தி

**எச்சரிக்கை:**

**கண்டிப்பாக இருதய நோயாளிகளும்,**
**கர்ப்பிணிப் பெண்களும் இந்தக் கதையைப் படிக்கக் கூடாது.**

மைசூர் ராஜாவுக்கு தாய், தந்தையர் இட்டபெயர் பற்குணராசா என்பதாகும். பற்குணராசா என்றபெயர் மைசூர்ராசாவாக மருவியதற்கு பின்னால் திட்டவட்டமான பொருளாதார, சமூக, அரசியல் காரணிகள் உள்ளன.

அக்காலத்தில் ஈழத்திருநாட்டில் சிறிமாவோ அம்மாவின் ஆட்சியும் அதிகாரமும் சிங்கக்கொடி கட்டிப் பறந்துகொண்டிருந்தது. குடிமக்கள் அரிசிக்கும், பருப்புக்கும் 'ஆத்துப்' பறந்து கொண்டிருந்தார்கள். மேற்படி சூழ்நிலையில் பண்டிதர் வீரசிங்கம்....... பண்டிதர் வீரசிங்கம் என்ற ஒருவர் அக்காலத்தில் வாழ்ந்த கணிசமான பண்டிதர்களைப் போலவே லங்கா சமாசமாஜக்கட்சியின் பிரிக்கமுடியாத அங்கமாகத்திகழ்ந்துகொண்டிருந்தார். சமசமாஜக்அம்மேயின் பிரிக்க முடியாத அங்கமாக திகழ்ந்து கொண்டிருந்தது.

ஒரு மயக்கும் மாலைப்பொழுதில் கூப்பன் கடையின் பின்புறக்கதவால் மைசூர்பருப்பு அறாவிலைக்கு களவாக விற்கப்படுகிறது என்ற இரகசியத்தகவல் பண்டிதருக்கு எட்டியது. பண்டிதர் கொதித்துப்போய்விட்டார். இந்த இடத்தில் அப்போது அங்கு கூப்பன்கடை 'மனேச்சராய்' இருந்த விநாயகமூர்த்தியை பற்றி கொஞ்சம்சொல்ல என்னை அனுமதியுங்கள்.



விநாயகமூர்த்தியும் லங்கா சமசமாஜக்கட்சியின் தீவிர உறுப்பினரே. அறுபதுகளின் இறுதிவரை தமிழரசுக்கட்சி 'பொடியளிடம்' சந்திக்கு சந்தி அடிவாங்கிய விநாயகமூர்த்தி எழுபதுகளில் நிமிர்ந்துவிட்டார். எம்.என்.பெரேராவின் நேரடி சிபாரிசின் மூலமே இவருக்கு கூப்பன்கடையில் வேலை கிடைச்சது என்று, ஒரு பரவலான வதந்தியும் அப்போது கட்சி வட்டாரங்களுக்குள் உலாவியது. இதில் மிக முக்கியமான புள்ளி எதுவெனில் பண்டிதரே இவரை அரசியல் ரீதியாக வளர்த்தெடுத்து இப்போது 'சான்றோன்' எனக்கேட்டு பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறார்.

இரகசியத்தகவல் கிடைத்த சில மணித்துளிகளுக்குள் பண்டிதர் கூப்பன் கடையில் காணப்பட்டார். சிலர் அழுத விழிகளில் ஆனந்தக்கண்ணீரும், அடிமடியில் மைசூர்பருப்புமாக போய்க்கொண்டிருந்தார்கள். அதுவரை இப்படி மைசூர்பருப்பை திருட்டுத்தனமாக விற்று தேசிய பொருளாதாரத்துக்கு விநாயமூர்த்தி துரோகமிழைத்து எதிர்புரட்சிவாதியாய் மாறுவானோ? என்று பண்டிதர் சந்தேகப்பட்டது இந்த விநாடியில் உறுதியாக ஊர்ஜிதமானது. சனம்குறைய மெல்ல விநாயமூர்த்தியை நெருங்கிய பண்டிதர், ஒரு மைம்மல் சிரிப்பு சிரித்து 'ஒரு அரைறாத்தல் பருப்பு எடுக்கேலுமே?' என்று பம்மினார். விநாயமூர்த்தியோ பண்டிதர் தனது அரசியல் ஆசான் என்பதையோ, உயிருக்கு உயிரான தோழர் என்பதையோ மறந்துபோனவனாய் 'மாஸ்டர் உங்களுக்கு ஆர் இப்படியொரு கதை சொன்னது...? தேசிய பொருளாதாரத்தை கட்டி நிமித்திற முயற்சியில் ஈடுபட்டிருக்கிற முன்னணிப்படையான எங்கிட பார்ட்டியை சேர்ந்த நீங்களே இப்படியொரு கேள்வி கேட்கலாமா?' என்று தீட்டிய மரத்திலேயே கூர்பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஒரு கால்றாத்தல் எண்டாலும்...... '
'கார்ல்மார்க்ஸ் அறிய ஒரு அவுண்ஸ் கூட இங்கையில்லை. '

அவ்வளவுதான். பண்டிதருக்கு அடிமுடி எல்லாம் பற்றி விட்டது. 'எளிய வங்கோலை ஊர் முழுதும் களவா பருப்பு விக்கிறான், ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்திநாலுக்கு முதல் நிரந்தர புரட்சி தத்துவமும், பாட்டாளிவர்க்க ஐக்கியமும், ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்துநாலுக்கு பிறகு நான்கு வர்க்க கூட்டும், முதலாளித்துவத்துக்குள்ளால நடந்துபோய் சோசலிசத்த அடையிற வித்தையும் சொல்லிக்குடுத்த எனக்கு இல்லை யெண்டுறான். அரைறாத்தல் பருப்புக்கும் என்னைமதியாத இந்தகட்சியோட என்ன கூட்டுவேண்டியிருக்கிறது என்றவாறாக விசாரப்பட்டு லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து தத்துவார்த்த ரீதியாகவும் அமைப்புரீதியாகவும் உடைத்துக்கொள்வது என்ற தடாலடி முடிவுக்கு வந்தார்.

இப்போது பண்டிதருக்குள் உறங்கிக்கிடந்த கலகக்கார கலைஞன் எடுத்துக்கொண்டான். வலுவேகமாக ஒரு தீவிர அரசியல் உருவக நாடகமொன்று பண்டிதரின் மூளைக்குள் கருக்கட்டியது. இந்த நாடகத்தின் மூலம் விநாயகமூர்த்தியையும், கட்சியையும், கூட்டரசாங்கத்தையும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த தீர்மானித்தார். சமகாலப்பிரச்சனையும், பண்டிதரின் சொந்தப் பிரச்சனையும் முன்னிட்டு நாடகத்துக்கு 'பருப்பா? பாசமா?' என்று பெயர்வைத்தார். இந்த நாடகத்தின் மூலம் விநாயகமூர்த்தி தொட்டு ஏர்ணஸ்ட் மண்டலோ வரை எச்சரிக்கை செய்ய சபதம் போட்டார்.

சபதம் போட்டாகி விட்டது. இனி நாடகம் போட்டாக வேண்டும். இங்குதான் நடைமுறைச்சிக்கலுக்கு பண்டிதர் முகம் கொடுக்க நேரிட்டது. இதுவரை காலங்களும் இவரின் நாடகங்களில் நடித்துவந்த கட்சி தோழர்களை நடிக்க கூப்பிட முடியாது. பண்டிதர் எங்கே போவார் அவருக்கு யாரைத்தெரியும்? ஆழமாக சிந்தித்தவாறே சித்திரை வெய்யில் மண்டையப்பிளக்க பண்டிதர் ஒழுங்கையால் நடந்துவந்தார், அப்போதுதான் அந்த அசரீரி ஓங்கிய பனைகளில்பட்டு எதிரொலித்தது.

'பருப்பு...... அம்மா..... பருப்பு..... ஆ..... பருப்பு....... '
'யார் பராசக்தியா பேசுவது?' என்று பண்டிதர் ஒருகணம் சலனப்பட்டாலும் தீவிர 'பொருள்'முதல்வாதியான அவர்குரல் வந்த புறச்சூழ்நிலையை ஆய்வுக்கண் கொண்டு நோக்கினார்.

நடந்தது இதுதான், அப்போது எட்டு வயதுப்பிராயமே நிரம்பியிருந்த பற்குணராசாவின் வாழ்க்கையில் அன்று திருப்பு முனையான சம்பவம் ஒன்று நடந்தேறியது. அன்று காலை பள்ளிக்கூடத்துக்கு வந்ததிலிருந்தே பற்குணராசாவின் கூட்டாளி சற்குணராசா தான் நேற்று இரவு பருப்பு சாப்பிட்டதாகவும் மைசூர்பருப்பு என்பது எள்ளுருண்டை, இறுங்குப்பொரி எனபவற்றை விட ருசியானது என்றும், பருப்புத்தேவாரம் பாடிக்கொண்டிருந்தான். திறந்தவாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்த பற்குணராசா 'அது பாணைவிட அபூர்வமானதா..?' என்று மெதுவாக கேட்டான். கண்களை இறுகமூடி கடுமையாக யோசித்த சற்குணராசா 'ஓம் எப்படி பார்த்தாலும் பருப்பு ஒரு இஞ்சி உயரத்தன் இருக்குது' என்று தீர்ப்பு சொன்னான். அந்த ஆவேசத்தில் வீட்டுக்குவந்த பற்குணராசா உடனடியாக தனக்கு மைசூர்பருப்பு ஆக்கிப்போடவேண்டும் என்று அழிச்சாட்டியம் செய்து அம்மாவை உலுக்கி எடுத்தான். அம்மா என்ன செய்வாள். சிறிமாவைதிட்டி ஒருசாத்து, கொம்யூனிஸ்ட் கட்சியைதிட்டி ஒருசாத்து என்று ஆளைப்பிடித்து வைத்து எக்கச்சக்கமாக சாத்தினாள். யாராவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்குணராசாவுக்கு விழுந்த அடிகளை ஒன்று, இரண்டு என வரிசைப்படுத்தி எண்ணியிருந்தால் கூட்டரசாங்கத்தில் எத்தனை கட்சிகள் அங்கம் வகித்துக் கொண்டிருக்கின்றன என்பதை சரியாக சொல்லியிருக்கலாம்.

ஆனால் அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க உரிமைக் கோரிக்கையும் ஆர்ப்பரித்து எழும் வழமையையொட்டி பற்குணராசா வீட்டு முற்றத்தில் புரண்டு புரண்டு அவலக்குரல் கொடுத்துக் கொண்டிருந்தான். 'பருப்பு..... அம்மா.... பருப்பு.... ஆ.... பருப்பு.....'

இப்பொழுது பண்டிதரின் பார்வையில் பற்குணராசா பட்டுவிட்டான். பையனின் கலகக்குரலை கேட்டு பண்டிதரே ஓர்கணம் வெருண்டுவிட்டார். இவ்வளவு உணர்வுபூர்வமா பருப்புக்கு குரல் கொடுக்கும் இவனால்தான் அனுபவத்தினூடாக செவ்வனவே தனது நாடகக் கதாநாயகன் பாத்திரத்தை சிறப்பிக்முடியும் என விளங்கிக்கொண்டு புரண்டு கொண்டிருந்த பற்குணராசாவுடன் சேர்ந்து ஓடியவாறே 'தம்பி நாடகத்தில நடிக்க வாறியோ?' என்று கேட்டார். புரண்டுகொண்டிருந்த பற்குணராசா ஒருவிநாடி புரள்வதை நிறுத்திவிட்டு 'நடிக்க வந்தால் பருப்பு தருவீங்களே?' என்று கேட்டுவிட்டு திரும்பவும் உருளத்தொடங்கினான். பருப்பு கிடைக்கும்வரை உருள்வதை நிறுத்துவதாய் அவனுக்கு அபிப்பிராயம் இல்லை.

அடுத்து வந்த நாட்களில் செருப்புக்கு அளவாய் காலை வெட்டுவது போல, சிறுவனுக்கு அளவாய் நாடகத்தை செதுக்கிக்கொண்டு, பண்டிதர் ஒத்திகையை தொடங்கிவிட்டார். நாடக அரங்கேற்றத்துக்கு பொலிஸார் தடைவிதித்திருந்தும் நடப்பு நிலவரங்களுக்குள் பண்டிதர் நெருப்பாற்றை நீந்திக்கடக்க துணிந்து நாடகத்தை அரங்கேற்றினார். அனலைதீவு, எழுவைதீவு பக்கத்தில் இருந்தெல்லாம் சனங்கள் நாடகம் பார்க்க வந்தார்கள்.

நாடகத்தில் பற்குணராசா இளவரசனாக நடித்தான். நாட்டு மக்கள் இளவரசனிடம் வந்து 'ஐயோ ராசா பஞ்சம் பொறுக்க முடியவில்லை.' என்று முறையிடுவார்கள். அப்போது இளவரசனுக்கு ஒரு அற்புத விளக்கு கிடைக்கும் அந்த அற்புத விளக்கு உதயசூரியன் வடிவில் நுட்பமாக வடிவமைக்கப் பட்டிருந்தது. இளவரசன் அந்த அற்புத உதயசூரியன் விளக்கை தேய்க்க மைசூர்பருப்பு மழையாக பொழியும் சனங்கள் புல்லரித்துப்போய் கைதட்டுவார்கள்.

நாடகம் நாட்டையே ஓர் கலக்குக்கலக்கியது. பண்டிதரின் தோலை உரித்து வேட்டியாக்கிக்கட்டுவேன் என்று ஒரு பாரளுமன்ற உறுப்பினரும், பண்டிதரின் குடலை உருவி பொருட்காட்சியில் வைப்பேன் என்று இன்னொரு பாரளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றத்தில் பேசி பாராளுமன்றத்தை இறைச்சிக்கடை 'லெவலுக்கு' இறக்கினார்கள். இதற்கிடையில் பற்குணராசாவை சூமைசூர்பருப்பு பற்குணராசா' என்று காரணப்பெயர் கொண்டு ஊருக்குள் அழைத்தார்கள். அதுமருவி மைசூர்ராசாவானது.

இந்த தொடர் சம்பவங்களையொட்டி மைசூர்ராசாவுக்கும் மைசூர்பருப்புக்கும் இடையில் ஏற்கனவே இருந்த ஒருவித ஈர்ப்புநிலை இப்போது எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாத ஐக்கியம் என்ற நிலையை எட்டியது. மைசூர்ராசா இளந்தாரியாக வளர்ந்து கொண்டிருந்தான். அவனைவிட வேகமாக நாட்டில் பிரச்சனைகளும் கலவரங்களும் வளர்ந்து வந்தன.

அங்கொன்றும் இங்கொன்றுமாக பொலிஸ்காரர்கள் இனந்தெரியாத நபர்களால் சுடப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வரத்தொடங்கின. பள்ளிக்கூடத்துக்கு போன மைசூர்ராசாவுக்கு 'கொம்பாஸ்பெட்டி' இல்லாமல் வரக்கூடாது என்று கணிதவாத்தியார் 'அடித்து'சொல்லி வகுப்புக்கு வெளியே வெயிலில் முட்டுக்காலில் நிறுத்திவிட்டார். மைசூர்ராசா வீட்டிற்கு போய் 'கொம்பாஸ்'பெட்டி கேட்டபோது 'மேசன்' வேலை கருவிகள் அடங்கிய பெட்டியை கையில்கொடுத்து மேசன்வேலையில் சேர்த்துவிட்டார்கள். கூட்டாளி சற்குணராசா வெள்ளைச்சட்டை போட்டு பள்ளிக்கூடத்துக்கு வராத காரணத்தால் ஏற்கனவே தலைமை வாத்தியாரால் பள்ளியைவிட்டு அடித்து கலைக்கப்பட்டிருந்தான். அவனும் இவனோடு மேசன்வேலைக்கு போய் வருகிறான். இருவருமாக சேர்ந்து இரவுநேரங்களில் சந்தித்து தமிழ்மக்களின் உயர்கல்வி தரப்படுத்தல்மூலம் பறிக்கப்பட்டு விட்டதை நினைத்து நினைத்து கொதித்துப்போவார்கள்.

இந்தக் கட்டத்தில்தான் பேச்சுவார்த்தைகளையும் ஒப்பந்தங்களையும் நம்பி தமிழர் ஏமாந்தகதை போதும். சிங்கள் பேரினவாதிய ஏகாபத்திய அரசுடன் இனி துப்பாக்கிகுழல்கள் ஊடாக மட்டுமே பேசுவோம் என்று இயக்கங்கள் பிரகடனம் செய்தன. இந்த 'டயலாக்' மைசூர்ராசாவுக்கு மிகவும் பிடித்துப்போகவே இயக்கத்தில் சேர்ந்து துப்பாக்கிகுழல்கள் ஊடாக கதைசொல்ல மைசூர்ராசா உறுதிபூண்டான்.

ஆனால் 'விதி' வலியது. அந்த அநாதை தீவுகளுக்கு பஸ், ஆஸ்பத்திரி, மின்சாரம் எல்லாமே கட்டக்கடைசியா வருவதுபோலவே துப்பாக்கிகுழல்கள் ஊடாக பேச முடிவுசெய்தவர்களும் வந்துசேரும்போது திம்புவில் பேச்சுவார்த்தையே தொடங்கிவிட்டது. வெறுத்துப்போன மைசூர்ராசா தானுண்டு, தன்வேலையுண்டு என்று இருக்க முயற்சிதான். ஊரில் நான்கு 'மேசன்குறூப்'புகள் இருந்தன. இவன் துரைசாமி குறூப்பில்வேலை செய்தான்.

உழைக்கிற 'பத்தபத்தினி' காசில் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் சோறும்தான் கொடுக்கக்கூடியதாய் இருந்தது. பெற்றவர்களுக்கு வயிறார பருப்பும், சோறும் உண்ணக்கொடுக்க அருள் செய்யுமாறு விநாயகக்கடவுளை வேண்டினான். கொடுக்கிற தெய்வம் கூரையை பிய்த்துக்கொண்டு கொடுத்தது. ஓர்நாள் மாலையில் ஐந்துகிலோ பருப்பு பொதி கூரையை பொத்துக்கொண்டு வந்து மைசூர்ராசாவின் வீட்டுக்குள் விழுந்தது. பிள்ளையாரின் திருவிளையாடலை எண்ணி மைசூர்ராசா புல்லரித்துப்போனாலும், வெளியே வானத்தில் ராட்சத விமானங்கள் உறுமிச்சென்றன. அன்றிரவு 'ஆகாசவாணி'யில் 'இந்திய விமானங்கள் ஆபரேசன் ஆப் பூமாலை என்ற பெயரில் இலங்கையின் தமிழ்பிரதேசங்களுக்குள் உணவுப்பொதிகளை எறிந்து வெற்றிகரமாக மீண்டன.' என்ற செய்திகேட்டு இனி யாவருக்கும் மைசூர்பருப்பு மழையாய் பொழியுமென எண்ணி இன்னொருமுறை புல்லரித்துப்போனான்.

ஒரு மூன்றுமாதம் போனது. பருப்புபோட்ட விமானங்கள் எல்லாம் இப்போது நெருப்புப் போட்டன. தன் புத்தியை செருப்பாலே அடிக்க மைசூர்ராசா முயற்சித்துக் கொண்டிருந்தபோது, அவர்கள் கிராமத்தை சுற்றிவளைத்து இளைஞர்களைப்பிடித்து சப்பாத்து கால்களால் பின்னி எடுத்தார்கள். ஒரு கட்டைப்பொம்மன் மீசைக்காரன் மைசூர்ராசாவின் தலைமுடியைப்பற்றி முகத்தை தெருவில் அறைந்து 'தாயொளி நீ எவன் குறுப்படா?' என்று கெட்டான். மைசூர்ராசா நடுங்கியபடியே 'துரைசாமி குறூப்' என்று சொன்னான். அதற்குபிறகு மைசூர்ராசாவுக்கு விழுந்த அடியின் ஆவேகத்தை திருக்குறள் மட்டத்துக்கு சுருக்கி சொல்வதென்றால் ஒருஅடி அவனைக் கொழும்பில் கொண்டுபோய் விழுத்தியது. அடுத்தஅடி ஆளை பிரான்ஸில் கொண்டுவந்து விழுத்தியது.

மைசூர்ராசா பிரான்சுக்கு வந்த நேரம் சரியில்லையா இல்லை, பிரான்சே சரியில்லையா என்று மைசூர்ராசாவுக்கு தெளிவாக தெரியவில்லை. பாரிஸிலிருந்து நூறுகிலோமீற்றருக்க அப்பால் இருக்கும் அகதிகள் விடுதியில் ஒட்டிக்கொண்டான். மணியடித்தால் பாண், சலாட் கொடுக்கிறார்கள். வந்த இடத்தில் மைசூர்பருப்பை எதிர்பார்க்க முடியுமா? ஆனால் தினந்தோறும் கனவுகளில் மைசூர்பருப்பு வந்து மைசூர்ராசாவை விரகதாப பார்வை பார்த்து ஒப்பாரி பாடிவிட்டுபோனது.

பிரான்ஸில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. 'சமூக சனநாயகம்' அகதிகள் விடுதிவரை விஸ்தரிக்கப்பட்டு அங்கிருந்த சமையல் கூடத்தில் அகதிகள் விரும்பியதை சமைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். அடுத்தநாள் அதுவரை இயங்கிக்கொண்டிருந்த உணவுவிடுதி மூடப்பட்டதும், தொடர்ந்து விளையாட்டு மண்டபம், தொலைக்காட்சி மண்டபம், நூலகம் ஆகியவை இழுத்து மூடப்பட்டதும், மூடிக்கட்டும் வேலைகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதும் மைசூர்ராசாவுக்கு கவலையை கொடுத்தாலும் மைசூர்பருப்பு சுதந்திரமாக சமைத்து சாப்பிடப்போவதை எண்ணி இன்புற்றான். இவனைப்போலவே இன்புற்ற ஆபிரிக்க, அரபு தோழர்களோடு சேர்ந்து மட்டரக வைன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாங்கிக்குடித்து சந்தோஷம் கொண்டாடினான். அன்றிரவு மைசூர்பருப்பு மைசூர்ராசாவுடன் கைகோர்த்து நடனம் ஆடியது, காதல்மொழி பேசியது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

மறுநாள் காலையில் உடனடியாக மைசூர்பருப்பை கொள்முதல் செய்யும் முயற்சியில் இறங்கிய மைசூர்ராசா ரயிலைப்பிடித்து தமிழ்கடைகளை நாடி பாரிஸ் மாநகருக்கு வந்து சேர்ந்தான். நகரத்தின் இதயப்பகுதியில் கொஞ்ச இடத்தைப்பிடித்து தமிழர்களின் பல'சரக்கு' கடைகள் இழுத்துப்பறித்து இயங்கிக்கொண்டிருந்தன. இந்த பலசரக்கு கலாச்சாரத்துக்குள்ளும் மைசூர்பருப்பின் நறுமணத்தை மிக துல்லியமான முறையில் கிரகித்துக்கொண்டே மைசூர்ராசா அந்த கடைக்குள் நுழைந்தபின்புதான் குறுகியகால இடைவெளிக்குள்ளேயே மைசூர்ராசாவுக்கும் மைசூர்பருப்புக்கும் இடையே அந்தஸ்து ரீதியாக பாரிய இடைவெளி ஏற்படுத்தப்பட்டிருப்பதை அறிந்துகொண்டான்.

மைசூர்பருப்பின் விலை கணிசமாக உயர்த்தப்பட்டிருப்பதாக தெரிந்தது. உண்மையில் எல்லா பொருட்களுமே இவனின் கையிலிருந்து திமிறிக்கொண்டு ஆகாசத்தில்போய் ஒட்டிக்கொண்டிருந்தன. ஆனால் அருச்சுனராசாவுக்கு அம்பின்முனையும் குருவியின் கழுத்தும்மட்டுமே தெரிந்தமாதிரியே மைசூர்ராசாவுக்கும் மைசூர்பருப்பு ஆகாசத்தில் ஒட்டிக்கொண்டிருப்பது மட்டுமே தெரிந்தது. தொடர்ந்து இந்தவிலை எகிறல் விசயத்தை முதலாளியோடு பேசியபோது, அவர் ஆடம்ஸ்மித்தின் பொருளாதார கோட்பாட்டிலிருந்து அண்மைய புதிய உலக ஒழுக்கமைப்பு தத்துவம்வரை அமைதியாக விளக்கி இன்னும் இன்னும் மைசூர்பருப்பு உயரப்பறக்குமேதவிர எவராலும் இறக்கிவிட முடியாது என்று அடம்பிடித்தார்.

அறாவிலைக்கு மைசூர்பருப்பு வாங்கிக்கொண்ட மைசூர்ராசா வெளியே வந்து அந்த நடுச்சந்தியில் நின்று ஆகாசத்தைப்பார்த்து பெருமூச்சு விட்டான். 'ஆகாசத்தை பூமிக்கு இறக்கினால் எவ்வளவு நல்லாயிருக்கும்' என எண்ணிக்கொண்டான். வெண்நிலாவையோ விண்மீனையோ பிடிக்கும் ஆசை கிடையாது. 'ஒன்லி பருப்பு'

அப்பொழுதான் தமிழரசன் அந்த ஏரியாவுக்குள் பிரவேசித்தார். அவர் மைசூர்ராசாவுக்கு தாய்மாமன் முறையானவர். ஆளோடுபோய் கதைக்க வேண்டும்போல் இருந்தாலும், 'வானத்திலபோற பிசாசை ஏணிவைச்சு இறக்கிறவேலை எனக்குத்தேவையா?' என்று எண்ணியபடியே பின்வாங்கிக்கொண்டிருந்த மைசூர்ராசாவை தமிழரசன் கண்டே விட்டார். ஓடோடி வந்து தமிழரசன் மைசூர்ராசாவின் கையை இறுக்கப்பிடித்து குலுக்கினார். மைசூர்ராசா வலக்கையை குலுக்கக்குடுத்துவிட்டு இடக்கையால் பிடரியைதடவிப்பார்த்தான். பிடரியில் விளாங்காய் கணியத்தில் ஒரு வீக்கம் இருந்தது, சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பு தமிழரசன் இவன் தலையில் கொட்டியவடு.

அது 'இலங்கை சனநாயக சோசலிச குடியரசு' யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள்தடை விதிக்கத் தொடங்கிய காலம். அரிசி, மா, சீனி எல்லாம் பவுண்விலை விற்றன. சனங்கள் பேரீச்சம்பழத்தை நக்கிக்கொண்டே தேனீர் குடித்தார்கள். இந்த பொருளாதாரத்தடை மைசூர்ராசாவை நேருக்குநேர் தாக்கியது. மைசூர்பருப்பை கண்ணால் கண்டு பல மாதங்களாகி விட்டன. கொடுமை தாங்க முடியாமல் மைசூர்ராசா துடித்துக்கொண்டிருந்தான். அப்போதுதான் கபாலத்தை பிளந்து உள்ளத்தை உருக்கி மைசூர்ராசாவை பொறுத்தவரை அண்டசராசரங்களையும் உலுக்ககூடிய அந்தக்கவிதை மைசூர்ராசாவின் கைகளில் எத்துப்பட்டது. யாரோ தமிழ்நாட்டுக்காரர் அந்தக் கவிதையை எழுதியிருந்தார். அந்த யாரோ தான் மைசூர்பருப்பு சிக்கல் உலகம் முழுவதும் ஒரேமாதிரியாகவே உள்ளது என்பதை இவனுக்கு உணர்த்தினார். இந்தக்கவிதையை விநாயகக்கடவுளின் சமூகத்தில் பொறிப்பது காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்த மைசூர்ராசா அன்றிரவு இரண்டாம் சாமத்தில் அந்தக்கவிதையை பிள்ளையார்கோயில் வடக்கு மதிலில் கரித்துண்டால் பொறித்துவிட்டான்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் தா.....
கோலம்செய் துங்க கரிமுகத்து தூமணியே
நானுனக்கு சங்கத்தமிழை திருப்பித்தாறன்.

என்று இவன் எழுதி முடிக்கையில் கோவிலின் கிழக்கு மதிலில்
வர்ண மைகளால் கொட்டை எழுத்துக்களில்
'பட்டினி கிடந்து பசியால் மெலிந்து பாழ்பட நேர்ந்தாலும்
மன்னர்தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர் துடைக்க மறுப்பேனா'

என்று உணர்ச்சிக் கவிதையை எழுதிவிட்டு வந்துகொண்டிருந்த தமிழரசன் குழுவினரிடம் மாட்டிக்கொண்டான். தமிழரசன் மைசூர்ராசாவின் மண்டையைப் பொத்தி தமிழின் பெயரால் ஒருகொட்டும், தாய்மாமன் பெயரால் ஒரு கொட்டும் கொட்டினார். மைசூர்ராசாவின் மண்டைக்குள் அது இப்பொழுதும் விட்டுவிட்டு வலித்துக்கொண்டிருக்கிறது. தமிழரசன் மைசூர்ராசாவின் கைகளை பற்றியவாறே 'என்ன பரிஸ் பக்கம் வந்திருக்கிறாய்?' என்று வாஞ்சையுடன் கேட்டார். 'இல்லை கொஞ்சம் மைசூர்பருப்பு வாங்கவேண்டும் அதுதான் வந்தனான்.' தமிழரசன் சடாரென்று மைசூர்ராசாவின் கைகளை உதறி எறிந்தார். இவனை ஆழமாக உற்றுப்பார்த்தார். திடீரென்று 'உம்மைப்போல ஆக்களாலதான் எங்கிட சொந்த பொருண்மியத்தை மேம்படுத்த ஏலாம கிடக்கு. ஏன் உமக்கு குரக்கனோ, சாமையோ சாப்பிட்டா செமியாதோ?' என்று மைசூர்ராசாவின் முகத்துக்கு சுட்டுவிரல் நீட்டி குற்றம் சாட்டினார். மைசூர்ராசா எதிர்பாராமல் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை கண்டு கதிகலங்கிப்போனான்.

தமிழரசன் இடக்கையை வலக்கையால்குத்தி உணர்ச்சிவசப்பட்டவாறே 'சரி இதுக்கு பதிலை சொல்லும், நீர் மைசூர்பருப்பு வேண்டிற காசு எங்க போகுது?' என்று கேள்வியைப் போட்டார். மைசூர்ராசா தன்னுடைய குறைஞ்சபட்ச புவியியல் அறிவின் துணைகொண்டு 'மைசூர்பருப்பு மைசூரில விளையிற சாமானாதான் இருக்கவேணும். மைசூர் இந்தியாவில இருக்கு அதால இந்தக்காசு இந்தியாவுக்குப்போகுது.' என்று மெல்லச்சொன்னான். 'சரியான பதில் இப்ப சொல்லும் இந்தியா எங்கிட நட்புநாடா?' இந்த வரலாற்று சிக்கல்மிக்க கேள்வியைக்கண்டு மைசூர்ராசா மிரண்டுபோனான். அவனுக்கு திட்டவட்டமாக சொல்லத் தெரியாமலிருந்தது. தற்செயலாய் பிழையான பதிலைச் சொன்னால் தமிழரசன் மண்டையைப்பொத்தி கொட்டக்கூடியவர். மெதுவாக இடக்கையால் மண்டையை பொத்தியவாறு, வலக்கையால் தீவிரமாக சொறிந்தவாறும் தமிழரசனைக் கடைக்கண்ணால் பார்த்தான். அவர் முகத்தில் ஒரு மர்மப்புன்னகையைதவழவிட்டவாறே இவனின் பதிலுக்காக காத்திருந்தார். மைசூர்ராசா கடந்தகால பத்திரிகை செய்திகளை ஞாபகப்படுத்தி இந்தியா நட்புநாடா? இல்லை எதிரிநாடா? என்று கண்டுபிடிக்க முயன்று கொண்டிருந்தான்.

'அன்னை இந்திராகாந்தி உயிரோடு இருக்கும்போது நட்புநாடு, திம்புப்பேச்சுவார்த்தை நடக்கும்போது தொப்புள்கொடி உறவுநாடு, ஒப்பந்தநேரத்தில் எங்கள் பாதுகாவலன்நாடு, பின்பு மூன்றுமாதம் கழித்து எதிரிநாடு, வி.பி.சிங் ஆட்சிக்கு வரும்போது நட்புநாடு, நரசிம்மராவ் காலத்தில் எதிரிநாடு, குஜ்ரால் ஆட்சிக்கு வரும்போது நட்புநாடு. ஆனால் இப்ப என்ன நாசங்கட்டு என்று விளங்குதில்லை.' என்று இவன் மண்டையை பிய்த்துக் கொண்டிருக்கும்போது இவனோடு மேலும் நின்று சிக்கெடுக்க தமிழரசனுக்கு நேரமில்லாததாலும், மதியபூசைக்கு நேரமாகிவிட்டதாலும் தமிழரசன் விறு விறு என்று கோவிலை நோக்கி நேராக நடந்தார்.

**ஓகே.... பருப்பு விலை கூடிப்போச்சுது எண்டது உண்மை. அப்ப பருப்பின்ர விலையை எப்படி குறைக்க முடியும் எண்டு நினைக்கிறீர்? என்று அவர் இரண்டாவது கேள்வியைப்போட்டார். மைசூர்ராசாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது. பொறுமை கடலிலும் பெரியது என்பதை தெரிந்திருந்த காரணத்தால் தற்காலிகமாக அமைதிகாத்தான்.**

தலைக்குவந்த ஆபத்து தற்காலிகமா கடந்து போனதால் ஒரு நிம்மதி பெருமூச்சு விட்ட மைசூர்ராசா, கொஞ்சம் கைகளைத்தூக்கி பயத்தின் நிமித்தமாக நெற்றியில் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியர்வையை துடைக்க முற்படுகையில் ஒருவர் ஓடிவந்து மைசூர்ராசாவின் கைகளை உயரவிடாமல் இறுக்கப் பிடித்துக்கொண்டார். திடுக்கிட்டுப்போன மைசூர்ராசா, ஊரில் இவனின் வீட்டுக்கு முன்புவீட்டுக்காரரான நடனம் மாஸ்டரின் மகன் அறிவரசன் மாஸ்டரே தன்கைகளை அமுக்கிய நபர் என்பதை சிரியான முறையில் இனம்கண்டுகொண்டான்.

'மைசூர்ராசா சவா...? என்று அன்பாக அறிவரசன் நலம் விசாரித்தார். 'ஓம் மாஸ்டர் சவா.' என்று மைசூர்ராசா நலம் அறிவித்தான். 'மைசூர்ராசா இப்பயும் நாடகம் நடிக்கிறதோ? என்று அறிவரசன் கேட்டார்.

'இல்ல மாஸ்டர். நாடகத்தை போட்டு என்னத்த கண்டோம். வானத்தில இருந்து பருப்பு வருமெண்டு நாடகம் போட்டம். ஆனால் வானத்திலிருந்து வெறும் நெருப்பும் புகையும்தான் வருகுது.'

அறிவரசன் ஒருஆளைக்கொல்லும் சிரிப்பு சிரித்து பரிவோடு பேசினார். 'இல்ல மைசூர் நீர் பிழையா விளங்கிக் கொண்டிருக்கிறீர். நாடகம் எண்டுறது 'ஐஸ்ட்' ஒரு அனுபவம் மட்டுமே எண்டு ஆங்கிலேய இலக்கியவாதி 'இயன் பொத்தம்' சொல்லியிருக்கிறார். 'பருப்பா? பாசமா? நாடகத்தை நாங்கள் மறுபார்வை பார்க்கவேண்டியிருக்கு. அந்த நாடகத்தை நானொரு இருப்பியல்வாதியின் குரலாக உள்வாங்கிக்கொண்டன். இளவரசன் எண்டுற பாத்திரப் படைப்பில விடுதலை இறையியல கூட சிலபேர் விளங்கிக்கொண்டிருக்கலாம்.'

'அடபாவியளே நீங்கள் ஆளுக்கொரு விளக்கம் வைச்சுக்கொண்டு நாங்கள் வில்லங்கமா விளங்கிக்கொள்ளேக்க என்ன மசிரா புடுங்கிக்கொண்டு இருந்தீங்கள்.' என்று மைசூர்ராசா மனதுக்குள் முறுகிக்கொண்டாலும், அறிவரசனோடு சளாப்பி தன்னால் வெல்லமுடியாது என்பதை தெளிவாக தெரிந்துகொண்ட மைசூர்ராசா, கதையை மாற்றும் முகமாக, இயல்பாகவே அப்பாவியள் தனது முகத்தை மேலும் அப்பாவியாக்கிக்கொண்டே 'பருப்பு சரியான விலையேறிப் போச்சு!' என்று முனகினான்.

அறிவரசன் ஒருமுறை செருமிக்கொண்டார். 'நான் உம்மிட கூற்றின்ர பின்பாதியோட உடன்படுறன், முன்பாதியோட முற்றுமுழுதா முரண்படுறன்' என்ற அறிவரசன் மைசூர்ராசாவின் வசனத்தை அவசரமாக குறுக்காகவெட்டி ஒன்றுக்கு இரண்டுமுறை மறுவாசிப்பு செய்துவிட்டு தொடர்ந்தார். 'நீர் மைசூர்பருப்போட உம்மை அடையாளப்படுத்துறதால மரபுகளை மீறத்தயங்கிற மனிதனாய் நான் உம்மை அடையாளம் காணுறன். நீர் பட்டினி கிடந்து சாகிறதெண்டாலும் உம்மிட சுயத்த அடையாளப்படுத்திப்போட்டு மண்டையைப் போட்டீர் எண்டால் எனக்குள்ள இருக்கிற ஆத்மா சந்தோஷப்படும்.' என்றவாறாக அறிவரசன் மைசூர்பருப்பு விலையேறிப்போன விசயத்தை தவிர்த்து மற்ற எல்லா விசயங்களையும் இடித்துரைத்தார்.


மைசூர்ராசா தன்னை வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓட்டிச்சென்ற அந்த சுயாதீனக்குரலை கேட்டு ஒரு ஐந்துநிமிடம் ஐந்தும் கெட்டு அறிவும்கெட்டு விறைத்துப்போய் நின்றிருந்தான். மைசூர்ராசா விழித்தபோது அறிவரசன் சொல்லாமல் கொள்ளாமலேயே வந்த வேகத்திலேயே சந்திமுனையில் மறைந்து கொண்டிருந்தார்.

ஒரு இசகுபிசகான 'சிற்றிவேசனுக்குள்' மாட்டுப்பட்டிருந்த மைசூர்ராசா அடுத்தகட்டமாக அந்த ஏரியாவைவிட்டே ஓடிப்போய்விட நினைக்கையில் அவர் வந்தார். அவர் என்றால் பூவரசன். மைசூர்ராசாவைப் பொறுத்தவரை பூவரசன் நல்ல மனிதர். முன்பு இவன் மேசன்வேலை முடித்து பண்ணைப்பாலத்தால் பொடிநடையில் வருகையில், பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு சைக்கிளில் வரும் பூவரசன் இவனை வலியக்கூப்பிட்டு சைக்கிளில் ஏற்றிக்கொள்வார். மைசூர்ராசாவின் சீமெந்து எரித்து காய்ந்துபோன கைகளைப்பார்த்து தான் மிகவும் வேதனைப்படுவதாக கூறுவார். ஒருநாள் பூவரசன் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு கைகளை உயரத்தூக்கி 'வரலாறு எங்களை விடுதலை செய்யும்' என்று கருத்துச்சொல்ல சைக்கிள் பாலத்தைவிட்டு கடலுக்குள் பாய்ந்தது. இவரை நம்பி சைக்கிளில் ஏறிய மைசூர்ராசாவும் கூடவே கவிழ்ந்து போனான்.

பூவரசன் அன்று கண்டமாதிரியே இன்றும் இருந்தார். தாடியைத்தவிர வேறெதுவுமே வளர்ந்திருக்கவில்லை. மைசூர்ராசாவும் பூவரசனும் பலமாக கைகளைக் குலுக்கிக் கொண்டார்கள். உடனடியாக மைசூர்ராசா நம்பிக்கையோடு பஞ்சப்பாட்டு பாட ஆரம்பித்தான். 'மைசூர்பருப்பு சரியா விலை கூடிப்போச்சுது அண்ணா. உங்களுக்கு தெரியும்தானே எனக்கு அந்தக்காலம் தொட்டு மைசூர்பருப்பெண்டால் உசிர். ஆனால் வேண்டக்கூடிய விலையே விக்கிறாங்கள்? என்று மைசூர்ராசா பூவரசனிடம் 'என்றி' போட்டான்.

பூவரசனின் கண்கள் சிவந்துபோக பற்களை இறுகக்கடித்ததால், வார்த்தைகளும் கடிக்கப்பட்டே துப்பப்பட்டன. 'மைசூர்ராசா நீர் ஒரு பிழைப்புவாதி. குறுந்தேசியவாத குட்டிப்பூர்சுவா கோரிக்கையான பருப்பு கோரிக்கையை மட்டுமே வைக்கற நீர் ஏன் எங்களுடை சகோதரங்களின் அடிப்படைக் கோரிக்கைகளுக்காக குரல் எழுப்பவில்லை? முனியாண்டியின் ரொட்டிக்கோ.....' என்று பூவரசன் தடக்குப்பட்டுக் கொண்டிருக்க தான் ஏதோ பிழையாக கதைத்துவிட்டதாக பயந்துபோன மைசூர்ராசா பூவரசன் விட்ட இடத்திலிருந்து எடுத்துக்கொடுத்து 'பொடிமெனிக்காவின் பாணுக்கோ? என்று உரக்கச்சொன்னான்.

பூவரசன் இடைவெட்டி மறித்தார். 'அது உமக்கு தேவையில்லாத கோரிக்கை அவர்கள் எங்களை நோக்கி கைகளை நீட்டினால் மட்டுமே எங்களின் கைகளை நீட்டுவதைப்பற்றி நாங்கள் யோசனை செய்வோம். இதுவரை அவர்களின் கைகள் எங்களை நோக்கி நீளாததால் நாங்கள் எங்களின் கைகளை இறுக்கக் கட்டிக்கொண்டுள்ளோம். நமது இந்த நிலைப்பாட்டையொட்டி விமர்சனம் வைக்க அவருக்கு உள்ள ஜனநாயக உரிமையை தூக்கிப்பிடிக்கிறோம். சுயவிமர்சனமும் ஏற்போம். ஆனால் எங்களை விமர்சிக்க துணிபவர்கள் கேடித்தனமான பொறுக்கிகளே என்பதிலும் தெளிவாக உள்ளோம்' என்று வேலைத்திட்ம் சொன்ன பூவரசன் மைசூர்ராசாவின் விரல்களைப் பிடுங்கும் வேகத்தில் கைகளைக் குலுக்கிவிட்டுப்போனார்.



இந்தமுறை மைசூர்ராசா வெருளவில்லை. 'தலைக்குமேலே வெள்ளம் போனது இதில் சாண் போனாலென்ன, முழம்போனலென்ன? என்ற பரிபக்குவ நிலையை எட்டிவிட்ட மைசூர்ராசாவை நெருங்கிய அவர் வணக்கம் சொன்னார். அவரை மைசூர்ராசாவுக்கு முன்பின் தெரியாததால் ஒரு அரைவணக்கம் போட்டான். அவர் திடீரென்று 'இப்ப உலகத்தில நடக்கிற பிரச்சனைகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்? என்று கேட்டார். இந்தக்கேள்வியை அவர் கேட்ட லாவகமும், ராகமும் அறுபது, எழுபது வருசமாகவே அவர் இப்படியான கேள்விகளை கேட்டுக்கேட்டே கேள்வி கேட்பதில் அதிகபட்ச 'எக்ஸ்பீரியன்ஸ்' உடையவராகிவிட்டார் என்பதை நிருபித்தன. மைசூர்ராசாவுக்கு பிரச்சனைகளைப்பற்றி பேசுவதில் சராசரி 'எக்ஸ்பீரியன்ஸ்' வந்துவிட்டதால் பருப்பு ஆகாசத்தில்போய் ஒட்டிக்கொண்ட பிரச்சனையை அக்குவேறு ஆணிவேறாக கழட்டி அவரிடம் கொடுத்தான்.

'ஓகே.... பருப்பு விலை கூடிப்போச்சுது எண்டது உண்மை. அப்ப பருப்பின்ர விலையை எப்படி குறைக்க முடியும் எண்டு நினைக்கிறீர்? என்று அவர் இரண்டாவது கேள்வியைப்போட்டார். மைசூர்ராசாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது. பொறுமை கடலிலும் பெரியது என்பதை தெரிந்திருந்த காரணத்தால் தற்காலிகமாக அமைதிகாத்தான். அவர் மைசூர்ராசாவின் முகத்தை பார்க்காமல் அண்டவெளியையே உற்றுப்பார்த்துக்கொண்டு உரையாற்றினார். 'தேசியவாத

... 8ம் பக்கம் பார்க்க....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உரைகல்

## வரலாற்று உண்மைமீது சேறடித்து ஏனம்மா துரோகமிழைக்கிறாய்?

இரண்டாவது முறையும் அம்மாவை தரிசிக்கமுடிந்தமைக்கு நன்றி
சிறு சஞ்சிகை ஒன்றென்கையில் உழைப்பும், ஓர்மமும் போற்றுதற்குரியன. நெஞ்சு நிறைமுத்தம் என்றுமெம் அம்மாவிற்கு.

விமர்சனங்களை வரவேற்கும் அம்மா தாங்கி வந்த படைப்புக்கள் பற்றி....

அம்மாவின் ஆரம்ப உரை இருக்கிறதே அது கூட ஒரு படைப்புத்தான் என்பதை விட அதுதான் பெரும்படைப்பு என்பதுவே சாலப்பொருந்தும். அனைத்துப்படைப்புக்களையும் பாராட்டி, சீராட்டி, வழிகாட்டி அழைத்துச்செல்லும் பொறுப்பிருப்பதால் அந்த உரைதான் முதற்கண் பார்வைக்குரியது. பின்பே மற்றயவை என்பதால் அம்மாவின் (Editorial) ஏடு இட்டோர் இயல் சம்பந்தமாக.....

1. அம்மா கொள்ளும் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள ஆவல்
2. கவிதைகளை சேர்த்துக்கொள்ளும் எண்ணத்திற்கு கைகோர்ப்பு
3. புலம்பெயர் இலக்கியம் பற்றி அம்மாவின் கருத்தோடு முற்றுமுழுதான முரண்பாடு

இம் மூன்றாவது விடயம் தான் அம்மாவின் நம்பகத்தன்மை மீது கேள்வி எழுப்பத்தூண்டுகிறது.

'அண்மைக்காலமாக தமிழில் அறிமுகமாகியிருக்கும் இவ்விலக்கியம் பற்றி...'
என்ற வரிகளைப் பார்க்கையில் இது என்ன புலம் பெயர் இலக்கியம் என்ன தமிழுக்குப்புதிதா? பதினேழு தசாப்தங்களுக்கு முன்பே இலங்கையின் மத்திய மலைநாட்டுக்கு குடியேற்றப்பட்ட தென்னிந்திய மக்களின் இலக்கியங்களையெல்லாம் என்னவென்றழைப்பது? ஏன் பாரதியின் இலக்கியம் கூட ஒரு கட்டத்தில் என்னவாயிருந்தன? சரி, நமது பிரமிள் என்ன அவ்வளவு விரைவாக மறக்கக்கூடிய மனிதரா? ஏதோ இன்றுதான் இலங்கைத்தமிழர்கள் புலம்பெயர் இலக்கியத்தை தமிழிற்கே அறிமுகப்படுத்தியமாதிரி வெறும் புலம்பல் இது ஒன்றும் செவ்வாய்க்கிரகமல்லவே!

'போராட்டத்தில் நம்பிக்கையிழந்து நாட்டைவிட்டு வெளியேறிய பற்றிக்கொள்ளத் தத்துவமின்றி தத்துவங்களின் மீது கேள்வி எழுப்பிக்கொண்டிருக்கிற இன்றைய படைப்பாளிகளிடமிருந்து வாழ்வுமீது நம்பிக்கைதரும் படைப்பெதனையும் எதிர்பார்ப்பது அவ்வளவு உசிதமானதல்ல'
இந்த அம்மா கூறும் படைப்பாளிகள் யாரென்று புரியவில்லை. காரணம் இவர்களெல்லாம் போராட்டத்தில் நம்பிக்கையிழந்தல்ல. போராட்டத்தின் குத்தகைக்காரரால் துப்பாக்கிமுனையில் துரத்திஅடிக்கப்பட்டவர்கள் என்ற உண்மையினை என்ற வரலாற்று உண்மைமீது சேறடித்து ஏனம்மா வரலாற்றுத்துரோகமிழைக்கிறீர்கள்? போராட்டத்தைப்பற்றிக் கதைப்பதற்கு போராட்டக்களத்தில் நின்று எதை இழந்தவள் என்ற தார்மீக உரிமையை அடுத்தமலரில் அம்மா தாங்கிவருவாளா? அன்றைய களத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கே குலை நடுக்கத்தைக்கொடுத்த எத்தனையோ இளைஞர்கள் இன்றும் கையிலும், காலிலும், கழுத்திலுமாய் குண்டுகளைத்தாங்கிக்கொண்டு நரகவேதனையில் துடிக்கிறார்கள் என்பதாவது இந்த அம்மாவிற்குத் தெரியாதா?

'பற்றிக் கொள்ளத்தத்துவமின்றி.....'
ஐயோ அம்மா தத்துவங்களொன்றும் புளியங்கொம்பல்லவே பற்றிக்கொள்வதற்கு. அவை என்ன 'குர்ஆனா' கேள்விக்குட்படாமலிருப்பதற்கு.
மானிட வரலாற்றில் எந்த தத்துவம்தான் நிலைத்திருக்கிறது அம்மா அறிய. ஒவ்வொன்றும் கேள்விக்குட்பட்டே ஆகும். இந்த மனிதன்கூட உயிரினகூர்ப்பின் இறுதிவடிவமல்லவே. ஹெகலிய சிந்தனைகள் மீது கேள்வி எழுப்பப்படாதிருந்தால் உலகிற்கு அரசு பற்றிய மார்க்ஸிய கோட்பாடு கிடைத்திருக்குமா? மனிதனின் பகுத்தறிவு என்பதே கேள்விகேட்பதிலிருந்துதானே தொடங்குகிறது. சிதறடிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் தோல்விக்கு காரணம் மாக்ஸிய இயங்கியலில் தொகுப்பிலுள்ள மொத்தத்துவம், சாராம்சவாதம் என்பவை களைந்தெடுக்கப்படாமையே என்ற உண்மை அம்மாவுக்குப்புரியவில்லையா? மொத்தத்துவம், சாராம்சவாதம் போன்ற ஹெலியக்கூறுகள் களையப்படவேண்டுமென நான்கு தசாப்தங்களுக்கு முன்பே மாக்ஸியத்தின் மீது கேள்வி எழுப்பிய அல்தூசரின் தேவை இன்று உணரப்படவில்லையா? இது ஏதனால்? உலகில் ஒவ்வொன்றும் கேள்விக்குட்படவேண்டும் என்பதால்.
அதிகதூரம் போவானேன்? போராட்டம் புனிதமானது அதன்மீது எந்தஒரு கட்டத்திலும் கேள்வி தொடுக்கப்படக்கூடாது என்ற மாயை தமிழ்தேசியவாத பத்திரிகைகளாலும் சஞ்சிகைகளாலும் கட்டியெழுப்பப்பட்டு எவ்வித கேள்வியும் எழுப்பாமல் பற்றிக்கொள்ளப்பட்ட தமிழீழத்தத்துவத்தின் பெயரில் இன்று இருபதாம்நூற்றாண்டின் இரண்டாம் 'அவுஸ்விச்' (Auswich) ஆக துணுக்காய் மாற்றப்பட்டும்கூட மௌனிகளாக மக்கள் தொடர்ந்தும்....
இந்நிலைதான் எதிர்கால தமிழ்சமூகத்திற்கும் தேவை என்கிறவாதமா அம்மாவிற்கு?

இறுதியாய் ஓர்வரி "ஏடு இட்டோர் இயலில் கண்ணில் படுகிறது. 'வெளிநாட்டாருக்காக இலக்கியம் படைப்பதை எமக்காக.....' என்ன இது! புலம்பெயர் இலக்கியம் தாய்மொழியில் இருப்பது எவ்வளவுக்கெவ்வளவு தேவையோ அதே அளவு தேவை புலம்பெயர் மொழியில் அதைக்கொடுப்பதற்கும் உண்டு. காரணம் நாம் வாழும் சூழல் மக்கள் என்று அனைத்துமே புகலிடமொழியில்தானே இயங்க முடியும். இதைமறுத்து தாய்மொழியில் மட்டும் இலக்கியம் படைப்பதென்பது சுற்றிச்சுற்றியும் சுப்பரின்ர வட்டைக்குள்ள' என்பதில்தான் போய் முடிவதோடு நம்போன்றோரில் பலரால் முடியாத புகலிடமொழி பரிட்சயம் 'பொன்போன்று' பெருமைப்படக்கூடிய ஒருசில படைப்பாளிகள் கொண்டுள்ள அறிவையும் ஆற்றலையும் சிறுமைப்படுத்துவதாகவே அமையும்.
இருந்தாலும் எட்டாப்பழம் புளிக்கும் என்று ஊரே சொன்னாலும் ஊமையனுக்கும் சிரிப்பு வந்துவிடாதா என்ன?

**- ஸ்ராலின், பாரிஸ்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 'சந்திரனைக்காட்ட....'

ஒரு கட்டுரையாயினும், சிறு குறிப்பாயினும் அதன் முழுமையுள் பொருள்தேடுவதே முறையானது. வரி பிரித்துச் சொல்பிரித்துப் பிழைதேட வெளிக்கிட்டுவிட்டால் அதிஉன்னத படைப்புக்கள்கூட தப்பமுடியாது. அது விமர்சகரின் உள்நோக்கத்தையும் சந்தேகமுறச்செய்யும்.

தவறுகள் தெரிந்தே செய்யப்படுபவை அல்ல. அறிவீனத்தாலும் அவை ஏற்படுவதுண்டு.
அம்மாவில் வரும் தவறுகள் உரியமுறையில் சுட்டிக்காட்டப்பட்டால் அம்மா ஏற்றுக்கொள்ளவும் தன்னைத்திருத்திக்கொள்ளவும் தயங்காள்.

நெருஞ்சிகளைகளைக் கால்களுக்குள் தூவிவிட்டு அம்மாவின்நோக்கைத் திசைதிருப்பிக்குழப்பிவிடும் விஷமத்தனமான போக்கினை இட்டு அம்மா மிகுந்த கவலை கொள்கிறாள். தவிர்க்க முடியாமல் இவைகளைக் கடந்துவிட்டுப்போவதும் அம்மாவிற்குத் தவிர்க்கமுடியாது.

ஆயினும், ஸ்ராலின் அவர்களின் விமர்சனம் ஓர் எல்லைக்குட்பட்டிருப்பதால் அம்மா கவனத்திற்கொள்கிறாள்.

1. புலம்பெயர் இலக்கியம் என்ற பதம் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்தபின்னர்தான் தமிழில் அறிமுகமாகியிருக்கிறது என்ற கருத்து அம்மாவைப்பொறுத்தவரை இறுக்கமானது. மலையக இலக்கியம், புலம்பெயர் இலக்கியம் என்றும், பாரதிதான் தமிழின் முதற் புலம்பெயர் பெயர் படைப்பாளி என்ற ஆய்வுகளும் கூட அண்மைய ஈழத்தமிழர் புலப்பெயர்வின் பின்னர்தான் நடைபெறுகிறது. ஸ்ராலின் குறிப்பிடுகிறபடி புலம்பெயர் படைப்பாளிகளை வகைப்படுத்த முனைவோமாயின் கொழும்பிலிருந்து இலக்கியம்படைத்தபடைப்பாளிகள், யாழ்பாணத்தில் பிறந்து மட்டக்களப்பிலிருந்து படைப்புகளைச்செய்த படைப்பாளிகள் என கிட்டத்தட்ட அனைத்துப் படைப்பாளிகளுமே புலம்பெயர்படைப்பாளிகளாகத்தான் கொள்ளமுடியும். சில ஆண்டுகளுக்கு முன் நோர்வே சுவடுகள் இதழில் புலம்பெயர்இலக்கியம் பற்றி சில கருத்துக்கள் வெளிவந்தன. தொடர்ந்தும் இதுபற்றி எவராவது ஆக்கபூர்வமாக எழுதுவார்களாயின் விரும்பத்தக்கது.

2. ஸ்ராலின் குறிப்பிடுகின்ற ஈழப்போராட்டத்தில் துப்பாக்கி முனையில் துரத்தப்பட்ட நிகழ்வுகளை அம்மா மறுக்கவில்லை. துரத்தப்பட்டவர்கள் எல்லோரும் நாட்டைவிட்டு தப்பி ஓடிவரவில்லை என்பதும் மேலதிகமாகச்சேர்த்துக் கொள்ளப்படவேண்டியது. நாட்டை விட்டு தப்பிஓடிவருபவர்கள் போராட்டத்தின் மீது நம்பிக்கையிழநதுதான் வெளியேறுகிறார்கள் என்பது அம்மாவின் வாதம். சிலர் விதிவிலக்காக இருக்கலாம். ஆயினும், வெளியேறிய பின் மீண்டும் சிலருக்கு புதியஅனுபவங்களால் புதிய நம்பிக்கைகள் துளிர்விடுவதும் இயல்பானது. ஆனால் அம்மா கதைக்கமுற்பட்ட விடயம் துன்பம், துயரம், ஓலங்களாக அமையும் இன்றைய புலம்பெயர் இலக்கியம் பற்றியும், படைப்பாளிகள் பற்றியுமே. இன்றைய புலம்பெயர் படைப்புக்களை துன்பம், துயரம், ஓலங்களாக கொண்டால்! அவை அப்படி அமைவதற்கான காரணம் என்ன?

தத்துவங்களின் மீது கேள்வி எழுப்புதலும், தத்துவங்களை விமர்சிப்பதும் இரண்டும் ஒன்றல்ல. தத்துவங்களை விமர்சித்தல் என்பது அவற்றை மேலும் செழுமைப்படுத்தும் நோக்கம் கொண்டது. தத்துவத்தின் மீது விமர்சனம் அவசியமானதும் ஆரோக்கியமானதுமாகும். தத்துவத்தின் மீது கேள்வி எழுப்புதல் அதன் ஆணிவேரையே அசைக்கும் முயற்சி. இன்னொருபுறம் புதியதத்துவததின் தேவையை கோருவது.
தத்துவங்களின் மீது கேள்விகளை எழுப்புக்கொண்டிருக்கின்ற, போரட்டத்தின்மீதும் நம்பிக்கையிழந்த ஓர் படைப்பாளியிடமிருந்து வாழ்வு மீது நம்பிக்கை தரும் படைப்பு உருவாதல் கடினம் என்பதே அம்மா விளங்க முற்பட்டவிடயம். ஆனால் வேறுகாரணங்களும் இருக்கலாம். அவற்றைத்தேடி எழுதியிருந்தாலாவது எவ்வளவு பயனாக இருந்திருக்கும். வாழ்வுமீது நம்பிக்கை தரும் படைப்புக்களை தந்து கொண்டிருக்கும் புலம்பெயர் படைப்பாளிகளையும், படைப்புக்களையும் ஸ்ராலின் இனம் காட்டுவாராயின் அம்மாவின் நோக்கத்திற்கு அது பலம் சேர்க்கும். இன்று பார்த்திபன் என்ற படைப்பாளி ஆய்வுக்குட்பட்டிருப்பது போல.

3. 'வெளிநாட்டாருக்காக இலக்கியம் படைப்பதை எமக்காக.....'
சிலவேளைகளில் வசனத்தெளிவீனங்கள் ஏற்படுபடுமாயின், அவற்றைத்தெளிவாக்கக் கேட்பது வாசகரின் கடமையும், உரிமையும்.
ஆனால், எமக்காக இலக்கியம் படைக்கக்கோருவதை புலம்பெயர்மொழியில் படைக்கக்கூடாது என ஸ்ராலின் திரிப்பதில் அவருக்கு என்ன லாபம் வந்துவிடப்போகிறது?

நாற்பது பக்கங்கள் கொண்ட அம்மாவில் படைப்புக்கள் பற்றிய விமர்சனம் கோரப்பட்ட நிலையில், ஸ்ராலினால் கஷ்ரப்பட்டு மாபெரும் படைப்பாக்கிய அம்மாவின் ஆசிரியர் குறிப்பு திரும்பவும் தரப்படுகிறது.

**புலம் பெயர் இலக்கியம்.**

*புலம் பெயர் இலக்கியம் என்றோ அல்லது வேறாதவது பெனர் விரித்தோ வைத்துவிட்டு கீழ்உட்கார்ந்திருந்து எழுதுவது இலக்கியத்திற்கு அப்பாற்பட்டசங்கதி. ஆயினும் சொந்த நாட்டைவிட்டு - அகதிகளாக - புலம்பெயர்ந்தவர்களால் படைக்கப்படும் இலக்கியம் புலம்பெயர்இலக்கியமாகக்கொள்ளப்படுகிறது.*

*அண்மைக்காலமாக தமிழில் அறிமுகமாகியிருக்கும் இவ்விலக்கியம்பற்றி, இவை வெறுமனே துன்பம், துயரம், சோகம், என வெறும் புலம்பல்களாக - ஒப்பாரிகளாக மட்டுமே அமைகின்றன. வாழ்வுமீதான நம்பிக்கை தரும் இலக்கியங்களாக எதையும் அடயாளம் காணமுடியவில்லை என நண்பர் ஒருவர் இறுக்கமான கருத்தொன்றினை முன்வைக்கிறார்.*

*போராட்டத்தின் மீது நம்பிக்கையிழந்து நாட்டைவிட்டு வெளியேறிய, பற்றிக்கொள்ளத் தத்துவமின்றி தத்துவங்களின் மீது கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கிற இன்றைய படைப்பாளிகளிடமிருந்து இவ்வாறான வாழ்வு மீது நம்பிக்கை தரும் இலக்கியங்களை எதிர்பார்ப்பது அவ்வளவு உசிதமானதல்ல. இது புலம்பெயர்ந்த இலக்கியத்திற்கு மட்டுமல்ல பொதுவான சகல இலக்கிய வகையறாக்களுக்கும் பொருந்தும்.*
*ஆயினும் துன்பப்படும் மனிதர்கள் மீதான மனிதாபிமானப்பார்வையும், உண்மையின் தேடல் மீதான நேர்மையான இலக்கியங்களும் ஆரோக்கியமானவையே.*
*தவிர 'வெளிநாட்டார் எமைப்பார்த்து தலைவணக்கம் செய்திடல் வேண்டும்' என பிறருக்காக இலக்கியம் படைக்கும் போக்கினைத்தவிர்த்து எமக்காக நாம் இலக்கியம் படைக்கும் போக்கினை வளர்த்தெடுத்தல் வேண்டும் எனவும் 'அம்மா' கோருகிறாள். ('அம்மா'-2)*

**"சந்திரனைக்காட்ட சுட்டுவிரலினைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்"** என்ற அறிஞரின் ஒருவரின் கூற்றுத்தான் அம்மாவிற்கும் நினைவிற்கு வருகிறது.

**- 'அம்மா'**
*20. 08. 1997*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தடைகளையும் தாண்டி வெற்றிகொண்டு முன்னேறுவோம்!

.....புலம்பெயர்ந்து வாழும் நம்மவரிடையே தமிழுக்கு அணிசேர்க்க தாங்கள் எடுக்கும் முயற்சிக்கு பாராட்டுக்கள். எம் முயற்சிக்கு பல தடைகள் வரலாம். அவற்றையெல்லாம் வெற்றிகொண்டு முன்னேறுவோம். அதையே நாமும் செய்து வருகிறோம்.

இரண்டாவது 'அம்மா' நறுமணம் வீசுகிறாள். இதனைப்போல் அவள் தொடர்ந்தும் பிரசவிக்க எமது மன்ற இயக்குனர் நீ. மரியசேவியர் அடிகளாருடன் சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம்.

- இ. பிரான்ஸிஸ் ஜெனம்
(இணைப்பாளர், திருமறைக் கலாமன்றம்)
Centre for Perfoming Arts, Suite 5/6, 19, Milagiriya Avenue, Colombo -4.

## "நம்பிக்கைகள் மின்னலிடுகின்றன..."

உச்சரிக்க, நினைக்க, திறந்தவெளியில் சத்தமிட்டுக்கதற, வேதனைப்படும் வேளை...என...எம்முடன் கலந்து நிற்கும் சொல்லல்லவா? 'அம்மா'
தகுந்த பெயர்த்தெரிவு.
உலகில் எத்தனையோ அம்மாக்கள். ஆனாலும் அவரவர்க்கு அவர்களது அம்மா தனித்து உயர்ந்து நிற்பாள்.
இதற்கு இணையானது எமது அம்மாமொழி. 'மெல்லத்தமிழ் இனி உதிர்ந்து காய்ந்து சாகும்' என்று யாரோ சாபமிட்டது போல, இலங்கைத்தமிழ் சிங்களத்தமிழாக, ஆங்கிலத்தமிழாக, பிரெஞ்சுத்தமிழாக, ஜேர்மன்தமிழாக......?
பெருமூச்சு தானாக வெளிப்படுகிறது.
இல்லை.....மீண்டும் எழ மீளவும், மீளவும் துளிர்க்கிறது. காலம் விரிந்து கிடக்க நம்பிக்கைகள் ஆங்காங்கே மின்னலிடுகின்றன. இந்த வகையில் அம்மா எழுத்துலகில் ஒருபதிவேடு. சிறுகதை இதழாக அம்மா தனித்து நிற்கிறாள்.
அம்மாவிடம் எத்தனை கதைகேட்டிருப்போம்! எங்கள் பழக்கவழக்கம், கலாச்சாரம், பரிவு, உறவு, அறிவு என....பல்கலைக்கழகமாகவல்லவா வழிகாட்டினாள். இப்படியாக இந்த அம்மாவும் உறுதியுடன் வரலாறு படைத்திட வாழ்த்துக்கள்.
- "தனிமரம் அநாமிகன் "

பிறஸ்டு, பிரான்சு

## கடிதங்களுக்கு அதிக பக்கங்கள் தேவையா?

அம்மா கிடைத்தாள். அவளின் முதலாவது தரிசனம் கிடைக்காதது எத்துணை பேரிழப்பு என்பதை வாசகர் கடிதங்கள் குதறிஎடுத்துவிட்டன.
பார்த்திபன் சிறுகதை பற்றி நாலுவார்த்தை எழுதினால்தான் மனசுதேறும்போல்.
அண்மைக்காலமாக இலங்கை இராணுவத்தின் பாலியல்சேஷ்டைகள், தமிழ்ப்பெண்கள்மீது அத்துமீறி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை இலங்கையர்யாரும் அறியாமல் இருக்கமாட்டார்கள். போர்க்கால, சிறுவர் உளவியல் தாக்கம் குறித்து, பார்த்திபன் ஆழ்ந்த அவதானம் பெற்றுள்ளதாக தெரிகிறது. அத்தடன் இராணுவத்தைக்கண்ட பெண்ணொருத்தியின் மனோநிலையையும், அதைத்தொடாந்து தாயைக்காணாது பரிதவிக்கும் சிறுவன் ஒருவனின் மனோஅபாயமும், வெகுதுல்லியமாக, நிகழ்கால இராணுவ கெடுபிடிகளை வைத்துப் பின்னப்பட்டுள்ளன.
பொ. கருணாஹரமூர்த்தி, ஷோபாசக்தி ஆகியோரிடம் நல்லசிறுகதைத்தன்மையும், விஷயங்களைக்கையாளும் நுட்பமும் வாய்க்கப்பெற்றிருக்கின்றது.

மொத்தத்தில் அம்மாவின் வருகை, காத்திரமான சிறுகதைகளையும், புதிய படைப்பாளிகளையும் அறிமுகப்படுத்துகின்றது.
எனினும்கடிதங்களுக்கு அதிகபக்கங்களை ஒதுக்கிவிணாக்கிவிட்டீர்கள்...

- ஓட்டமாவடி அறபாத், இலங்கை

## ஷோபா சக்தி தொடரவேண்டும்!

........ஆராவது அடிக்கடி ஞாபகப்படுத்தித்தான் என்ரை சோம்பலை முறிக்கவேண்டியிருக்கு எண்டதை நினைக்க வெக்கமாயிருக்கு.

ஷோபாசக்தியின் 'எலிவேட்டை' படிக்கும் போது பாதித்தது. கதை சொல்லப்படுகின்றவிதத்தில் கரு மனதைத்தொடுகின்றது. கதையில் ஏராளமான செய்திகள். அவை ஒவ்வொன்றும் தமக்குரிய உணர்வுகளைத் தாராளமாக உருவாக்கிவிடுகின்றன.

இன்று ஐரோப்பாவில் பெரிதாக அடிபடுகிறவிசயம் சிறுவர்மீதான பாலியல் வக்கிரம். மலிந்துபோய் கிடக்கிற பாலியல்தூண்டுதல்காணல் இன்ரநெற் வரை காமம் தேடுகிறார்கள். இங்கே சரிவராதவர்கள் தங்கள் பணத்தின்மூலம் மூன்றாம் உலகநாடுகளில் உல்லாசம் தேடுகிறார்கள்.

போர் நடக்கும் நாடுகளில் இந்த பாலியல்வன்முறை ஒரு அரசியல் ஆறுதலாயும் இருக்கிறது.
இனஅழித்தொழிப்புக்கென்றே சிறப்பாகத்தயாரிக்கப்பட்ட சிங்கள இராணுவம் பள்ளிக்கூடம் போகும் கிருஷாந்திகளைத் தேடி அலைகிறது. கொழும்பு வாழ்தமிழ் முதலாளிகளுக்கு சுவர்ணமாலிகளின் குடும்ப பலவீனம் தெரிகிறது. புகுந்து விளையாடுகிறார்கள்.

சொல்லவேண்டிய விஷயம். இந்தவகையான கருவைத்தேடுவதற்குப் பின்னாலுள்ள சமூகப்பார்வை ஊக்குவிக்கப்படவேண்டியது.

அம்மா-2 ல், கதை பற்றிய கடிதங்களும் படித்தேன். சிலர் சொல்லியிருப்பதுபோல பிரான்ஸ்பற்றிய மாயை கதையில் தெரிகிறதுதான்.
ஆனால் வெளிநாட்டுக்குத் தேவன் வருவதுதான் தீர்வா என்று ஷோபாசக்தியிடம் கேட்பது நியாயமாகத் தெரியவில்லை.

தனிமனிதர்கள் தாங்கள் சிக்குண்டபிரச்சினைகளிலிருந்து தப்ப, அந்தநேரத்தில் தமக்கு என்ன தோன்றுகின்றதோ அதையே செய்கிறார்கள். இது சாதாரண மனிதஇயல்பு. இன்றுவரை பல இலட்சம் ஈழத்தமிழர்கள் தமிழீழத்திற்கு வெளியே.
போராட்ட சக்திகள் இதிலிருந்து வேறுபட்ட பிரச்சினைக்கான அரசியல் தீர்வைத் தேடுகின்றன.
தெருவில் ஒட்டுகின்ற சுவரொட்டிக்கும் சிறுகதைக்கும் வித்தியாசம் இருக்கட்டும்!
மற்றும்படி, சாக்கால்முடுவது யதார்த்தமா இல்லையா என்ற ஆய்வுகளைவிட சமூகத்தளத்திலான விமர்சனங்கள் ஷோபாசக்திக்கு உதவும்.

இரண்டாவது கதையான காய்தலும் பிடித்துப்போகிறது. நீளத்தைக் குறைத்தால் கருவைச்சுற்றிய இறுக்கம் வந்திருக்கும் போல்படுகிறது. மனைவியை ஊரில் விட்டுவிட்டு வந்திருக்கின்ற கணவன்களினதும், இன்னும் காத்திருக்கின்ற தனியன்களினதும் ஒருவகை உணர்வைச் சொல்லியிருக்கிறது.
இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் தொடப்படாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்தும் இருட்டில்.
ஷோபா சக்தி தொடரவேண்டும்.
**- பார்த்திபன், ஜேர்மனி**

**அம்மா கிடைத்து.**

பார்த்திபனின் முதல் கதை படித்தேன்.
அந்தக்குழந்தையினுடைய அந்தநேரத்து மனநிலையை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படி எத்தனையோ இங்கு நடக்கின்றன.
**சி. புவனேஸ்வரி, கோப்பாய்.**

**ஆசிரியர் அவர்களுக்கு,**

திரு. வாசுதேவன் அவர்களால் எனக்கு சேர்ப்பிக்கப்பட்ட கடிதத்தினை அம்மாவில் பிரசுரிப்பதே நல்லது. உங்களின் வற்புறுத்தலின் பேரில் என்னால் முடிந்தளவுக்கு மொழிபெயர்க்கப்பட்டதே இக்கதை. தவறுகள் இருந்திருக்கலாம். ஆனால் கருத்துச்சிதைவு ஏற்பட்டிருக்காது என்று நம்புகிறேன்.
**- சந்திரிகா சண்முகராஜா**

## மொழி பெயர்ப்பு என்பது துரோகச்செயலே!

**செல்வி. சந்திரிகா சண்முகராஜா அவர்களுக்கு,**

அம்மா இதழில் நீங்கள் மொழிபெயர்த்த "Une partie de Campagne" என்ற Maupassant ன்சிறுகதையை வாசிக்கும்சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்வடைகிறேன். அனைத்திற்கும் முதலில் தங்களது இலக்கியவேட்கைக்கும், தமிழ் மொழிக்குத் தற்போதும் எதிர்காலத்திலும் நீங்கள் வழங்கவுள்ள சேவைக்கும் முன்கூட்டியே பாராட்டும், நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன்.
மொழிபெயர்ப்பு என்பது ஒருவகையில் இலகுவானது, இன்னொருவகையில் மிகவும் கடினமானது. இதில் இரண்டிற்கும் இடைப்பட்ட மூன்றாவது நிலை என்று ஒன்று இல்லை.
அதுவும் இலக்கிய மொழிபெயர்ப்பு என்றுவிட்டாலோ, அது இலகுவாக அமைவது அரிதே. இவ்வகையில் தங்களின் துணிவிற்கு எனது பாராட்டுக்கள்.
எவை எவ்வாறிருப்பினும், இம்மொழிபெயர்ப்புப் பற்றிய சில கருத்துக்களை தங்களின் எதிர்கால தேவைகருதி முன்வைக்கலாம் எனக்கருதுகிறேன்.
பூரண மொழிபெயர்ப்பு என்றொன்றில்லை. மொழிபெயர்ப்பென்பது நிஜமாகப்பார்க்குமிடத்து ஒரு துரோகச்செயலே.
(Traduire, C'est trahir)
இருப்பினும், படைப்பாளியின் நோக்கத்தையும் அவன்கூறவந்த விடயத்தையும், 'கூறும்பாணி' பிறழாது இன்னொரு மொழிக்குள் கொண்டுசெல்லவேண்டியது மொழிபெயர்ப்பாளர்களின் தலையாய கடமையாகும்.
இத்தகைய கண்ணோட்டத்தில், தாங்கள் இந்தக் கடமையிலிருந்து தவறிவிட்டீர்களோ என அச்சம் தோன்றுகிறது. மூலத்தையும், தங்களின் மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து பல வரிகள் விடப்பட்டுள்ளது தெரிகிறது. ஓரிடத்தில் பந்தியொன்று முழுமையாக கைவிடப்பட்டுள்ளது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், கைவிடப்பட்ட அந்தப்பந்தியில் Maupassant தனது ஆழமான, மிகவும் துல்லியமான நுணுக்கத்தின் மூலம் சிலவிடயங்களை தன்மைகோணாமல் கூறியுள்ளார். இக்கைவிடல் வேண்டுமென்று தீர்மானமாகச் செய்யப்பட்டதா என்பதை அறியவிரும்புகிறேன்.
பல இடங்களில் வசனங்களின் 'துண்டாடல்களினால்' அர்த்தச்சிதைவிற்குள்ளாகியுள்ளன.
சில இடங்களை வாசிக்கும்போது 'கொடூரம்' நிகழ்ந்திருப்பதற்கான உள்ளுணர்வு எனக்குள் எழுந்ததும் உண்மையே.
மூலத்தில் இல்லாத சொற்களும், வசனஅமைப்புக்களும் மொழிபெயர்ப்பில் உண்டு. இத்துடன் மூலத்தின் பிரதியொன்றில், கைவிடப்பட்ட, அர்த்தம் சிதைக்கப்பட்ட இடங்களில் மையிட்டு உங்களிற்கு அனுப்பிவைக்கிறேன். எதிர்கால மொழிபெயர்ப்புகளில்இன்னமும் முன்னேற்றம் வேண்டுமெனவும் வேண்டி நிற்கிறேன்.
**- க. வாசுதேவன்**
22, Rue Jean Moulin, 94500 Vincennes, France

## செல்வி. சந்திரிகா சண்முகராஜா விற்கு வாழ்த்துக்கள்!

.....அம்மா 2வது இதழ் படித்தேன். படைப்பாளிகள் கனமான கருத்துக்களை அம்மாவிடம் கையளித்துள்ளார்கள்.
படைப்புக்கள் எல்லாமே படிக்கக்கூடியனவாய் உள்ளன.
பார்த்திபன் சொந்தமண் பிஞ்சுகளை நினைவூட்டி விம்மவைக்கிறார்.
யமுனா ராஜேந்திரன், ரஜாகரன் ஆகியோரின் கட்டுரைகள் கடுமையாகத்தான் இருக்கின்றன.

செல்வி. சந்திரிகா சண்முகராஜாவின் மோபாசான் மொழிபெயர்ப்புக்கதையை பாரிஸ் ஈழநாடும் மறுபிரசுரம்செய்திருந்தது. பன்னிரெண்டு வயதில் புலம்பெயர்ந்து ஆறுவருடங்கள் அந்நியபாஷை படித்து தமது பதினெட்டு வயதில் Maupassant சிறுகதை ஒன்றினை மொழியாக்கம் செய்துள்ளமையை பாராட்டாமல் இருக்கமுடியாது. பிரெஞ்சு-தமிழ் இருமொழிகளிலும் தேர்ச்சிபெற்றவர்கள், அல்லது ஏற்கனவே மொழிபெயர்த்தவர்கள் செல்வி. சந்திரிக்காவுக்கு துணையாக இருந்திருக்கலாம். ஆனாலும் மொழியாக்க முயற்சியில் துணிகரமாக இறங்கி வெற்றியீட்டியுள்ளார் என்றே சொல்லவேண்டும்.

ஒக்ரோபர் '95 ல் பாரிஸில் இடம்பெற்ற ஒருமொழியாக்கநூல் வெளியீட்டுவிழாவுக்கு அழைப்பு பெற்று பார்வையாளராகச் சென்றிருந்தேன். ஒரு இலங்கை பௌத்தகுரு- மண்டாவெல பணாவன்ச என்பவர் viragaya என்னும் சிங்கள நூலை பிரெஞ்சில் (Le Non Attachement) மொழியாக்கம் செய்திருந்தார். சிங்கள பிரபல நூலாசிரியர் மாட்டின் விக்கிரமசிங்க 1957ல் எழுதிய Viragaya 1985 ல் Ashley Malpe என்பவரால் "The Way of Lotus» என ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டது. 1992ல் சுந்தரம் சௌமியன் இதேநூலை 'பற்றற்ற வாழ்க்கை' என தமிழில் மொழிபெயர்த்தார். பௌத்தகுரு- மண்டாவெல பணாவன்ச அவர்கள் 1983 ல் UNO - Geneva வில் நீதி வழங்கவேண்டும் எனக் குரல்கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரைப்போல் ஏன் எம்மவர்கள் மொழிக்குத்தொண்டாற்றக்கூடாது என ஏங்கினேன். பாரிஸில் பிரெஞ்சு - தமிழ் மொழிபெயர்ப்பாளராக இயங்கும் திரு. கதிர்காமநாதன் தமிழ்நூலை பிரெஞ்சுக்கு மொழியாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்பதை அறிந்து ஓரளவில் மனம் ஆறுதலானது.
புலம்பெயர்ந்த தமிழருக்கு பிரெஞ்கற்பிப்பதற்கு முதன்முதலில் தமிழ்பாடசாலை அமைத்து இன்றுவரை பிரெஞ்ஆசானாக கடமையாற்றிவரும் எஸ். சச்சிதானந்தம் அவர்கள் பிரெஞ் தமிழ்அகராதி, பிரெஞ் இலக்கணம், வேறும் கலாச்சார நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். வேறும் பல அரியமுயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என்பதை அறியும்போது மனம் பெருமை கொள்ளத்தான் செய்கிறது.
இவர்கள் வரிசையில் செல்வி. சந்திரிகாவும் தமதுபெயரை பதிவாக்கவேண்டுமென்பது செந்தமிழர் ஆசை.

**- செந்தமிழர், சேர்ஜி பொந்துவாஸ், பிரான்ஸ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுகதை அதிக உழைப்பை வேண்டிநிற்பது

முதலாவது அம்மாவை விட இரண்டாவது அம்மா பலமடங்கு காத்திரமாக வந்துள்ளது. இவ்வாறான ஒரு சஞ்சிகைக்குரிய தேவைபரந்தஅளவில் இன்னும் இருப்பதாகவே உணரமுடிகிறது என்று தாங்கள் எழுதியது முற்றிலும் சரி. அதற்காக கடுமையாக உழைக்கவேண்டிய பொறுப்பு எங்களெல்லோருக்கும் உண்டு.

சிறுகதைகளுக்கும், சிறுகதைகள் பற்றிய விமர்சனத்துக்குமான அம்மாவின் இம்முயற்சி எனது அறிவுக்கெட்டியவரையில் தமிழிதழியல் வரலாற்றில் புதியது என்றே தோன்றுகிறது. ஒரு நீண்டகாலத்திற்கு அம்மா இவ்விதம்வரின் தமிழ்சிறுகதைத்துறையில் பரவலான சாத்தியங்கள் பலவற்றை அம்மா சாதிக்கமுடியும். மேலும் சிறுகதைகள் சம்பந்தப்பட்டது என்ற அம்மாவின் வரையறையோடு நானும் உடன்படுகிறேன். ஏனெனில் கவிதையைவிட சிறுகதையே அதிக உழைப்பை வேண்டி நிற்பது. இந்த உழைப்பு ஈழத்து இலக்கிய மரபில் மிகக்குறைவாக இருக்கிற படியினால்தான் ஈழத்தில் சிறுகதை அவ்வளவு வளர்ச்சியடையவில்லை. உன்னதமான சில ஈழத்துச்சிறுகதைஞர்களும் ஒவ்வொருதொகுப்புகளுடன் நிறுத்திவிடுகின்றனர். சிறுகதைகளுக்கு மட்டுமே என ஒருஇதழ் வெளிவருகிறபோது அது சோம்பேறி எழுத்தாளர்களுக்கு ஒரு உந்துதலாக இருக்கும்.

அம்மாவை புலம்பெயர் இலக்கியஇதழ் என்ற வரையறைக்குள் உட்படுத்தாது ஈழ, தமிழக எழுத்தாளர்களையும் இணைத்து தமழ்ச்சிறுகதை வரலாற்றில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும் எனக்கருதுகிறேன்.

2வது அம்மாவில் வந்த கதைகளில் 'எனக்குப்பிடித்த கதை'பகுதியில் வந்த வண்ணதாசனின் 'சொல்ல முடிந்தது' கதைதான் சிறப்பாக இருந்தது எனினும் அதுதான் தமிழில் வந்த உன்னதகதை என்று கருதவில்லை. வண்ணதாசனின் கதைகளிலுள்ள குறைபாடு என்னவெனில் ஒரேமாதிரியான மொழிநடைக்குள் அவைபோய் அகப்பட்டுக்கொண்டதும் அதிலிருந்து மீளமுடியாமல் இருப்பதுமேயாகும். ஒன்றுக்கு மேற்பட்ட அவரது சிறுகதைகளைப்படிக்கின்ற வாசகர்கள் குறித்த மொழிநடையின் கோலங்களை இனங்கண்டு கொள்கிறபோது சலிப்படைந்து விடுகிறார்கள். போலிகள் அற்ற உண்மைக்கலைஞனான வண்ணதாசன் சுபமங்களாவின் பேட்டியின்போது தனக்குநேர்ந்த இந்த அவலம் வேறுஎந்த நல்லஎழுத்தாளருக்கும் நேரக்கூடாது என்று வேண்டுகிறார். உண்மைதான். குறித்த ஒரேமொழிநடைதான் புதிய வெளிப்பாட்டுத்தளங்களைத்தடுக்கிறபோது ஜெயமோகன்சொல்லுகிற புதிய தரிசனங்களையும் தடுக்கிறது.

வண்ணதாசனின் குன்னக்குளம் டொமினிக் எனக்கு சுந்தரராமசாமியின் ஜோசேப் ஜேம்சை(ஜே. ஜே. சிலகுறிப்புக்கள்) நினைவுபடுத்துகின்றான். இவ்வாறு சொல்வதன்மூலம் ஒருவரை மற்றவர்பிரதிபண்ணியிருக்கிறார் என்று முட்டையில் மயிர்பிடுங்கும் மாதிரியான விமர்சனத்தை நான் முன்வைக்கவரவில்லை. ஆனால் ஜேஜேக்கும் டொமினிக்குக்குமான பல ஒற்றுமைகளால் (ஜேஜே சிலகுறிப்புக்களை முன்னமே படித்திருந்ததாலும்) இந்தக்கதை என்னில் பாதிப்பேற்படுத்தத் தவறிவடுகிறது. டொமினிக், ஜே.ஜே. இருவருமே ஈவிரக்கமற்றவகையில் விமர்சனத்தை முன்வைப்பவர்கள். ஜேஜேயும் முடாக்குடிகாரன். ஈரல் கருகியே அவன் மரணிக்கிறான். நாவலிலும் ஓர் எழுத்தாளர் மகாநாடு. அங்கும் போலி எழுத்தாளர்கள் நடாத்தும் திருவிளையாடல்கள் நினைத்து ஜேஜேயும், பாலுவும் வருந்துகின்றனர். நாவலில் ஜேஜேயின் ஆளுமையால் ஆகர்சிக்கப்பட்டு கதைசொல்வது பாலு. இங்கு டொமினிக்கின் ஆளுமையால் ஆகர்சிக்கப்பட்டு கதைசொல்வது இந்தக்கதையை நகர்த்திச்செல்லும் பாத்திரம். மிகச்சிக்கலான ஆங்கில மொழிநடையிலிருந்து கேப்ரியல் கார்சியா பற்றிய கட்டுரையை தமிழ்த்தன்மையுடன் யமுனா மொழிபெயர்த்திருந்தார். யமுனாவின் வரவு தமிழ்சூழலில் ஒரு புரட்சி. பாரிஸ் ஈழமுரசு யமுனாவுக்குரிய கௌரவம் அளித்து அவரது எழுத்துக்களைப் பிரசுரிக்கிறது. ஆனால் தமிழ்ப்பத்திரிகைச்சூழலில் காத்திரமான எழுத்தாளர்களுக்கு கௌரவம் அளித்து அவர்களது எழுத்துக்களைப் பிரசுரித்த வரலாறு இல்லை. யமுனாவின் சிறுகதைதான் ஒரு டயரிக்குறிப்பு என்ற மட்டில் நின்றுவிடுகிறது.

இவ்விதழில் மொழிபெயர்ப்புக்கதையோடு, கருணாஹரமூர்த்தி, ஷோபா சக்தி ஆகியோரின் கதைகளும் நல்லகதைகளாகத் தேறுகின்றன. பார்த்திபனும், பா. பிரதீபனும், நல்லபடைப்புக்களைப் படிப்பதன் மூலம் புதியசாத்தியங்களை உள்வாங்கி சிறுகதை எழுதமுயலவேண்டும். புகலிடச்சூழலில் அதிக நம்பிக்கை தருகிறவர்களாக ஏற்கனவே தொகுதிஒன்றை வெளியிட்ட பொ. கருணாஹரமூர்த்தி, குமர்மூர்த்தி (கனடா), மற்றும் சுரேஷ் சுப்பிரமணியம் (ஜேர்மனி), கலைச்செல்வன், ஜீவமுரளி (பனியும் பனையும்), ஜோர்ஜ் குருஷேவ் (கனடா) முதலியோர் உள்ளனர். எனக்குக் கிடைத்த புகலிட இலக்கியங்களின் அடிப்படையிலேயே இவற்றைக்கூறுகிறேன். இதைவிட வேறு பலரும் இருக்கக்கூடும்.

பதினெட்டுவயது சந்திரிகா சண்முகராஜா மோப்பாசானுடைய சிறுகதையை மொழிபெயர்த்தமை நிறைந்த சந்தோசத்தையும் நம்பிக்கையையும் தருகிறது. எண்பதுகளுக்கு முதல் கலை இலக்கியம் பெண்ணியம் அரசியல்போன்ற துறைகளில் காத்திரமான நவீனசிந்தனைகளை உள்வாங்கிய பெண்ஆளுமைகள் ஈழத்திலிருந்து வரவில்லை என்றே கூறலாம். புகலிடச்சூழலில் நிருபா, சந்திரிகா என்று ஒருகாத்திரமான பெண்ஆளுமைகள் இருப்பது ஒருமாற்றத்தின் அறிகுறியே. சந்திரிகாவின் விருப்பத்திற்கும், ஈடுபாட்டிற்கும் ஏற்ப அவரது பாடங்களைத்தெரியவும், இவ்வாறான மொழிபெயர்ப்புக்களைச்செய்யவும் சுதந்திரம் வழங்கி ஊக்குவிக்கின்ற அவரது பெற்றோர்கள் மெச்சப்படவேண்டியவர்கள். இங்கே அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற தமிழ்ப்பெற்றோர்களோ தங்களின் பிள்ளைகளின் விருப்பையோ, ஈடுபாட்டையோ திறமையையோ கவனத்திலெடுக்காது பணமீட்டும் மருத்துவம் முதலிய துறைகளைத்தெரிவுசெய்யுமாறு வருத்திச் சித்திரைவதை செய்கின்றனர்.

இலங்கை அனுபவத்தில் ஒருவரின் தமிழ்ப்புலமை பாடசாலைக்கல்வியால் வருவதல்ல. இலங்கையின் க.பொ.த. (சா.த / உ.த) தமிழ் பாடவிதானம் நவீன தமிழ் இலக்கியங்களை உள்வாங்கித்தயாரிக்கப்பட்டதல்ல. இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னய தமிழ் இலக்கியங்களையும், இருபதாம் நூற்றாண்டில் மு. வரதராசன் போன்ற ஆசாடபூதி, கட்டுப்பட்டித்தன பிற்போக்குவாதிகளின் எழுத்துக்களையும் கொண்டே உருவாக்கப்பட்டது. இது மாணவர்களை தமிழிலிருந்து அந்நியப்படுத்தி மழுங்கடிக்கவே செய்கிறது. எனது அனுபவத்தில் எனது தமிழ்மேம்பட்டது ரத்னபாலா, கோகுலம் மற்றும் பத்திரிகைகள் வாசித்ததாலேயே. இதே அனுபவத்தையே வேறுபல எனது நண்பர்களும் பெற்றுள்ளனர். 1995ம் ஆண்டில் புதிதாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த(உ.த.) பாடவிதானத்தில் மட்டும் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆர். சண்முகசுந்தரத்தின் 'நாகம்மாள்' நாவல் பாடப்புத்தமாக்கப்பட்டுள்ளதோடு, புதுமைப்பித்தன் மற்றும் மகாகவி முதலிய நவீன தமிழ் இலக்கியவாதிகளின் படைப்புக்களும் இணைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

**- நட்சத்திரன் செவ்விந்தியன்.**
*சிட்னி, அவுஸ்திரேலியா.*
Arun Ampalavanar,
7/50 Lane Str, Wentworthville, 2145 Australia.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**படைப்பானது யதார்த்தத்தைக் கேள்விக்குட்படுத்துவதையும், மனிதனின் நல்ல பண்பை வளர்த்தெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்!**

அம்மா 2 வெளியாகி இருந்தது. இவ் இதழ் அம்மா முதலாவது இதழைவிட உள்ளடகத்தில் பின் தங்கிப் போனது கவனத்திற்குரியது. பார்த்திபன் கதை எடுப்பின் யதார்த்தத்தை கொண்டு வந்த போக்கில், யுத்தமும், அதன் கொடூரங்களையும், மனித துன்பங்களையும் கதை வெளிப்படுத்தியிருந்தது. தமிழ் ஈழ விடுதலைப்போரில் 1985களின் பின், இராணுவ முகாங்களுக்கு அண்மையில் வசித்தவர்கள், 1990இன் பின் மண்ணில் வசித்தவர்களின் நடைமுறை வாழ்வு போராட்டத்தின் ஒரு பிரதிதான் இக்கதை.
பார்த்திபன் கதையின் போக்கில் உள்ள விமர்சனம், இதே அம்மா இல் 'கிழக்கும் மேற்கும்' என்ற புத்தகத்தை விமர்சிக்கும் போது ஓரளவுக்கு குறிப்பிடவுள்ளேன்.

அடுத்து ஷோபாசக்தியின் கதையை எடுப்பின் தீவிர விமர்சனத்துக் குரியது. நான் இக்கதையில் ஒட்டி ஷோபாசக்தியுடன் நீண்ட நேரம் விவாதிக்க முடிந்தது.
அவர் ஓரினச் சேர்க்கையை அடிப்படையில் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் யதார்த்ததைப்பதிவது ஒரு எழுதாளனின் பணிஎன சடுதியாக குறிப்பிட்டார்.
கதையில், ஒருவர் தனது குடும்பத்தைவிட்டு அந்நியப்பட்ட மண்ணில் வாழ்கின்றார். மற்றவர் உதவி, உறவினர் இன்றி வாழும் இடத்தில், வேலையிடத்தில் சந்திக்கும் இருவர் நண்பர்கள் ஆகின்றனர். இதைப் பயன்படுத்தி ஓரினச் சேர்க்கைக்கு முயலும்போது விலகி ஓடும், ஒரு பாத்திரம் பின் தனது இயலாத நோயின் போது அரவணைத்துக் கொள்கிறது. சிலவேளை நடைமுறை யதார்த்தம் அவர்கள் மீது திணிக்கலாம்.
ஆனால், சிந்திக்க முடியாத, போராட முடியாத இவர்களின் இந்த யதார்த்தம் என்பது ஒரு சமூகத்துக்கான தீர்வு அல்ல. ஓரினச் சேர்க்கை தோற்றம் தொடர்பான நீண்டவிவாதத்தை தூண்டிவிடும் என்பதால் தவிர்க்கின்றேன். ஒரு படைப்பாளி இச் சமூக யதார்த்தத்தை முதலில் காணவேண்டும். அடுத்த கட்டத்தில் அந்த யதார்த்தம் எந்த வர்க்கத்திற்கு சேவை செய்கின்றது அல்லது எதனுடையது எனப் பார்க்க வேண்டும்.
இதன் மீதான சிறு விமர்சனம், கடுமையான விமர்சனம் செய்யும்போது படைப்பு அடுத்த கட்டத்துக்கு நகர்கின்றது. அதையே மாற்று கோட்பாட்டை முன் வைக்கும்போது அல்லது மாற்றை வரவேற்கும் போது படைப்பு மிக உயர்ந்த இடத்துக்கு நகர்கின்றது. படைப்பு எப்போதும் மனிதனின் யதார்த்தத்தை கேள்விக்கு உட்படுத்துவதும், அதேநேரம் மனிதனின் நல்ல பண்பை உயர்த்துவதையும் நோக்கமாகக்கொண்டிருத்தல் வேண்டும்.

அடுத்து பொ. கருணாஹரமூர்த்தி நடைமுறையில் சந்தித்த யதார்த்த நிகழ்வை தொகுத்துள்ளார். இது அவர் கண்ட ஒரு நிகழ்வு.
இதற்கூடாக அவர் எதைச்சொல்ல முயற்சிக்கிறார் என்ற கேள்வி எழுகிறது. ஒரு வெளிநாட்டவன் இன்னொரு வெளிநாட்டவன் பற்றிய ஒரு மனப் பிராதியாக கூட இது இல்லை. ஏனெனில் ஒரு தொடர் நிகழ்ச்சியின் பிரதிபலிப்புத்தான் இத் தொகுப்பு.

ஒரு சம்பவத்தை சொல்வதால் ஆயிரம் ஆயிரம் சம்பவத்தை சந்திக்கும் மனிதன், வழமையாக கேட்டுக் கொள்வதற்கு அப்பால் என்னதான் நடந்துவிடும்? மனிதர்கள் தமக்கும் கதைப்பதை சொல்வதை, எழுத்தில் வடித்து எழுத்துக்கு அப்பால்
இந்த தொகுப்புரை நகரந்துவிடாத ஒரு விடயமாக எஞ்சிவிடுகின்றது.

அ.இரவி தனக்குப் பிடித்த கதை எனக்கூறி வண்ணதாசனின் கதை ஒன்றை அம்மா 2இல் கொண்டு வந்திருந்தார். பிடித்தது எது? இக்கதை என்னதான் பேசுகின்றது என யாருக்கும் தெரிவது இல்லை. அது இவ்வகை எழுத்தாளர்களின் அழகியலை மீறி 'என்னதான் சொல்ல முடிந்தது' இந்தக் கதையால்?

திண்ணையில் இருந்த இடத்தில் தின்றுவிட்டு கண்அயரவிரும்புபவன் நேரத்தைக் கடத்தவேண்டுமெனில் உப்புச்சப்பு இன்றி எதையாவது வாசிக்கலாம். அல்லது இலக்கியவாதிகள் தமக்குள் பேசிக்கொள்வதற்காக எதையாவது எழுதலாம்.
அவ்வளவதான்..

சந்திரிகா சண்முகராஜாவின் ஒரு பிரஞ்சு மொழி பெயர்ப்பு கதை மொழி பெயர்ப்புக்கு விசயத்தில் மகிழ்ச்சியே! அப்பால் இக்கதை மேட்டுக்குடிகளின் விபச்சார காதல், திருமணத்தை சொல்லும் ஒரு அருவருக்கத்தக்க கதை. அதாவது காதலை பணத்துக்குள்ளும், அந்தஸ்துக்குள்ளும் கண்டு பிடிக்க முடியாத பணக்கார குடும்பங்களின் பொழுதுபோக்கு செக்ஸ் வாழ்க்கையை நியாயப்படுத்தும் கதைதான் இது. இதை வறிய அடிமட்ட மக்களை மேட்டுக்குடி போல் விபச்சாரம் செய்யக் கோருவதே கதையின் நோக்கம். கதையை மொழி பெயர்க்கமுன் கதையின் உள்ளடக்கத்தை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

பா. பிரதீபனின் குடை கதை மனிதனின் ஊசலாடும் போக்கை இனம் காட்டுகின்றது. அநாதரவாக கிடந்த குடையை எடுப்பதா? விடுவதா? என்ற மனப் போராட்டம் தான் கதை. இதன்மூலம் எதைச் சமூகத்துக்கு சொல்ல முனைகின்றார் என கேட்பின் பதில் எடுக்க முடியாது. மனிதனின் மனப் போராட்டம் என்பது நாளாந்த நடைமுறையில் உள்ளவை. இருப்பவை. அத்துடன் இவையும் சேர்ந்து போகும் அவ்வளவே.

ஞாபகம் என்ற யமுனா ராஜேந்திரனின் தொகுப்பு! யமுனா என்னதான் செய்கிறார்? 600கோடி மனிதர்கள் நாள்தோறும் ஒவ்வொரு நிமிடமும் ஞாபகப்படுத்த கூடிய பலவிடயங்களைக் கொண்டுள்ளனர். படைப்பாளி என்பவன் அதிலிருந்து ஏதோ ஒன்றை சமூகத்துக்கு சுட்டிக்காட்ட விரும்பும் போதுதான், அதைப் படைப்பாக இனம்காண முடியும். இல்லாதவரை அது இரண்டு மனிதர்கள் நாள்தோறும் பேசிக் கொள்ளும் உப்புச் சப்பில்லாத விடையமாகவே இருக்கும். இதைத் தாண்டியதா ஞாபகங்கள் எனக்கேட்க தோன்றுகின்றது.

படைப்பு என்பது மனிதனுக்கு சேவை செய்யக் கூடியதாக மாறட்டும். மனிதன் தன்னைத்தான் பின் நோக்கி சிந்திக்க, செயலாற்ற, பங்குபற்ற என கோரும் வகையில் இலக்கியம் முன்னேறட்டும், மலரட்டும். அம்மா அதற்கு துணைபோகட்டும்.


**பி. றஜாகரன்.**

## ஈழத்துச்சிறுகதைகள் மலையாளத்திற்கு....

...அம்மா 1 கிடைத்தது. உள்ளடக்கத்தில் நன்றாக வந்துள்ளது. அதன் தோற்றம்தான் உறுத்துகிறது.
படைப்புகளில் எலிவேட்டை, மகிந்தாவின் சாவு இருகதைகளும் நல்லபடைப்புக்கள். காரணம் நம்நாட்டின் யதார்த்தைக்கூறி நிற்கின்றன. அவை சொல்லப்பட்ட முறையும் மனதில் பதியும்படி அமைந்துள்ளன. உருவம், உள்ளடக்கம் இரண்டும் நன்றாக அமைவது என்பது ஈழத்துச்சிறுகதைப்பரப்பில் அபூர்வம். நீண்ட இடைவெளியின் பின் வாசித்த நல்லகதைகள் இவையிரண்டும். ஈழத்துக்கதைகளை மலையாளத்திற்கு மொழியாக்கம் செய்ய மலையாள நண்பர் ஒருவர் முன்வந்துள்ளார். அவற்றிற்கு இவற்றைத் தேர்ந்து அனுப்பியுள்ளேன்....

**- கு. குலசிங்கம்,**

'நீல வாசா' புலோலி கிழக்கு, பருத்தித்துறை, இலங்கை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மாவுடன் கொஞ்ச நேரம் ...

- அ. இரவி

இரண்டு கிழமையிருக்கும் இளவாலை விஜயேந்திரன் என்னுடன் வந்து தங்கிநின்றான். அவனுடன் பத்து வருடங்களுக்கு பிறகான சந்திப்பு. இப் பத்து வருடங்களில் இலக்கிய வெளிப்பாட்டு முறையிலான வித்தியாசத்தை அறிய முடிந்தது. அது எனக்கு ஆச்சரியம்தான். புவனனுடன் ஒருக்கால் தொலைபேசியில் கதைத்தபோது இவ்வாறு ஆச்சரியப்பட்டேன். விஞ்ஞானத் தொழில் நுட்பங்கள் இப்போது எமது காலடியில் சேவை செய்யவும், கைகளுள் பிணைந்தும் கிடக்கிறது. புலம் பெயர்ந்த படைப்பாளிகள் அதை தண்ணீர் பட்டபாடாய் பயன்படுத்துகிறார்கள். ஒரு படைப்பானது படைப்பாளிக்கு மனதுள் கருக்கொள்கிறது. முகிழ்கிறது. 2,3 நாட்கள், அல்லது 2,3 மாதங்கள் அது உள்ளேயே ஊறி படைப்பாளியின் அகத்தில் சுவறி, ஒரு வடிவம் பெறுகிறது. படைப்பாளி கணனி முன் அமர்கிறார், அறை முழுவதும் வெளிச்சம் பரவுகிறது கைகள் இயங்குகின்றன. தோசை சுட்டு அடுக்கியதுபோல ஒற்றையின் ஒரு பக்கம் அடுக்காக, இதோ படைப்பு ரெடி.

எனக்கு இதனைப் புவனன் சொன்னபோது, இ.விஜேந்திரன் சொன்னபோது ஆச்சரியம். நான் கோடை கொளுத்துகிற ஒரு வறிய நாட்டிலிருந்து வந்தவன். அங்கு கணனி வாங்குவதென்றால், ஒரு பிள்ளை சீதனம். அதனைப் பராமரிப்பதற்கு குளிரூட்டப்பட்ட (A.C) அறை வேண்டும். இங்கு மிகச் சுலபமாக, ஒவ்வொரு படைப்பாளியும் கணனி வைத்திருக்கிறாப்போல இருக்கிறது. இவ்விடயத்தில் என் வயதொத்த இ.விஜயேந்திரனிடமிருந்து நான் 10 வருடங்கள் பின்தங்கி இருக்கிறேன். இதன் பின்னணியிலிருந்துதான் அம்மா பற்றியும் நான் அறிந்தவற்றைக் கூறலாம்.

தமிழ்ச் சிறுகதை இரண்டுக்கிடைப்பட்ட நிலையில் இருக்கிறது. நாவல், உருவத்தில் பெரிதாக இருப்பதால் பலர் அதில் கைவைக்க தயங்குகிறார்கள். நாவல் எழுதுவது என்பதே ஒரு வேள்விதான். கவிதை மிக எளிதான வடிவமாக இருப்பதால் பலர் அதில் கைவைக்கிறார்கள். இரண்டுக்கும் இடைப்பட்டு படைப்புந்தல் வரப்பெற்றவர்கள் சிறுகதையில் இறங்குகிறார்கள். என் கணிப்பில் நவீன இலக்கியத்தில் சிறுகதை பெற்ற கவனயீர்ப்பை வேறு படைப்பிலக்கியங்கள் பெறவில்லை. (இவ் வாக்கியம் விமர்சனத்துக் குரியது) புதுமைப்பித்தனும், மௌனியும், கு.ப.ராவும், கு.அழகிரிசாமியும், ல.சா.ராவும் சிறுகதையில் சாதனையாளர்களாக மிளிர்ந்தார்கள். அதையடுத்து தி.ஜானகிராமனும், ஜெயகாந்தனும், சுந்தரராமசாமியும், ஆசாகமித்திரனும் சிறுகதையில் தங்கள் ஆளுமையை நிறுவினர். பிறகு அம்பையும், வண்ணநிலவனும், வண்ணதாசனும், ஜெயமோகனும் அதனைத் தொடர்ந்தனர். செழுமையான மரபின் தொடர்ச்சி இவர்கள் கதைகளில் வெளிப்பட்டன.

இச்சாதனைகள் எவ்வாறு எழுந்தன என நோக்கிறபோது, எனக்குக் கிடைக்கக்கூடிய சுலபமான பதில், அவர்கள் ஒரு படைப்பை திரும்பத் திரும்ப எழுதி செப்பனிடுகிறார்கள், செதுக்கியிருக்கிறார்கள். கணனியின் முன் அமர்ந்து கதை எழுதுபவர்கள் ஒரு முறையுடனையே திருப்தி கொள்கிறார்கள். எல்லோரையும் என்னால் அப்படி குறிப்பிட முடியாது. ஆனால் புவனனும், இ.விஜயேந்திரனும் அப்படித்தான் எனக்கு கூறினார்கள். ஒரு முறையுடன் சரி. எழுத்துப் பிழைகள் இருந்தால் திருத்துவது அவ்வளவுதான். நான் நினைக்கிறேன், இது ஆரோக்கியமானதல்ல நான் இ.வியஜேந்திரனுக்கு கூறிய பதில் இதுதான்.

ஏன் வளங்களை வீணாக்கிறாய்? ஆற்றலுள்ள படைப்பாளிகள் படைக்கிறபோது, திரும்பத் திரும்ப எழுதுவதால், செதுக்கப்பட்டு செப்பனிடப்படுமேயொழிய ஒருபோதும் அப்படைப்பு பலவீனம் அடையாது. இக் கருத்தினை நான் கூறியபோது, புவனன் நேரத்தை ஒரு பிரச்சனையாக கூறினான். என்னால் அதில் உடன்பட முடியாதிருந்தது. ஒருவர் சுமாரான மூன்று கதைகள் எழுதுவதிலும் பார்க்க ஒரு கதையை மூன்றுதரம் எழுதி, அதைத் தரமான கதையாக்குவது சாலச்சிறந்தது.

'அம்மா' வில் ஒரு பிரஜை ஒரு நாடு (அல்லது ஒரு பிரஜை நாடு) கதையை எடுத்துக் கொண்டால், எனக்கு அம்பையின் சூரியன் கதை ஞாபகத்திற்கு வருவதைத் தடுக்க முடியவில்லை. (அம்பையின், 'சிறகுகள் முறியும்' சிறுகதைத் தொகுப்பில் உண்டு ) அக் கதையும் பதுங்கு குழிக்குள் இருக்கும் சிறுவனையும், அம்மாவையும் பற்றியகதைதான். (அக்கதை வியட்நாம் போர்ச் சூழலை வைத்து எழுதியது என ஞாபகம்) பார்த்தீபனின் கதையுடன் ஒப்பிடுகிறபோது அது கலை நேர்த்திமிக்க கதை. பார்த்தீபனின் கதையும் அந்தளவு சிறப்பானதாக வந்திருக்க வேண்டும். ஏன் வரவில்லை? இக்கதை இன்னமும் சீராக அந்த உணர்வுகளுடன் செதுக்கப் பட்டிருக்கலாம். மிக முக்கியமான ஒரு கரு. அழுத்தம் பெற வேண்டிய ஒரு கரு ஏன் அது அரைகுறையாக முடிந்தது? பார்த்தீபனின் பல கதைகளை நான் வாசித்திருக்கிறேன். புலம் பெயர்ந்த எழுத்தாளர்களில் மிக முக்கியமானவர். இவர் எழுதத் தொடுகிற விசயங்கள் வித்தியாசமானவை. பார்த்தீபன் பற்றி அதிகம் கூறுவது அவர் வளர்ச்சிக்கு குந்தகமாக அமையலாம், ஆனால் மொழிநடையும், எடுத்துக்கொண்ட கருக்களும் நிறையவே சிறப்பானவை. ஆயினும், அவரது படைப்புகள் என்னளவில் முழுமைபெறத் தவறி விடுகின்றன. அம்மாவில் வந்த கதையும் சரி, கிழக்கும் மேற்கு தொகுப்பில் வந்த 'உழவுக்கும் தொழிலுக்கும்' வ.செ. கதையும் சரி முழுமையற்று இருக்கின்றது. காரணத்தை நான் யோசித்துப் பார்க்கிறேன். முக்கியமானது இதுதான், பார்த்தீபனின் உணர்வுகளால் கதையெழுதுவதை மறுத்து தன் அறிவியல் (மூளையால்) கதை எழுத முற்படுகிறார். குரு பிரசாதத்தின் கடைசித்தினம், நகரம் முதலான நல்ல கதைகளின் சொந்தக்காரரான சுஜாதாவிற்கும் இத்தகைய அனர்த்தமே நிகழ்ந்தது. சுஜாதாவும் மூளையால் கதை எழுத வெளிக்கிட்ட பின்னர் அவரது கதைகள் ஒன்றும் தேறவில்லை. பார்த்திபன் பாத்திரங்களை உள்வாங்கி இயலுமானவரை அப்பாத்திரங்களுடன் வாழ்ந்து, அவ் உணர்வுகளுடன் ஒன்றிப்போய் எழுதுவது கதையை வலுப்படுத்தி முழுமை பெற வைக்கும் என்பது என் அபிப்பிராயம். இதனால் ஆற்றலுள்ள படைப்பாளியின் படைப்புகள் மேலும் செழுமைப்படும். இதற்கு வண்ண தாசனின் பந்தியிலிருந்து(சொல்ல முடிந்தது) தருகிறேன்.

'நீண்ட பயணத்தில் நான் சாப்பிட முயற்சி எடுக்க மாட்டேன், என்பதற்காக என் மகள் எனக்கு பொட்லத்தில் ஓடி ஓடி உணவு கட்டிக் கொடுத்தாள். அதுவும் பக்கத்துக் கடையில் கடனுக்கு வாங்கப் பட்டதே. நான் கண்டிப்பாக சாப்பிட வேண்டும் தூரப் போட்டுவிடக் கூடாது என்று வற்புறுத்தி என்னை அனுப்பினாள். குடிப்பதற்கான தண்ணீர்கூட போத்திலில் அடைத்துக் கொடுத்தாள். தன்னுடைய அப்பா குடிகாரன் என்பது மற்றவர்களுக்கு தெரியக்கூடாது என்பதற்காக அந்தப் பாட்டிலின் மேலிருந்த லேபிலை சுரண்டி எடுத்தாள். தன்னுடைய நகக்கண் வலிக்கச் சுரண்டினாள். நான் சாப்பிடவும் இல்லை அதைத் தூக்கிப் போடவும் இல்லை. ஆனால் சாப்பிட்டுவிட்டதாக இதில் எழுதியிருக்கிறேன். இதுதான் அவஸ்தை, இதுதான் வலி. வலியை உள்ளடக்கியதுதான் எல்லா எழுத்தும்.' இப்பந்தியைப் பாருங்கள், எவ்வளவு உயணர்வுபூர்வமான வரிகள். வண்ணதாசனின் (சொல்ல முடிந்தது) கதையில் வருகிற குன்னங்குளம் பொமிலிக்கா அல்லது கதை சொல்கிற நான் என்கிற பாத்திரமா வண்ணதாசன்? இருவரும் வண்ணதாசன்தான். இருவரும் அல்ல என்றும் வண்ணதாசனை கூறலாம். வெளியில் நின்று வண்ணதாசன் எழுதியிருக்கிறார். இடையிடை பாத்திரங்களை தானாகவும் ஆக்கிக் கொள்கிறார். வண்ணதாசனின் உணர்வுபூர்வமான எழுத்து இக்கதை. நுண்ணிய கலைநேர்த்திமிக்க கதைஇது. கவித்துவம்மிக்க ஆழமான நடை. 'அன்று என்னையொரு இடையனாக உணர்ந்தேன். என்னைச்சுற்றி கால்நடைகள் இருந்தன. முக்கியமாக அடர்ந்த மரங்களின் நிழலும், வெயிலும் படுத்திருந்த கால்நடைகளின்மேல் பட்டுச்சிதறி கீழேயும் தெறித்தன...... ' எப்போது இப்படியெல்லாம் நாங்கள் கதையெழுதப் போகிறோம்? அதாவது இந்தக் காலம் போனாலும் எந்தக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலத்திலும் நின்று நிலைகக் கூடியவாறு? பார்த்திபன், காலங்களையும் களங்களையும் வீணாக்க வேண்டாம். இதுதான் அவஸ்தை. இதுதான் வலி. வலியை உள்ளடக்கியதே எல்லா எழுத்தும்.

வலிதான். சிரிப்பைத்தர முயற்சிப்பதும் ஒரு வலிதான். 'குடை' யை வாசித்து நான் நன்றாக சிரித்தேன். எனக்கு சிரிப்பதற்கு நல்ல விருப்பம். நகைச்சுவைக் கதைகளை தேடித்தேடி வாசிப்பதுண்டு. நகைச்சுவைப் படங்களையும் அபூர்வமாக பார்ப்பேன். 'குடை' யை அவ்வகையிலேயே நோக்குகிறேன். பா.பிரதீபன் நல்ல நகைச்சுவை உணர்வுமிக்கவர். வரிக்குவரி மற்றவர்களை நோகாமல், எங்களுக்கு சிரிப்பூட்டுகிறார். இது சிரிப்பூட்டுவதற்காக எழுதப்பட்ட கதையா என்பது தெரியவில்லை. ஓசிச் சாமானுக்கு எப்போதும் பொசிப்பேயில்லாத சிறு அவலத்தை சொல்லுகிற கதைதான். ஆனால் பிரதீபனின் மொழிநடை கதையை அங்குலம் அங்குலமாக ரசித்துச் சிரிக்க வைத்திருக்கிறது. எனது மனநிலையும் அக்கதையின் தலைவன் பிரதிபலித்தான் போல. அதனாலும் என்னால் ரசிக்க முடிந்தது. இத்தகைய மொழிநடை கைவரப் பெறுவது முக்கியம்தான். ஆனால் இது நல்ல கதையா? எனக்கு அப்படிச் சொல்லத் தெரியவில்லை. அந்த நேரம் வாசிக்கிறேன், சிரிக்கிறேன். வாசித்து முடிந்தபிறகும், எனக்கு ஏதாவது சலனத்தை ஏற்படுத்தியதா? இல்லையென்றும் சொல்ல முடியவில்லை, ஓமென்றும் சொல்ல முடியவில்லை. சலனம் என்றால் என்ன? துயரப்படுவது மாத்திரம் தானா? பிறகும் பிறகும் யோசித்து வெப்பியாரப்படுவதா?

'குடை' கதையை வாசித்து முடிந்த பிறகும் இடைக்கிடை சிரித்தேன். இரவும் சிரித்தேன். 'இந்தாருங்கோப்பா எனக்குக் குடை வேண்டாம்' என்னும் வரியை மனதில் ஒரு சித்திரமாக்கி யோசிக்கிறபோது சிரிப்பு வருகிறது. கதையின் முடிவு மிக செயற்கையாக இருக்கிறது. குடையில் அவ்வளவு கவனம் கொண்டவர் மெற்றோவில் விட்டுட்டு இறங்கமாட்டார். அது சரி தலைப்பு ஏன் 'குடை' என்று வைக்கவேண்டும்? கதைக்கருவிற்கு தலைப்பு மிக முக்கியம் என்றே நான் கருதுகின்றேன். தலைப்பு வேறொரு பரிமாணத்தையும் காட்டி நிற்க வேண்டும். தலைப்புக்கூட கதையை அழகுபடுத்துகிற ஒன்று.

'பகையே ஆயினும்' (பொ.கருணாகரமூர்த்தி) 'காய்தல்' (ஷோபாசக்தி) முதலான கதைகளிலும் நான் சிரிப்பதற்கு விசயங்கள் இருந்தன. சிரிக்கூடியதாக எழுதுவதென்பது கடினமான வேலைதான். ஆனால் என்ன இயல்பாக கருணாகரமூர்த்தியும், ஷோபாசக்தியும், பிரதீபனும் எழுதிவிடுகின்றனர். கருணாகரமூர்த்தியின் கதையில் மனைவியிடமிருந்து வரும் வார்த்தைகள் உதாரணம். அவ்வாறே ஷோபாசக்தியின் கதையில் அங்கிளின் வார்த்தைகளைக் கூறலாம். இவற்றை மேலும் ஏன் விபரிப்பான். 'பகையே ஆயினும்' கதைபற்றி அதிகம் ஒன்றும் சொல்ல இல்லை. நேர்த்தியாக வந்தகதை. அதன் உள்ளடக்கம் பெரியளவில் என்னை ஒன்றும் செய்யவில்லை. என்றாலும், துருக்கிக்காரனின் பிரிவு இன்னாததுதான். அப்பிரிவு கொஞ்சம் துயரெழுப்புகிறது. கருணாகரமூர்த்தியின் வேறு கதைகள் வாசித்தபோதிலும், அவர் நல்ல சிறுகதை ஆசிரியராகவே தென்படுகிறார். சமயங்களில் துருக்கிக்காரனே தேவலை. 'பெட் காபிக்கான காதலுடன்' முதலான வரிகளில் வருகின்ற தேவலை. பெட் காபி முதலான சொற்கள் எங்களது இயல்பான தமிழில் பயன்படுத்துவதில்லை என நினைக்கிறேன். எனக்கு எழுகிற பயங்களில் ஒன்று, புலம்பெயர்ந்தபின் நாங்கள் எங்களுடைய தமிழை மறந்துவிட்டு தமிழ்நாட்டுச் சினிமா, தொலைக்காட்சி, சஞ்சிகைகளின் ஆதிக்கத்தால் அத்தமிழையே கைக்கொண்டு விடுவோமோ என்று. பிரக்ஞை உள்ளவர்களாவது கூட இதில் கவனமாக இருத்தல் நலம்தானே.

என்னமாய் எழுதுகின்றார் இந்த ஷோபாசக்தி! கொஞ்ச நாளைக்கு முன்னம் 'எலிவேட்டை' வாசித்து அதன் ஞாபகங்கள் முடங்க முன்னம் இன்னொரு சிறப்பான கதையும் தந்திருக்கிறார். எவ்வளவோ அனுபவம்வாய்ந்த எழுத்தாளரின் அம்சங்கள் அடங்கியது இவரது கதை. எனக்கு இவர்பெரும் ஆச்சரியம்! மிக இயல்பான நடை உணர்வுகளுடன் தோய்த்தெடுக்கப்பட்ட வார்த்தை. இவர்பற்றி அதிகம் சொல்வது ஆபத்தில் முடியலாம். இக்கதையை பற்றி நான் வேறொரு விசயம் சொல்ல வேண்டும், கதை என்கிற அளவில் மிகச்சிறப்பாக வந்தது இது. அதைப்பற்றிய மாற்றுக் கருத்துக்கள் கிடையாது. ஷோபாசக்தியின் உணர்வுகள் அவருக்குரியன. அவர் அந்த உணர்வுகளை நேர்மையாக வெளிப்படுத்துகிறார். கதையின் இறுதிவரி எனக்கு தந்த உணர்வை நான் நேர்மையாக வெளிப்படுத்த வேண்டும். எனக்கு 'அரியண்டமாக' இருந்தது. இதைப்பற்றி மேலும் விளக்கி நான் தத்துவ விசாரத்தில் இறங்க விரும்பவில்லை. என்னுணர்வில் முடிவுவரியை சொன்னால் ஏற்க முடியவில்லை. ஆனால் என்னுணர்விலிருந்து விலத்தி நின்று பார்க்கிறபோது நல்ல கதையாகவும், நல்ல முடிவாகவும் இது அமைந்திருக்கிறது என்பது உண்மை தான். ஷோபாசக்தி, இனி ஒவ்வொரு அடியையும் கவனமாக அங்குலம் அங்குலமாக என்றாலும் ஆழமாக வைக்க வேண்டும் என்பது என் விருப்பம்.

யமுனா ராஜேந்திரன் கதையில் (ஞாபகம்) என்னால் முழுமையாக ஒன்றிப்போக முடியவில்லை. திரும்பத் திரும்ப வாசித்து, யோசித்துப் பார்க்கிறேன். ஏனென்று தெரியவில்லை. ஆழம் அதிகம் இருக்கலாம், ஆனால் அது எனக்குப் பிடிபடவில்லை. கடினமான மொழிநடைப் பிரயோகம் மாறு விளைவிக்கின்றதோ என்பதும் தெரியவில்லை. முக்கியமான கதையாகவும் தெரிகிறது. என்னவோ இதற்கு மிஞ்சி என்னால் சொல்ல முடியவில்லை.

பதினெட்டு வயது நிரம்பிய சந்திரிகா சண்முகராஜாவிற்கு, அந்த வயதிற்குள் மொழி பெயர்க்கக்கூடிய அசாத்திய திறமை வந்ததை வியக்காமலிருக்க முடியவில்லை. மொழி நடையும் எளிமையாக உள்ளது. நான் சொல்லக்கூடியது இதுதான், எங்களுடைய அனுபவங்களுடன் சமீபித்து வரக்கூடிய கதைகளை மொழிபெயர்ப்புச் செய்தால் இன்னும் ஒன்றிப்போக வசதியிருக்கும். செய்வீர்களா சந்திரிகா சண்முகராஜா?

உரைகல் பற்றியும் பொ.கருணாகரமூர்த்தி எனது கதையில் (மகிந்தாவின் சாவு) மரணத்துக்குரிய காரணங்கள் எதுவுமே அழுத்தமானதாக இல்லை என்கிறார். மரணம் நடந்த இடத்தில் சில அனர்த்தங்களும் நிகழ்ந்தன. அழுத்தம் கொடுக்கப்பட வேண்டிய ஒரு பந்தி விடுபட்டு போயிருந்தது. எழுத்துப்பிழைகள் இருந்தன. (ஆயிரம் ரூபா அல்ல, ஆறாயிரம் ரூபா) இப்படிச்சில. ஆயினும், நான் ஒப்புக்கொள்கிறேன். அந்தப் பந்தியும் வந்து, எழுத்துப் பிழையும் இல்லாமல் இருந்தாற்கூட மகிந்தாவின் மரணத்தில் அழுத்தம் என்னால் சரியாக கொடுக்கப்படவில்லை. அது அக்கதையின் தோல்விதான். ஒரு கதையின் மாந்தன் மரணமுறும் பரிதாப நிகழ்வை அழுத்துவதற்குபதில், நான் சொல்ல விரும்பிய அரசியல் கருத்துக்கள் என்னை அலைக்கழித்து விட்டன. நான் இப்போது உணர்கிறேன். மகிந்தா மரித்தபோது, அப்போது நான்பட்ட துயர், வரி வரியாக என்னால் எழுத்தில் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. வேறு என்ன அதைப் பற்றி சொல்ல?

பி.றயாகரன் இன்னும் நிறைய நல்ல கதைகளாக வாசிக்க வேண்டும் என்றுதான் நான் சொல்வேன். ரயாகரன் சொல்வதுபோல் ஷோபாசக்தியும் மற்றவர்களும் கதைஎழுத வெளிக்கிட்டால் அதுகதையாகாது, கட்டுரையாக மாறும் என்பதே எனது நிச்சயம். கதையினுள் கருத்துக்களை திணிக்க முடியாது. கதை கதையாக நிற்க கருத்துக்கள் இயல்பாக ஏறிவரும். நாங்களே ஏற்ற வெளிக்கிட்டால் கதையும் வராது, கருத்தும் வராது. சிலவேளை கட்டுரையாக அதுவரலாம்.

**புவனுடன் கொஞ்சம் கதைக்கலாமா?**

புவனன், கருத்தாடலுக்காக எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார், மகிழ்ச்சி. 'கிழக்கும் மேற்கும்' பற்றி நல்லதொரு விமர்சனம் வெளிவராதா? கடைசியாக வந்த 'காலச்சுவடு'லும் எதிர்பார்த்தேன். காணவில்லை. 'சரிநிகரிலு'ம் இல்லை. (துடைப்பானிது கண்டனக் குறிப்பு) அம்மாவிலாவது ஒன்று வந்தால் நல்லாயிருக்கும் என நினைக்கிறேன். அக்கதைகளில் எனது தெரிவுடன், உனது தெரிவுகளும் ஒத்துப்போனது சந்தோஷம். நீ ஒருக்கால் திரும்ப வாசித்துப்பார். தீக்குளிப்பு(பாலகணேசன்) முக்கியமான கதையாகத்தான் நான் பார்க்கிறேன். அமுதனின் வேலை இழந்த நல்ல கதைதான் என்றாலும், உணர்வு சம்பந்தப்படாமல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூளை சம்பந்தப்பட்ட கதையாகத்தான் அது எனக்குத் தெரிகிறது. நீ அ.முத்துலிங்கம் பற்றியும் குறிப்பிட்டிருந்தாய். அ.முத்துலிங்கத்தை இன்று, நேற்றல்ல நெடுங்கலமாகவே நான் அறிவேன். இலங்கையின் சிறுகதை வரலாற்றில் அ.முத்துலிங்கத்திற்கு சிறப்பான இடம் உண்டு. அவரது'அக்கா' சிறுகதைத்தொகுதி வாசித்தாயா? அருமையான கதைகள். அவரது கதைகள் மூலமாக அவர் எனக்கு நெருங்கிய பரிச்சயம். 'அக்கா' சிறுகதைத் தொகுதியைக் கட்டாயம் ஒருக்கால் வாசித்துப்பார். அவ்வாறுதான் அம்பையும், தமிழில் மிக முக்கியமான எழுத்தாளர் அல்லவா? அவர் காலச்சுவடு 14இல் வெளியான 'மல்லுக்கட்டு' எனும் கதையே அவரது சிறப்பை பறைசாற்றும். அவரது 'சிறகுகள் முறியும்' 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' ஆகிய தொகுப்புகளை நீ வாசித்துப் பார்க்கவில்லையா? இவ்வளவு ஆளுமை அவரிடம் எங்கிருந்து வந்தது என்பதுதான் என் ஆச்சரியம்.

வெறும் அனுபவப் பதிப்புகள் எப்படி படைப்புகள் ஆகமுடியும் என்று கேட்கிறாய். அனுபவப் பதிவு மாத்திரம் படைப்பாக முடியாது. அது சொல்லப்பட்ட முறையிலும், வாசகரிடத்தில் தொற்ற வைத்த திறனிலுமே அது படைப்பாக முடியும். பொ.கருணாகரமூர்த்தி மிகத் தெளிவாக எழுதுகிறார். 'கலை என்பதே எப்பொழுதும் சுயானுபவங்களினதும், கற்பனைகளினதும் புனைவுதான். ஒவ்வொரு சுயானுபவமும் படைப்பாளியைப் பொறுத்தவரையில் முக்கியமானதுதான். ஆனால், எதனைக் கலைபண்ணுவது என்ற தேர்வின் நுணுக்கத்திலும் அதை அழகில் தோய்த்து புனைந்து மெட்டுப்பண்ணும் தொழில் நுட்பத்திலும்தான் படைப்பாளியின் ஆளுமை தெறிக்கின்றது. கருணாகரமூர்த்தியின் இக் கருத்துக்களுடன் முற்றிலுமாக நான் உடன்படுகிறேன். உண்மையில் படைப்பு கடினமானது அல்ல. மூளையை கசக்கிப் பிழியவேண்டிய தேவை அதற்கில்லை. நீ ஒன்றினைப் படைக்கமுன், அதனை உள்வாங்கு, ஊறவிடு. அது சுவறட்டும். பிறகு அது நல்ல படைப்பாக வெளிவரும். உனக்கு திருப்தி இல்லையா? திருப்பி எழுது, செதுக்கு, செப்பனிடு. நீ உழைக்க வேண்டும் அவ்வளவுதான். மூளையை கசக்கிப்பிழியும் தேவை அதற்கில்லை. வேறு பாத்திரங்களை சிருஷ்டிப்பது பற்றியும் கூறினாய். சுய அனுபவங்களைப்பற்றி எழுதுவதைவிட அது இன்னும் அற்புதம் என்றுதான் நான் கூறுவேன். ஆனால் அது கலை நேர்த்தியுடன் அமையலாம், வெறும் கதை பண்ணுவதாக அமைந்தால் அதிலும் பார்க்க சுய அனுபவங்களை கலை நேர்த்தியுடன் தருவது சிறந்ததுதானே? அன்ரன் சேக்கோவின் 'சலிப்பு' கதை வாசித்த ஞாபகம் இருக்கிறதா? அன்ரன் சேக்கோவ் றிக்சோ இழுப்பவரல்ல, ஆனால் அந்த றிக்சோ இழுக்கும் கிழவனது மகன் இறந்த துயரை கிழவனின் பார்வையிலிருந்து எப்படி அபாரமாக வெளிப்படுத்தியிருந்தார்? தமிழ்நாட்டிலும் சிருஷ்டிப்பு எவ்வளவு அற்புதமாக அமைந்துவிடுகிறது! இப்போதுள்ள இலங்கைப் படைப்பாளிகளோ சுய அனுபவங்களுக்கு முக்கியம் கொடுக்கின்றனர். ஆனாலும் முன்னர் இலங்கையர்கோன், அ.செ.மு, அ.முத்துலிங்கம், நடராசன், செ.கதிர்காமநாதன், நந்தி முதலானோர் பாத்திர சிருஷ்டிப்பில் ஈடுபட்டனர். வெற்றியும் பெற்றனர். பிறகு அ.முத்துலிங்கம் போன்றோர் பிறகேன் தொடராமல் விட்டனர்? அசோகமித்திரன் பாத்திர சிருஷ்டிப்பில் எவ்வளவு கவனமாக இருந்தார். அவரது 'புலிக்கலைஞன்' வாசித்திருக்கிறாயா? சார்வாகனின் 'காப்பிக்குச் சர்க்கரை போதாது' வாசித்திருக்கிறாயா? அற்புதமான பாத்திர சிருஷ்டிப்புகள். ஆனால் அ.முத்துலிங்கம் போன்றோராலும் இந்தளவு உச்சத்தை தொட்டிருக்க முடியும். ஏன் இலங்கை எழுத்தாளர்கள் அந்தளவு தூரம் போகவில்லை என்றால், எனக்குத் தெரிந்த ஒரேஒரு காரணம்: இலங்கை எழுத்தாளர்கள் எழுத்:தை வாழ்:வகத தொழிலாக கொள்ளவில்லை. அவர்களுக்கு வேறுசோலிகள் இருந்தன. எழுத்தை வாழ்வாக தொழிலாக கொள்ளமுயன்ற அ.செ.மு அடைந்த வறுமையை நீ அறிவாய்தானே? எனது பக்கத்து வீடு என்பதனால் அவர் வறுமையை நான் நன்கு அறிவேன். அசோகமித்திரன் முதலானோர் எழுத்தையே வாழ்வாக கொண்டனர் அதனால் அவர்களால் உச்சக் கதைகளை தொட முடிந்தது. இது எனது அபிப்பிராயம்தான். ஒரு கருத்தாடலுக்காகத்தான் இதனைக் கூறுகின்றேன். ஆனால் இனியாவது நாங்கள் பாத்திர சிருஷ்டிப்புக்காக அதிகம் உழைக்க வேண்டும் என நினைக்கிறேன். நீயெல்லாம் ஒன்பது கதை தருவதிலும் பார்க்க ஒன்றை தரமாகத் தாவேன்! பார்த்தீபன், ஷோபாசக்தி, பொ.கருணாகரமூர்த்தி முதலானவர்கள் இதில் இன்னும் முயலலாம். சிறிதரன் 'ராமசாமி காவியம்' என்றொரு கதை எழுதியிருந்தார். மிக நன்றாக வந்திருந்தது. பார்த்தீபனின் கதைகளிலும் சிருஷ்டிப்புத்தன்மை வருகிறது. ஆனால், என் கவலை என்னவென்றால் அது முழுமைபெறத் தவறிவிடுகின்றது. அவர் அதற்காக இன்னும் நிறைய உழைக்கவேண்டும். அவர் மூளையால் பாத்திரங்களை உருவாக்கட்டும். ஆனால் உணர்வால் அதை வெளிப்படுத்த வேண்டும். இன்னும் இன்னுமென அந்த பாத்திரத்தில் தோய்ந்து வெளிக்கிளம்பட்டும். பார்த்தீபன் நல்ல படைப்புகளைத் தருவார். அது என் நம்பிக்கை.

யமுனா ராஜேந்திரன், பார்த்தீபன் கதைகளில் ஆய்வு நடாத்திய (கிழக்கும் மேற்கும்) தொடர்பாக 'நீ என்ன நினைக்கிறாய்? என்று கேட்டிருந்தாய். நீ கருதியதைத்தான் நானும் கூறுவேன். ஒரேயடியாக முடக்கிவிடக் கூடாது என்பதுதான் என் கருத்தும். நீ சொல்வது சரிதான். நல்ல கருத்துக்கள் மட்டும் நல்ல கதையாகாது. போகட்டும், எனது இந்த எழுத்து நடைபற்றி என்ன நினைக்கிறாய்? மேலேயிருந்து அறிவுரை(Advice) கூறுகிற பாணியில், எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற பாவனையில் இது அமைந்திருக்கின்றதா? அப்படி இருந்தால் அது எனக்கு மிக்க கவலையான விசயம். அதைப்பற்றியும் ஒருவரி எழுதிவிடு, அல்லது சொல்லிவிடு

**-அ. இரவி.**



— 31 ம் பக்கத் தொடர்ச்சி —

**கிழக்கும் மேற்கும்......**

அவரின் மொழி செம்மைப் படுத்தப்பட வேண்டும். மிகுந்த படைப்பிலக்கியப் பயிற்சி வேண்டும் என்பதை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அதையும் அவர் உணர்ந்திருக்கிறார். அவருடைய

படைப்புக்களில் எனது மதிப்பீடுகளின்படி பல சிறுகதைகளை நான் விமர்சனத்துக்கே எடுத்துக்கொள்ளாது விட்டிருக்கிறேன்.

நான் எடுத்துக்கொண்ட பதினாறு கதைகள் ஒரே தரத்தவையானவை அல்ல, ஆனால் பொருட்படுத்தத்தக்க கதைகள். அந்த பதினாறு கதைகளில் அதியற்புதமான படைப்புக்களும் இருக்கிறது.

1. மொழி சம்பந்தமாக நான் சொல்லியிருக்கிற விடயங்கள்.
2. விமர்சனத்துக்கு எடுத்துக்கொள்ளாது நான் விட்டுவிட்ட கதைகள்.
3. கனவை மிதித்தவன் நாவல் பிறவற்றை நான் பேசாதது போன்றவை பார்த்திபனுக்கு கொண்டிருக்கும் செய்தியை அவர் உணர்ந்து தானிருக்கிறார்.

ஆனால் ஒன்றை நான் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். எந்த உலக புலம்பெயர்ந்த படைப்பாளியின் படைப்புலகில் இடம்பெறும் மனிதர்கள் போலவே பார்த்திபனின் மனிதர்கள் சர்வதேசிய பண்பு வாய்ந்த மனிதர்கள். படைப்புமொழி வளர்ச்சி நிலைகுறித்த மாறுபாடுகள் கொள்ள இடமுண்டே தவிர, பார்த்திபனின் படைப்புலகும், ருஸ்டி, சிவானந்தன், சுஜாதாபட் ஆரியல் டோப்மென் போன்றோரின் படைப்புலகும் ஒன்றேதான்.

பார்த்திபன் காட்டும் அனுபவ உலகம் மிகவும் விரிந்தது. பார்த்திபன் அவரது படைப்பு மாந்தர் போலவே எளிமையானவர். ஒடுக்கப்பட்டவர் நிராகரிக்கப்பட்டுள்ளோர்களுக்காக பேசுபவர். எளிமையானவர். இந்தக் குணங்கள்தான் அவரது படைப்புக்கான ஆதார குணம். அது இருக்கும்வரை அவர் அதீத மதிப்பீடுகளுக்காக மகிழ்ந்து முடங்கிப் போக மாட்டார் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

– யமுனா ராஜேந்திரன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கும் மேற்கும்

.....இலண்டன் தமிழர் நலன்புரிச்சங்க **கிழக்கும்** மேற்கும் மலரிலுள்ள **சிறு**கதைகள் பற்றி சுருக்கமாக சில **வரி**கள்.....

'கிழக்கும் மேற்கும்' கதை பொதுவில் மிகமோசமான கருத்தமைவுகளையே கொண்டிருக்கின்றன.
தமிழரின் அகதிவாழ்வு, 2ம்தர வாழ்வு, சாதி ஒடுக்குமுறை, வறுமை, மத முரண்பாடு, இன ஒடுக்குமுறை, ஆண்பெண் முரண்பாடு, எமது பூர்சுவாதனம் என எண்ணற்ற மனித விழுமியங்களுக்கு சவால்விடும் மனிதவிரோதபோக்குகளை எவ்வளவு தூரம் கிழக்கும் மேற்கும் கதைகள் பிரதிபலிக்கின்றன எனின் பெருமளவில் இல்லை என்பதே பதிலாகிறது.
உயிரோட்டமுள்ள, யதார்த்தக் கற்பனையுடன், விமர்சனத்தைக்கொண்ட, தீர்வை முன்வைக்கும் எத்தனை கதைகளை மலர் கொண்டுள்ளது என்பதைக்கேட்டுப் பார்ப்பதும் மிகமுக்கியமாகும்.

இவற்றைவிட சிறந்த படைப்புக்கள் தமிழரிடம் இருந்துவருகின்றன என்பதைப்பார்க்கும்போது இம்மலர் அனைத்துலக தமிழ்படைப்புகளின் தொகுப்பு என்பதை கேள்விக்குள்ளாக்குவதுடன் உண்மையானதுமல்ல.


சமூகம் பற்றி ஒடுக்குமுறைக்கு உள்ளாகுபவன் சார்பாக நின்று படைப்பாளர்கள் அணிவகுப்பது அவசியம். பொதுவில், கதை மரபு என வகுக்கப்பட்ட பூர்சுவா கதைவடிவையும், உள்ளடக்கத்தையும் தாண்டுவது அவசியமாகும். வழக்கிலிருக்கும் கதைமரபை மீறும்போது 'தீட்டு'ப்பட்டுவிடும் என அழுவதற்குச் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால், தீட்டினைக் கடப்பதன்மூலம், ஒரு தனித்துவத்தை கதைகளின் மரபில் தொடங்கமுடியும். இது ஈழ மரபில் தனித்துவமான முன்னோக்கிய பாத்திரத்தை எமக்கு அள்ளித்தரும்.

மலரில், பார்த்திபன் என்ற படைப்பாளி பற்றிய யமுனாராஜேந்திரனின் அறிமுகம் என்பது பலத்த விமர்சனத்திற்குரியது. பார்த்திபனை முடக்கமுனையக்கூடியது. பார்த்திபனின்கதைகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டதென யமுனா கருதுகிறாரா? விமர்சத்திற்குரியதாயின் ஏன் விமர்சனம் வைக்கப்படவில்லை?

பார்த்திபன் அறிமுகத்தில் அவரது உருவாக்கம் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது. பார்த்திபன் இலங்கையில் ஒரு எழுத்தாளர் அல்ல. புலம்பெயர்சூழலில் அராஜகப்போக்கைக் கண்டித்து அதற்கெதிராக தூண்டில் என்ற சஞ்சிகையை வெளிக்கொணர்ந்ததையும், அதற்கூடாக பார்த்திபன் உருவாகியதையும் ஏன் யமுனா மறைக்கிறார். பார்த்திபனின் கதைகளின்மீது விமர்சனத்தை வைக்காது வெறுமனே முதுகுசொறிவது ஒரு படைப்பாளியை சீர்குலைக்கவே செய்யும்.

இச்சமூகநடைமுறைமீது, சிறுகீறலிலிருந்து ஒருவிமர்சனத்தை மட்டும் செய்யும் பார்த்திபன் கதைகள் ஒரு முழுமைபெறாத குழந்தைநிலையிலே உள்ளன. ஆயினும் யதார்த்தநிலையில் உள்ளன. இவை சமூகத்தை விமர்சிப்பதோடு, ஒரு மாற்றுவழியையும் முன்வைக்குமாயின் ஒரு முன்னோக்கிய வரலாற்றுப்பாத்திரத்தை வழங்கமுடியும்.

**- பி. ரஜாகரன்.**



**கிழக்கும் மேற்கும் பற்றி....**
**- ஜெயமோகன்.**

----இதழ் மிகச்சிறப்பாக கவனத்துடன் தொகுக்கப்பட்டிருந்தது. சிற்சில எழுத்துப்பிழைகளைத் தவிர்த்தால் அமைப்பும் மிகச்சிறப்பாகவே வந்திருக்கிறது. படைப்புக்களைப்பொறுத்தவரை கவிதைகள் எதுவுமே சரியாக வரவில்லை என்பதை சற்று வருத்தத்துடன் கூறித்தான் ஆகவேண்டும். பெரும்பாலான கவிதைகள் அகத்தூண்டல். வெறுமே கருத்துக்களின் அடிப்படையில் எழுதப்பட்டிருந்தன. அத்துடன் கவிமொழி என்று ஒருவகையான செயற்கையான - புராதனவீச்சமுள்ள மொழிநடையையே பயன்படுத்தியிருந்தார்கள்.

கதைகளில் கி.பி.அரவிந்தனின் கதை சிறப்பாக வந்திருந்தது. ஜிப்ஸிகளையும் தமிழர்களையும் அதிக ஆயாசமின்றி ஒப்பிட்டு ஆழ்ந்தசோகத்தை வெளிப்படுத்தியுள்ளார். குமார்மூர்த்தியின் வேஷம்' கதையும் குறிப்பமைதியும் செறிவும் உடையது. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் உட்பட பலருடையகதைகளில் புலம்பெயர்ந்தவாழ்வின் துயரமும் வெறுமையும் த்'விரமாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. எனினும் குறிப்பமைதி மனதிற்குள் மனதிற்குள் பலவாறாகவிரிந்து கொண்டிருக்கும் இயல்பு முதலிய இலக்கியக்குணங்கள் இக்கதைகளில் குறைவாக இருந்தன என்றே சொல்லவேண்டியுள்ளது.
நான் விரும்பும் படைப்பாளியான கருணாஹரமூர்த்தியின் கதை சரியான மையமின்றி அரட்டைபோல் அலைந்தபடி இருந்தது.
அ. முத்துலிங்கத்தின் கதை சுவாரிஷியமான சித்தரிப்பாக இருந்தஅளவுக்கு மனத்தூண்டலை தருவதாக இல்லை. ஆக்கம் அழிவு என்ற இரு இயக்கங்கள் பரஸ்பரம் பொருந்தப்போவதை கூறஅவர் முற்பட்டிருக்கலாம். ஆனால் அது அழுத்தமாகச் சித்தரிக்கப்படவில்லை. நிறைய சாத்தியங்கள் கொண்ட கொண்டகரு அரட்டைப்பாங்கான சித்தரிப்பால் தவறிவிட்டது என்ற வருத்தம் ஏற்படுகிறது.

(தொகுப்பாளர். பத்மநாபஐயருக்கு வந்த கடிதத்திலிருந்து.... *(11.08.1997)*

## பார்த்திபன் கதைகளும் புலம்பெயர் இலக்கியமும்

### இன்னும் சில பிரச்சனைகள்...

**- யமுனா ராஜேந்திரன்**

'கிழக்கும் மேற்கும்' தொகுப்பில் இடம்பெற்ற பார்த்திபன் கதைகளும் புலம் பெயர் தமிழ்இலக்கியம் தொடர்பான எனது கட்டுரைக்கு எழுத்து வடிவிலும், தொகுப்பாளர் பத்மநாபஐயருடன் உரையாடல் வடிவிலும், எனக்கு வந்த சில தனிப்பட்ட கடிதங்களிலும் பலவேறு எதிர்வினைகள் வந்திருக்கிறது.

சுஜாதா, குங்குமம் பத்திரிகை விமர்சனத்தில் பார்த்திபன் கதையில் மேற்கோள் தந்திருக்கிறார். புவனன் அம்மா சஞ்சிகையிலும் சுந்தரராமசாமி அவர்கள் தனிப்பட்ட ஒரு கடிதத்திலும் சுசீந்திரன், மு.நித்தியானந்தன் போன்றோர் ஐயருடன் தொலைபேசி உரையாடலிலும் அரவிந்தன், ரவீந்திரன் போன்றவர்கள் என்னுடனான தொலைபேசி உரையாடலிலும் தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். புலம் பெயர்ந்த சூழலில் புவனன் தவிரவும் பிற எவரும் எழுத்துருவில் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துக்களை வைக்காதசூழலில், ஒரு விவாதத்தை துவங்கும் பொருட்டு அவர்களின் கருத்துக்களையும் எதிர்பார்த்து இக் குறிப்புக்களை இங்கு முன் வைக்கிறேன். அ. இரவியும் இது குறித்து புவனனுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் என்று அவதானிக்கிறேன்.

பார்த்திபன் அங்கீகரித்துப் பேசப்பட வேண்டிய படைப்பாளி என்பதில் எல்லாருமே உடன்பாடு கொள்கிறார்கள். இரண்டு விசயங்கள் ஆழமாக பார்க்கப் பட்டிருக்க வேண்டும். கட்டுரையின் வடிவமைப்பும், இடம்பெற்ற புகைப்படமும் விவரணங்களுடன் முதல் பார்வைக்கு அத்தகையதாகவே தோற்றம் கொண்டிருக்கிறது. ஆனால் 1. தமிழ் புலம்பெயர் இலக்கியமும் ஆழமாக முழுமையாக பார்க்கப்படவில்லை. 2. உலகப் புலம்பெயர் இலக்கியம் பற்றியோ , கட்டுரையில் குறிப்பிடப்பட்ட சர்வதேசிய படைப்பாளர்கள் பற்றியோ விரிவாக பேசப்படவில்லை. இது இரண்டும் செய்யப் பட்டிருக்க வேண்டும். இதுதான் விமர்சனங்களின் சாராம்சமாக அமைந்திருக்கிறது. இந்த அபிப்பிராயங்களை முழுமனதுடன் நான் ஒப்புக் கொள்கிறேன்.

விமர்சனத்தின் மிக முக்கியமான இன்னொருவிசயம்.'
பார்த்திபன் ஒரு முதிர்ந்த படைப்பாளியாக பார்க்கப் பட்டிருப்பதற்கான வடிவமைப்பை கட்டுரை பெற்றுவிட்டது. ஸல்மான் ருஸ்டி, சிவானந்தன், சுஜாதா போன்றோரின் எழுத்துக்களோடு சமமாக வைத்துப் பேசப்பட்டதான தோற்றத்தை கட்டுரை கொண்டிருக்கிறது. பார்த்திபனின் வளர்ச்சியை இது முடக்கிவிடும். ஒரு அதீதப்படுத்தப்பட்ட மதிப்பீடு எனும் சாக்கில் நிராகரிப்புக்கான வாய்ப்பாகஇது ஆகிவிடும்.

1. தமிழ் புலம்பெயர் இலக்கியம்
2. சர்வதேசிய புலம்பெயர் இலக்கியம்.
3. பார்த்திபன் பற்றிய மதிப்பீடு போன்றவை பற்றி எனது கட்டுரை எழுப்பியிருக்கும் பிரச்சனைகளை இப்போது நேராக்க விளைகிறேன்.

இந்தக் கட்டுரை முழுக்க நிலவிய சூழலில் ஒரு கோட்பாடு ரீதியிலான விவாதத்தை தூண்டவேண்டும் எனும் அடிப்படையிலேயே எழுதப்பட்டது. இக்கட்டுரை எழுதும்போது புலம்பெயர் தமிழ் இலக்கிய படைப்புகள் குறித்து எனது அறிதலில் நிறைய வரம்புகள் /Limitation இருந்தது.

இதுவன்றி சர்வதேச புலம்பெயர் இலக்கியம், நான் இயங்குகிற தமிழ் இலக்கியம் புலம்பெயர் நாடுகளில் ஒரு நிலைபெற்ற தனித்த வகையாக உருவாகி விட்டதையும் அவதானித்தேன். புலம்பெயர் இலக்கியச் செயல்பாட்டின் இரண்டாம் கட்டத்தில் நாம் இருந்தோம். படைப்புத் தேர்வுகள் களம் என்கிற நிலைவலுப்பட்டு நமதுமொழி படைப்புத்திறன் குறித்து அக்கறைப்பட வேண்டிய கட்டத்துக்குள் நாம் நுழைந்து விட்டிருந்தோம். ஆனால் இது தொடர்பாக நாம் காத்திரமாக ஏதும் செய்யாதிருந்தோம்.

படைப்பாளிகளின் தடயங்கள், சாதனைகள், பங்களிப்புகள் பதியப்படவில்லை. லண்டன் இலக்கியச் சந்திப்பு சார்ந்து நிகழ்ந்த தனிப்பட்ட உரையாடல்களில் சுசீந்திரனிடம் நான் இதைப் பற்றி திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிறேன்.
தொகுக்கப்பட்ட புலம்பெயர் புத்தகங்கள் இலக்கியத்தை பிரதி நிதிப்படுத்தும் கருத்துக்கள் நிஜத்தில் காத்திரமான பல படைப்பாளிகளை விடுத்துவிட்டிருந்தது. வெறுமனே விவாதக் கட்டுரைகளை எழுதிக் கொண்டுள்ளதிலோ வெற்று விவகாரங்களை எழுப்பிக் கொண்டிருப்பதோ எனக்கு உடன்பாடில்லை ஆதலால், முதலில் ஆவணங்கள் பதியப்பட வேண்டும் என்பதிலேயே நான் அக்கறையாக இருந்தேன்.

ஒரே ஒரு கதை எழுதிய படைப்பாளி கூட, உ-ம் .' 'கிழக்கும் மேற்கும்' அமுதனின் சிறுகதை. அந்த ஒரே ஒரு கதையில் சாதனை புரிந்திருப்பதையும் நான் கண்ணுற்றேன். படைப்புக்கள் படைப்பாளிகள் மற்றும் அவர்களது படைப்புலகம் பற்றிய கருத்துக்கள் பதியப்படுவது தான், படைப்புக்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என்று நம்பினேன். இவ்வகையான ஒரு கட்டுரை எழுதப்பட வேண்டும் என்பது கூட ஐயருடன் ஒரு உரையாடலில்தான் எனக்குத் தோன்றியது. பார்த்திபன் எனும் படைப்பாளியின் கதைகள் முழுக்கவும் எனது தேர்வு. கட்டுரை எழுதுவதற்கான அடிப்படை இவ்வாறுதான் உருவானது. இக் கட்டுரை கூட பல்வேறு விதங்களில் எழுதப்பட்டிருக்க முடியும். சர்வதேச புலம்பெயர் இலக்கியம் பற்றிய ஒப்பீடு இல்லாமலேயே முழுக்கவும் பார்த்திபன் படைப்புக்கள் பற்றியே பேசியிருக்க முடியும். தமிழ்ச் சூழலிலேயோ, ஈழத்துச் சூழலிலேயோ நான் எழுதியிருந்தால் இந்தச் சூழல்களில் இதுவரைத்திய படைப்புச் சாதனைகள், கோட்பாடுகள், போக்குகளோடு ஒப்பிட்டு இக்கட்டுரையை நான் எழுதியிருக்க முடியும்.

நாம் புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்கிறோம். ஏற்கனவே அற்புதமான சாதனைகளைப் புரிந்திருக்கிற புலம்பெயர் சர்வதேச இலக்கியப் படைப்பாளிகளுக்கு இடையில் வாழ்கிறோம். அவர்களது படைப்புலகமும் நமது படைப்புலகமும் ஒன்றுதான். தமிழ் மனிதன் இன்று சர்வதேச மனிதனாக ஆகியிருக்கிறான். தமிழ் புலம்பெயர் இலக்கியம் சர்வதேசிய கூறுகளை தனக்குள் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் சர்வதேச புலம்பெயர் இலக்கியத்தோடு நம் தமிழ்ப் படைப்பை ஒப்பிட முயன்றேன்.

இந்த ஒப்பீடுகள் கூட இரண்டு வகையில் நிகழ்ந்திருக்க முடியும்.

1. படைப்புக்களுக்கான சமூக பொருளாதாரக் கலாச்சாரக் காரணிகள். நெருக்கடிகள் எவ்வாறு இரண்டு விதமான படைப்புக்களிலும் இடம் பெறுகிறது- அதன் பின்புலம் என்ன?

2. இலக்கியத்தின் மொழி மற்றும் வடிவம் சார்ந்த பிரச்சனைகள் எவ்வாறு வளர்ச்சி நிலையில் மாறுபட்டிருக்கிறது- இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய அக்கறையை தமிழ்ப் படைப்பாளி பெற்றிருக்கிறானா?

கட்டுரையில் முதல் அம்சத்தை மட்டுமே நான் வலியுறுத்தியிருக்கிறேன். இரண்டாவது பிரச்சனை தொடர்பாக நான் விரிவாக எழுதுவதென்பது ஒரு நூலுக்குரிய விரிவான பல கட்டுரைகளை எழுதுமளவு பரப்பு கொண்டது. பிற்சேர்க்கையாக நான் கொடுத்திருக்கிற படைப்பாளிகளில் 8 பேர் பற்றிய விரிவான மூன்று தொகுப்பு நூல்களும் விரைவில் வரவிருக்கிறது. இதுவன்றி அவர்களின் படைப்புக்கள் பற்றிய தனித்தனி கட்டுரைகளை நான் எழுதியிருக்கிறேன். மொழிபெயர்ப்புக்கள் செய்து பிரசுரமாகியிருக்கிறது. அந்த விபரங்களை நான் பிற்குறிப்பில் கொடுத்திருக்கிறேன். சிவானந்தனின் நீண்ட நேர்முகமும் அவரது படைப்புக்கள் பற்றிய கட்டுரைகளுடன் ஒரு நூலாக வெளிவர இருக்கிறது.

பார்த்திபனோடு படைப்பிலக்கியத்தில் ஈடுபட்டுவரும் பல்வேறு முக்கியமான எழுத்தாளர்களை நான் காரணம் கருதியே விடுத்திருக்கிறேன். பல்வேறு மனிதர்களின் கடின உழைப்பும் விரிந்த படிப்பும், மனிதனைத் தனிமைப்படுத்தி கேவலப்படுத்தாத இலக்கிய நேர்மையுமே இதைச் சாத்தியமாக்க முடியும்.

இக்கட்டுரை எழுதும் போது எனக்கிருந்த நோக்கங்கள் இரண்டே இரண்டுதான்.

1. பார்த்திபனை முன்வைத்து அவர் போலவே அங்கீகரிக்கப்பட வேண்டிய, முக்கியமான படைப்பாளிகள் பற்றி பதியப்பட வேண்டும். மதிப்பீடுகள் எழுதப்பட வேண்டும்.

2. தமிழ் புலம்பெயர் இலக்கியத்துக்கும் பிற சர்வதேச புலம்பெயர் இலக்கியத்துக்கும் உள்ள பொதுவான பிரச்சனைகள், சிறப்பான பிரச்சனைகள் முரண்கள் பேசப்பட வேண்டும். a) அரசியல் சமூக பொருளாதார கலாச்சார அடிப்படைகள். b) கலைமொழி வடிவம் சார்ந்த வளர்ச்சி நோக்கிய பிரச்சனைகள்.

இப்பிரச்சனைகளை கட்டுரை எட்டியிருக்கிறது. அது தொடர்பான விவாதங்களையும் தூண்டியிருக்கிறது. அடுத்து பார்த்திபன் பற்றிய அதீத மதிப்பீடு எனும் அமைவில் இக்கட்டுரை அவரை முடக்கி விடக்கூடிய ஆபத்து.

இவ்வாறான ஒரு கருத்து உருவாவதற்கு பிரதான காரணம் ஸல்மான் ருஸ்டி, சிவானந்தன், சுஜாதா போன்றோறின் புகைப்படமும் கட்டுரை வடிவமைப்பு முறையும்தான். இதுவன்றி பார்த்திபன் தன்னை மகத்தான படைப்பாளியென்று கருதிக் கொள்கிற கர்வம் கொண்டவர் இல்லை. தனது பலம், பலவீனங்களை உணர்ந்த விமர்சன பூர்வமான மனிதர் அவர்.

__29 ம் பக்கம் பார்க்க.....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஜோசியனின் ஒரு நாள்

- ஆர். கே. நாராயன்

தமிழாக்கம்: பொ. கருணாஹரமூர்த்தி



அந்தக்கடைத்தெருவின் ஜனசஞ்சாரம் சற்றே ஓயத்தொடங்கியது. கடலைக்காரனின் கடையில் பழுப்பு மஞ்சள் நிறத்தில் மினுக்கு மினுக்கென்று எரிந்துகொண்டிருந்த பெற்றோமாக்ஸையும் அவன் இனி எந்நேரமும் அணைத்துவிட்டு வியாபாரத்தை முடித்துக்கொண்டு புறப்படலாம். பலகாலமாகவே கடலைக்கடைக்காரனுடன் ஒன்றிக்கொண்டு தொழில் செய்துவரும் ஜோசியனும் தன் நோட்டுக்களையும், கௌரிஓடுகளையும், தனது பையுக்குள் எடுத்துவைத்துக் கொண்டு புறப்படத்தயாராகையில்.......... பத்துநாள் ஷேவ் செய்யப்படாத தாடியைச் சொறிந்துகொண்டு ஒருவன் வந்து அவன் முன்னால் நின்றான். ஏதோ -பெரிய பிரச்சனையுடன் வந்திருக்கிறான் போலும் ...... பாவம்-

## The Day of an Astrologer

*by- R.K.Narayan*

அகவைகள் 91 ஐ கடந்தும் இன்னும் துடிப்புடன் எழுதிக்கொண்டிருக்கும் ஆர்.கே.நாராயன் பிறப்பால் தமிழர். அவர் ஆங்கிலத்தில் எழுதி அதைநான் தமிழ்ப்படுத்த நேர்ந்தமை ஹாஸ்யமாகவில்லை? இளமையில் (மைசூர்) கர்நாடகத்தில் வாழ்வும், ஆங்கிலக்கல்லூரிகளில் பயில நேர்ந்தமையுந்தான் அவர் தன் படைப்பு மொழியாக ஆங்கிலத்தை தேர்ந்ததிற்கான காரணங்களாக முடியும். ஒருமுறை ஒரு இதழியலாளர் அவரிடம் கேட்டார் - நீங்கள் ஏன் ஆங்கிலத்தில் எழுதுகிறீர்கள்?
அவர் திருப்பிக்கேட்டார்: -ஏன் ஆங்கிலத்தில் எழுதக்கூடாது?

இளமையில் 1930களில் கார்டியன், நியூயோர்க் டைம்ஸ் போன்ற அமெரிக்கப் பத்திரிகைகளில் செய்தியாளராக, இலக்கிய விமர்சகராக, திறனாய்வாளராகப் பணிபுரிந்துள்ளார். அப்போது தனது முதல் EHTYHD SWAMI AND FRIENDS ஐ எழுதினார்.
உலகக்கோடீஸ்வரர்களான றொக்பெல்லர் குடும்பத்தினர் இவர் எழுத்துக்களால் கவரப்பட்டுத் தங்கள் விருந்தினராக அமெரிக்காவுக்கு அழைத்துக் கௌரவித்தனர். அங்கேயே பேர்க்லியில் ஹொட்டலில் 2 மாதங்கள் தங்கியிருந்த காலத்தைப் பயன்செய்து பின்னாளில் அவரை முழு உலகமும் அறியவைத்ததும், இந்திய சாகித்ய அக்கடெமியின் பரிசைப்பெற்றுத்தந்த நாவலுமான The Guide ஐ எழுதினார்.
திருக்குறளுக்கு அடுத்தபடியாக இந்தியரால் எழுதப்பட்டு அதிக அளவில் உலகப்பிறமொழிகட்கு மொழியாக்கம் செய்யப்பட்ட நூல் இதுதான்!
இந்திராகாந்தி இவரை ஒருமுறை - என்னிடம் அரசியலே பேசாத என் இலக்கிய நண்பன்- என்று குறிப்பிட்டுப் பாராட்டினார். பின்னாளில் அவரை ராஜ்யசபா உறுப்பினராக நியமிக்கவும் செய்தார்.

ஆர். கே. நாராயன் 10 நாவல்களும் 200 க்கு மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியுள்ளார். தனது பார்வையில் இராமாயணத்தையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்று ஜோசியன் அடிமனதில் அனுதாபப்பட்டாலும் கிடைக்கக்கூடிய சில்லறையின் மீதான நாட்டம் அவனுக்கு குறையவில்லை. முதலில் கொஞ்சம் பிகு பண்ணினான்.

-என்னப்பா தொழில் முடியற நேரத்தில வர்றியே....... நாளைக்குக் காலைல வா.....போ!-

-இல்லை.... இப்போ நேக்கு சேதியொன்று தெரிந்தாகணும்.......!-

கிராக்கி யாராவது வருகிறார்களா என்று கண்களை விழித்துப் விழித்துப் பார்த்தே அவன் கண்களில் அதீத பிரகாசம் ஏறியிருந்தது. இருந்தும் சொன்னான்:

-வெளக்கு வெளிச்சத்திலே கைநாடி அவ்ளோ வெளங்காதே.......?-

-அனுபவப்பட்ட ஜோசியரு....... என்னுடைய ரெண்டே ரெண்டு கேள்விக்கு மாத்ரம் பதிலு சொல்லிட்டு அப்புறமா வூட்டுக்கு போறது........-

வந்தவனின் பதிலிலிருந்த கிண்டல் கலந்தகெடுபிடி ஜோசியனுக்கு எரிச்சலூட்டியது. ஏதும் விவகாரம் பண்ண வந்திருப்பானோ...................... உசாரானான்.

- இப்போ நான் தொழிலை மூடிட்டன்-

ஜோசியன் நகரவும் வந்தவன் எட்டி அவன் சட்டையில் பிடித்தான்.

- நீரெல்லாம் ஒரு ஜோசியரு.... இதுக்க ஜோதிடசிகாமணின்னு பட்டம் வேறு......... ஓய் காணும் ஒக்காரும் வேய் பத்து நிமிஷம்....... வெளிச்சத்துக்கு நான் இந்த மெழுகுதிரியை கொழுத்தி வைப்பனாம்...... அதுல நீர் கையைப்பார்த்து என் ரெண்டு கேள்விகளுக்கு மட்டும் பதிலைச் சொல்றீர்........-

- என்னால சரியான பதிலை சொல்லமுடியலலேன்னா அஞ்சுரூபாய் கொடுத்திர்றேன். சரியாகவே சொல்லிட்டேன்னுவையு......... என்னா தருவே எனக்கு......?-

- ஒவ்வொரு பதிலுக்கும் 100ரூபாய் தருவேனாம்....-

தன் சட்டைப்பையிலிருந்து 100ரூபாய் தாளொன்றை எடுத்து அவன் முன்னால் ஆட்டியபடி

- ஜோசியத்தை ஆரம்பிக்கலாமா..?- என்றான்.

-நீயெல்லாம் ஒரு ஜோசியன்- என்றது இவன் தன்மானத்தைப் பெரிதும் சுட்டது. மனதுள் ஆக்ரோஷத்துடன் இப்போ ஜோசியன் பந்தயத்திற்கு தயாரானான். கன்வேஸ் துணியை விரித்து சம்மணமிட்டு உட்கார்ந்துகொண்டு அவனது கைரேகைகளை ஆராய்ந்தான்

-இப்போது நீ ஒரு இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டுக்கொண்டு....-

-இந்தக் கதை எல்லாம் வாணாம்...... உருப்படியாய் ஏதாவது சொல்லும் வே.....!-

- ஒரு பெண் உன்னுடைய வாழ்க்கையில் புகுந்துகொண்டு..........-

-பெண்ணுமில்ல..... ஒரு மண்ணுமில்ல இந்தப் பல்லவியையெல்லாம் விட்டிட்டு உருப்படியா ஏதாவது சொல்ல முடிஞ்சாபாரும்...-

அவனது அதிகாரதோரணையிலான பேச்சில் தன் கௌரவமெல்லாம் உதிர்ந்து போவதாகப்பட்டது ஜோசியனுக்கு. தன் மடியை அவிழ்த்து ஒரு கசங்கிய 5ரூபாய் நோட்டை எடுத்து அவன் முன்வைத்து

- இதோ என் ருபாய்......ஒன்ட இரண்டு கேள்வியையுஞ் சீக்கிரமே கேட்டுத்தொலை..... உனக்கு என் பதில்லே திருப்தியில்லேன்னா இந்தப் பணத்தை எடுத்துட்டுப் போய்க்கொண்டேயிரு........ நேக்கும் பொண்டாட்டி புள்ளங்க இருக்குதில்ல....-

- நீர் சரியான பதில மட்டும் சொல்லிட்டீர்னா உம்மைப் பத்ரமா ரிக்ஷாவுல வூட்டுக்கு அனுப்பிவைக்கிற பொறுப்பு என்னோடது...... ஓகே...-

இந்த பேமானிப்பயலோட இரண்டு கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்ல மகமாயி வைச்சிட்டா என்றால் இரண்டு கிழமைக்கு அரிசி, பருப்பு, கருவாட்டுக்குப்போதும்....... ஜோசியன் கண்களை இறுக மூடி மகமாயியை யாசிக்கையில் வந்தவன் இன்னொரு மெழுகுதிரியை ஏற்றிவைத்தான்.

அந்நேரம் வீதியால் சென்று கொண்டிருந்த பாரஉந்துகளின் இரைச்சல்கள் கடந்து தேயவும் ஜோசியன் கண்களைத் திறந்து பார்த்தான். முன்னிலும் பிரகாசமான ஒளியில் எதிரில் இருப்பவனின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். மனதில் ஒரு பொன் மின்னல் தெறிக்கவும் அசுர தென்புண்டானது.

-என்னதான் உனது முதலாவது கேள்வியாக்கும்?-

உற்சாகம் பொங்கக் கேட்டான்.

மஹாபாரதத்தையும் வேறு எழுதியுள்ளார். இயல்பான நகைச்சுவையும், எளிமையான வார்த்தைத் தேர்வும் இவரது எழுத்தின் சிறப்பு. இவர் எழுதிய My Days என்ற வாழ்க்கைச் சரிதம் இவர் தம் நாவல்களை விடவும் சுவாரஸ்யமானது. இளமைக் காலத்திலேயே மனைவியை இழந்தது போலவே பல தோல்விகளையும் எதிர்கொண்டவர். (பின்னால் திருமணம் செய்து கொள்ளவே இல்லை.) துன்பமான நிகழ்வுகளையும் அங்கதம் கலந்து எழுதுவது என்பது அவர் பாணி. The Guide நாவலை படமாக்குவதற்கான உரிமையை ஒப்பந்தம் செய்ய அக்காலத்தைய மாபெரும் நடிகரும் தயாரிப்பாளருமான தேவ் ஆனந் இவர் வீடுதேடிவந்து தனது செக் புத்தகத்தைத்திறந்து வைத்துக்கொண்டு -எவ்வளவு தேவை கேளுங்கள்- என்றாராம். இவருக்கோ -பாவம் தேவ் ஆனந் ......... படம் நல்லபடி ஓடாவிட்டால் தன் கதையாலேதான் இப்படியானது என்று யாரும் கூறும்படியாகிவிடுமோ என்ற ஒருவகைப்பச்சாதாபம்..... - சரி படம் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும்போது பார்த்து ஏதாவது கொடுங்கள் - என்றொரு வார்த்தையை விட்டுவிடுகிறார். -சரி அப்போது எமது நட்புக்கு இந்த வானம்தான் எல்லையாக இருக்கமுடியும்- என்றுவிட்டு அவரும் செக் புத்தகத்தை மூடிக்கொண்டு போய்விடுகிறார். படம் பல மொழிகளில் தயாரிக்கப்பட்டுச் சக்கைபோடு போடுகிறது! படத்தின் கதையாசிரியர் என்ற வகையில் பைசா பெயரவேணுமே.....ஊகூம்! முதலில் இரண்டுலட்சரூபாய் கேட்டிருந்தாலே கிடைத்திருக்க வேண்டிய சந்தர்ப்பம் இழந்துபோனது . ஏமாற்றத்தை மிக இயல்பாய் My Days இல் எழுதுகிறார்: வானம் ஏதோ குடையளவுக்குச் சுருங்கி விட்டதே தவிர வேறொன்றுமில்லை! இவர் தன் படைப்புகளில் ஜோஸியம், நேர்த்திக்கடன், முடிகாணிக்கை தருதல் போன்ற இன்னோரன்ன சடங்குகளை கிண்டல் பண்ணவும் செய்கிறார் எனினும் கலாச்சாரப்புரட்சியோ, சமூகஎழுச்சியோ, நவீன சிந்தனைத் தெறிப்புக்களோ இல்லையென்ற எதிர் விமர்சனங்களும் உண்டு. சமகால இந்திய எழுத்தாளர்களுள் நோபல்பரிசுக்கு சிபார்சு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-எனது இப்போதைய தேடலில் நான் வெற்றியடைவேனா?-

- இல்லை-
சிறு இடைவெளிவிட்டு

-ஒருபோதும் வெற்றியடையமாட்டாய்- என்றுவிட்டுக் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

- என்ன தேடல் என்று கொஞ்சம் விபரமாச்சொன்னால்
நல்லது.................
மொட்டையா பதில் சொன்னா எப்பிடி...........?-

- சரி...... நீ உன் வயதையொத்த ஒரு ஆளைத் தேடித்திரியிறீர்....... இந்த டவுனுக்கு வந்த நோக்கமும் அதுதான்.-

எதிரில் இருந்தவன் ஆச்சரியத்தால் வாயைப்பிளந்தான். இரண்டு நிமிட மௌனத்தின்பின் உணர்வுப் பிரவாகத்தில் கைவிரல்கள் இன்னமும் நடுங்கத் தன் ஷேட்டுப் பொக்கற்றிலிருந்து 100ரூபாய் நோட்டொன்றை எடுத்துப் பயபக்தியுடன் அவன் முன்பாக வைத்தான்.

ஜோசியன் கீழ்கண்ணைக் கொஞ்சமாகத் திறந்து நோட்டைப் பார்த்துவிட்டு சடுதியில் மீண்டும் மூடிக்கொண்டான்.

-ஜோசியரு தயவுபண்ணி இன்னுங்கொஞ்சம் விபரங்கள் சொல்லணும்.......-

- அது உனது இரண்டாவது கேள்வியாக்கும்.....-



- ஒருமுறை கிறிஸ்கத்தி ஒன்று உமது உடலில் பாய்ந்திருக்க வேணுமே...?-

இப்போது வந்தவனுக்கு உதடுகள் துடித்து கண்கள் பனித்தன. தன் ஷேர்ட்டின் பொத்தான்களைத் திறந்து மார்பில் கத்தி பாய்ந்த காயத்தின் வடுவைக்காட்டினான். மீண்டுமொரு 100ரூபாய் நோட்டை எடுத்து ஜோசியன் முன்னால் வைத்துவிட்டு

- ஜோசியரையா அருள்கூர்ந்து இன்னும் எனக்கு ஏதாவது சொல்லணும்..- என்றான் பவ்யமாய்.

-அதெல்லாம் சரிவராது....... நம்ப கொண்டிசன் என்னா........ ரெண்டு கேள்விதானே.......... ஆளைவிடு

ஜோசியனுக்கு உண்மையில் அவன் சட்டையைப் பிடித்துக் கொண்டு - நீயும் ஒரு ஜோசியனா- என்று கேட்டதின் வெப்பிகாரம் உள்ளு;ர இன்னும் தணியவில்லை.

வந்தவன் இன்னுமொரு 100ரூபாய் நோட்டை எடுத்து ஜோசியனின் காலடியில் வைத்துவிட்டு

- நீங்கள் பெரியவர் அப்படியெல்லாம் சொல்லப்படாது........ நான் ஏதும் தப்பு பண்ணியிருந்தா............ பெரியமனசு பண்ணி மன்னிச்சு இந்தப்பாவிக்கு ஒரு வழிகாட்டணும்...........-

என்று இரந்து நின்றான்.

சற்றே முன்கோபியாக இருந்தாலும்
- ஏன்யா உன் தொப்புள் கொடி இன்னும் வெட்டுப்படேல்லை?-
என்றால் உடனே வேஷ்டியை அவிழ்த்துப் பார்க்கக்கூடியவனாக எதிராள் இருந்ததும் ஜோசியனுக்கு வசதியாக இருந்தது.
மேலும் சுளையாக 100ரூபாய் நோட்டைப்பார்த்ததும் ஜோசியனுக்குள் சந்தோஷம் குமிழியிட்டது.
தான் மனம் இரங்குபவன் போல அவனைப் பார்த்துக்கொண்டு நோட்டுக்களைச் சுருட்டித் தன் பொக்கற்றினுள் திணித்துக் கொண்டே சொன்னான்

- பின் நீ ஒரு கிணத்திற்குள் உருட்டி வீழ்த்தப்பட்டாய்........... யாரோ வழிப்போக்கர் காப்பாத்தியிருக்கவேணும் -

செய்யப்பட்டோரில் முன்னணியில் நிற்பவர்.
இவரிடம் ஒருமுறை -உங்களுக்கு நோபல்பரிசு கிடைத்தால் என்ன செய்வீர்கள்?- என்று கேட்டார்கள். மிக எளிமையாகவே பதில் தந்தார்:
-ஆச்சரியப்படுவேன்-
இது சிறந்த ஒரு படைப்பொன்றுக்குரிய சிறப்பம்சங்கள் அத்தனையும் உள்ளவொருகதை என்று சொல்லவில்லை. என் இளவயதில் எழுத்துக் கூட்டிப்படித்து வியந்த சிறுகதை என்பதாலோ என்னவோ மனதில் என்றோ பதிந்துவிட்டது. இத்தமிழ் வடிவம் வார்த்தைக்கு வார்த்தை செய்யப்பட்ட மொழிபெயர்ப்பல்ல. முதல் வாசிப்பிலிருந்து ஞாபகத்திற்குக் கொணரச் செய்யப்பட்ட முயற்சிதான். நன்றி.

- பொ.கருணாஹரமூர்த்தி.
பெர்லின் 03.08.1997

- என்னை அக்கதிக்காளாக்கிய ராஸ்க்கலை நான் எப்போது கண்டுபிடிப்பேன் சுவாமி......?-
ரௌத்திரத்தில் முஷ்டியை மடக்கியபடி கேட்டான். ஜோசியன் அமைதியாகச் சொன்னான்.

- மறுபிறவியில் -

- புரியல்லயே......-

- அவன் நாலு மாதமுன்னதான் வடக்க ஒரு லாரி ஆக்ஸிடெண்டில போயிட்டான். நீயும் உன் தேடலை அதுக்கு முன்ன ஆரம்பிச்சிருக்கணும்..
இனிமேலைக்கு சந்திப்பெல்லாம் சாத்யமே இல்லை.....-

தன் விபூதிப்பொட்டலத்தை அவிழ்த்து கொஞ்சம் விபூதியைக் கிள்ளி அவன் உள்ளங்கையில் போட்டு- இதை நெத்தியில இட்டுக்கிட்டு வட கிழக்கா உன்னூரைப்பார்த்து போ....-
என்றான் ஜோசியன்.
விபூதியைப் பக்தியுடன் தரித்தவன் கண்கள் மெழுவர்த்தி ஒளியில் மின்ன
சொன்னான்
- அந்த அயோக்கியப் பயல் என்னிடமிருந்துதான் தப்பிவிட்டாலும் கடவுள் அவனுக்குரிய தண்டனையை வழங்கிவிட்டார் பார்த்தீங்களா.......?-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- ஆமாமா..... அரசன் அன்றறுப்பான், தெய்வம் நின்றறுக்கும்....... அவன் தலை லாரியில் அரைஞ்சேபோச்சு......!-
ஜோசியனை ரிக்ஷாவில் ஏற்றிவிட்டு வணங்கி விடைபெற்றவன் இருளில் மறைந்தான்.

ஜோசியன் வீடுசேர ஜாமமாகியது. மனைவி தாமதத்திற்கு விளக்கங்கோரினாள். அவன் கொண்டு வந்த முழுப்பணத்தையும் எண்ணிப்பாரென்று அவளிடம் கொடுத்துவிட்டுப் பின்கட்டுக்குப் போனான்.
-ஏதுங்க இவ்ளோ பணம்.....?- என்று வாயைப்பிளந்தவள்தான் அவன் கால் முகம் அலம்பிக்கொண்டு வரும் வரையில் பிளந்தபடியே நின்றாள்.
- ஏதும் கடன் கிடன் வாங்கலையே...?-
அவன் கண்களை நேராகப் பார்த்தாள்.
-என்ன கடனா........... நானா........ அவ்ளோவும் இன்னிக்கே உழைத்ததாக்கும்........-
தன் முன் மண்டையைச் சுட்டுவிரல்களால் பெருமிதத்துடன் தட்டிக்காட்டினான் எல்லாம் தன் புத்திசாலித்தனத்தால்தான் என்ற அர்த்தத்தில்.
-இன்னுங்கொஞ்சம் பிய்த்திருப்பேன் பாவம் பயல் ஊர்போய்ச்சேரட்டும் என்று விட்டிட்டேன்.......-
-நெசமாலும் ஒங்க சாமத்தியத்திலதான் சம்பாதிச்சீங்களா?-
- அந்த அளவுக்கு இன்னிக்கு மூளய பயன் படுத்தியிருக்கேன்னா பார்த்துக்கேயன்-
- அதுதானே இன்னைக்கு ஒங்க மூஞ்சியில இத்தன யோசன ரேகைகள் ஓடறதான்னு பார்த்தன்.......... ஆனா வழக்கமான ஏதோ ஒண்ணு மிஸ் பண்றாப்பலயுமிருக்கே........?-
- ஒண்ணுமில்லையே நான் எப்பவும் போலத்தானேயிருக்கேன்........... -
அவளைச் செல்லமாய் கிள்ளினான். சாப்பாடானதும் வெளித்திண்ணையில் பாயை விரித்து உட்கார்ந்திருந்தவனுக்கு வெற்றிலையை மடித்துக்கொடுத்தபடி கேட்டாள்.
- என்னாங்க அப்டி பலமான யோசன...... எதையோ எங்கிட்ட மறைக்கிறீயளா.............?-
வெற்றிலையை வாங்கி மென்று விழுங்கிக்கொண்டே சொன்னான்.
-ரொம்பக்காலமா.......... என் தலையை அழுத்திக்கிட்டிருந்த பெருஞ்சுமை யொண்ணு இன்னிக்கு என்னைவிட்டே இறங்கிட்டுது தெரியுமோ.......-
- ஒரு மண்ணும் புரியல..... சித்த வெவரமா சொல்றது......-
- நான் அவனைக்கொன்னிட்டேன் என்னுதான் நெனச்சுக்கிட்டிருக்கேன்.......
(பலமாக கெக்கரித்துச் சிரிக்கிறான்)
இன்னிக்குப் பார்த்தால் சாட்சாத் அந்தப்பயலே வந்து ஏங்கிட்ட கையைக்காமித்து ஜோசியங்கேட்கறான்னா........-

என்ன கொலை பண்ணப் பார்த்தீங்களா...........?-

- கேட்டுக்கோ.......நான் எங்கிராமத்தை விட்டே வெளியேறி இங்க பட்ணத்திலே குடியேற நேர்ந்ததும் ஒன்னயக்..... கண்ணாலம் பண்ணிக்க வந்ததெல்லாம் அதனாலதான்......-

அவனை அவள் மிரள மிரள ஏதோ வேற்றாளைப் பார்ப்பதுபோலப் பார்த்தாள்.

- இளமை முறுக்காக இருந்தப்போ ஒருநாள் கிராமத்தில ரெண்டுபேரும் சேர்ந்து குடிச்சோம்..... ∴புல்லா ஏத்திக்கிட்டு சூதாடப்போனமா...... அவன் ஏன்ட நாப்பது ரூபா பணத்தைத்திருடிட்டான். அதில ஏற்பட்ட தகராறில எமக்குள்ள கைகலப்பு ஏற்பட்டிடிச்சு........... ஒரு கிறீஸ்கத்தியினால நான் அவனை............ம்ம்....... போகட்டும் எல்லாம் பழையகதை....... இப்போ எனக்குத் தூக்கம் வர்றது.......-

திண்ணையில் வடிவாகத் தன் முழு உடம்பையும் நீட்டிப்படுத்தான்.

பின் நிம்மதியான குறட்டை ஒலி கேட்டது.

◆

## ஓவியங்கள்!

அம்மாவை அழகுபடுத்த ஓவியங்கள்தேவை. உங்கள் உங்கள் ஆக்கங்களுக்கு பொருத்தமான ஓவியங்களை தேடி அனுப்புவீரானால் நல்லது. உங்களுக்கு அருகில் ஓவியர்கள் இருந்தால் அவர்கயையும் உற்சாகப்படுத்துங்கள்! அம்மாவின் அட்டைவரை ஓவியங்கள் விரும்பப்படுகின்றது.
எங்காவது புத்தகங்களில் கத்தரித்ததாகஇருந்தால் புத்தகம்பற்றிய விபரம் முக்கியம்!

## படைப்பாளிகளுக்கு!

கணனி வசதி உள்ளவர்கள், உங்கள் ஆக்கங்களை கணனிமூலம் பதிப்பித்து உதவுவீரகளானால் உதவியாக இருக்கும். எழுத்துப்பிழைகளும் தவிர்க்கப்படும்.
படைப்புக்களில் வரும் எழுத்துப்பிழைகள் பாரதூரமானவைதான். இவை அசட்டையீனமாக விடுபடுபவையல்ல. இயலாமையே காரணம். நேரத்துடனே ஆக்கங்களை அனுப்பிஉதவுவீரகளானால், கணனியில் பதிவுசெய்தபின் உங்களிடமே திரும்பவும் அனுப்பிச் சரிபார்த்துக்கொள்ளுதல் இன்னுமொரு சுலபமான வழியாக இருக்கும்.

இந்த இதழை கணனிமூலம் பதிப்பித்துதவியவர்கள் :
பண்ணாகம் துரைசுதன்
இராசையா ஜெயக்குமார்
நிர்மலா
சந்திரிகா சண்முகராஜா
பவன் கணபதிப்பிள்ளை
பொ. கருணாஹரமூர்த்தி
புவனன்

தலைப்பு ஓவியங்கள் :
அ. தேவதாஸன்

## கிடைக்கப்பெற்றோம்!

**'களம்'**
(இலக்கிய சஞ்சிகை)
கமலகம வீதி
அக்கரைப்பற்று
இலங்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸல்மான் ருஸ்டி

**தலாத் அஹ்மத்**


சென்ற பிப்ரவரிமாதத்துடன் ஸல்மான் ருஸ்டியின் மீது ஈரானிய அரசாதிக்கம் இயற்றிய கொலைத் தண்டனைக்கு எட்டு வருடம் ஆகிறது. ஸட்டேனிக் வெர்ஸஸ் நாவலை எழுதியதற்காக இந்த தண்டனையை கோமேனி ருஸ்டியின் மீது விதித்தார். இந்தக் காலங்களில் ருஸ்டி பிரிட்டிஸ் அரசாங்கத்தின் பாதுகாப்பு வழங்கும் உத்தரவாதத்தை சார்ந்து வாழ்ந்து வருகிறார். இத்தனைக்கும் பிறகும் அவர் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

சென்ற 1996 ஆம் ஆண்டு வெளியான அவரது மூர்ஸ் லாஸ்ட் ஸை (Moors last sign) நாவல் அவ்வாண்டு வெளியான படைப்புக்களில் சிறப்பானதென போற்றப்படுகிறது. இந்நாவலில் கிறிஸ்தவ தாய்க்கும் யூததந்தைக்கும் பிறந்த மொராஸ் (Moraes) எனும் பாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார் ருஸ்டி. மிகபலமாக ஸ்தாபிதமாகின வியாபாரக் குடும்பத்தைச் சுற்றிய, கொச்சின் சமூகத்தை பற்றிய கதை அது. அந்த கிறிஸ்தவ யூதக் குடும்பத்தின் இருத்தல், செல்வம், அதிகாரம் போன்றன 1990களில் நிகழ்ந்த வகுப்புக் கலவரத்தை தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகிறது. அடிப்படை இருத்தலே பிரச்சனைக்குள்ளாகிறது.

நேரடியான கதை சொல்லிக்கொண்டு போகும் போது கூட ருஸ்டி உண்மைச் சம்பவங்களோடு ஒட்டி கதையை வளர்த்துக் கொண்டு போகின்றார். அயோத்தியில் நிர்மூலமாக்கப்பட்ட பாபர் மசூதி இடிப்பு, மதக்கலவரத்தை தொடர்ந்து பம்பாய் நகரத்து வீதிகளில் கொல்லப்பட்ட 2000 மக்கள் நாவலில் இடம்பெறுகிறார்கள். அதேவேளையில் வலதுசாரி இந்து பிஜேபி சிவசேனை வகுப்பு வாதத்தின் எழுச்சியையும், அதன் தலைவர் பால்தக்கரேயும் - ராமன் பீல்டிங் எனும் பெயரில் நாவல் எடுத்துக் கொள்கிறது. நல்ல இந்து ஆண்களும், நல்ல இந்து பெண்களும் வீதியில் சுதந்திரமாக திரிகிற இடம் அமைய வேண்டும் என்று இந்தியாவைக் குறித்துப் பேசுகின்றார் ராமன் பீல்டிங். இந்தப் பாயங்கரத்தின் இணையூடும் ருஸ்டி ஒரு மிக முக்கியமான விசயத்தை சுட்டி நிற்கிறார். இந்தியா பல்வேறு கலாச்சாரங்கள், மதங்கள், மரபுகள் கொண்ட நாடு. அதுதனது கடந்த காலத்தில் இவையெல்லாம் இணைந்து போகும் உன்னதத்தைக் கொண்டிருந்தது.

ருஸ்டியின் பல்வேறு படைப்புகள் இந்த வேறுபட்ட கலாச்சாரங்களின் கலப்பில் விளையும் பிரச்சனைகளை பேசுபவை. சத்தனிக் வெரிஸஸ் (Satanic verses) என்ற நாவலில் மதத்தை அசிங்கப் படுத்திவிட்டார், கடவுளை அவதூறு செய்துவிட்டார், முஸ்லீம் மதத்தை அவதூறு செய்துவிட்டார், முஸ்லீம் மதத்தை கேவலப்படுத்தி விட்டார் என்ற கூக்குரல்கள் எழுந்தன. அது உண்மைதான். ருஸ்டி தனது நாவலிலே அதிகாரபூர்வ இஸ்லாம் (Official Islam) குறித்து கேள்விகள் எழுப்பத்தான் செய்கின்றார். மௌல்விகள் குறித்தும், புனித நூல் குறித்த அவர்களது வியாக்கியானம் குறித்தும் ருஸ்டி மிகுந்த ஆத்திரம் கொள்கின்றார். இஸ்லாம் ஒரு மதம் சார்ந்த கருத்தியல் (Religious ideology) எனும் அளவில் அதன் வளர்ச்சி பற்றியும், தீர்க்க தரிசி பற்றியும் ஒரு மாற்று வியாக்கியானம் வழங்க ருஸ்டி முயல்கிறார். இமாமின் மேலாதிக்க வியாக்கியானங்களிலிருந்து மதக் கருத்தியிலை விடுதலை செய்ய நினைக்கிறார். இங்கிலாந்தின் மீது பறக்கும் போது ஒரு ஏர் இந்தியா விமானம் உடைந்து விழுகிறது. அதிலிருந்து ஜிப்ரில் என்கிற பாத்திரமும், ஸலாடின் என்கிற மனிதரும் பூமியில் விழுகிறார்கள். இவர்களை சுற்றி கதை சொல்வதன் மூலம் நல்லது மற்றும் கெட்டதுக்கிடையில் மதப்பிரதிமைகளும் இட்டுக் கட்டப்பட்ட பிம்பங்களும் செயல் படுவது பற்றிய சந்தேகத்தை ருஸ்டி எழுப்புகிறார். தீர்க்கதரிசியானமொஹூந் (Mohound) புனித பாடல்களுக்கு சமமாக சாத்தானின் பாடல்களையும் பெறுகிறார். ஒரே காலத்தில் அவர் இந்த அனுபவத்தை அடைகிறார்.

அதே வேளையில் மதத் தீவிரவாதிகளை கேள்விக் குள்ளாக்குகிறார் ருஸ்டி. இந்த நாவலின் மைய நோக்கமாக அமைவது இதுதான். பிரிட்டனில் வளர்ந்த இரண்டாம், மூன்றாம் தலைமுறையினரான ஆசியர்களின் குரலாக இந்நாவல் இருக்கிறது. இவரது மிகக் கடுமையான விமர்சனம் பிரிட்டிஸ் சமூகத்தினுள் இயங்கும் நிறவாதத்தை நோக்கித்தான் திரும்புகிறது. இந்தப் புத்தகம் நம்மைப் பற்றியும் மிக மோசமாகத்தான் சொல்கின்றது என்று கென்னத் பேக்கர் (கன்ஸர்வேவ் கட்சித் தலைவர்) சொன்னது யதேச்சியாக நிகழ்ந்தது அல்ல. நம்மைப்பற்றி என்பது பிரிட்டிஸ் அரசாங்கத்தைக் குறிக்கும் 'அந்நிய' கலாச்சாரம் என்று தாட்சர் குறிப்பிட்ட நிறவாதத்தின் நீட்சியான குரல் இது. பிரிட்டிஸ் ஆசியர்கள் தமது தாய் தந்தையர்களையும் அவர்களது நம்பிக்கைகளையும், மதிப்பீடுகளையும் கேள்வி கேட்கிற அதே சமயத்தில், தாம் பார்த்தேயிராத தமது தாய் நிலத்திலிருந்து தாம் பிரிக்கப் பட்டதையும் உணர்கிறார்கள். தாம் பிறந்த இந்த நாடு தமது பெற்றோர்களின் உழைப்பையும் வேலைத்திறனையும் மிகக் கடுமையாக உறிஞ்சுகிறது. அதேவேளை அவர்களது சருமத்தின் நிறத்துக்காக அவர்களை கீழே தள்ளுகிறது. இவையெல்லாம் இருந்தும் நேர்ந்த மிகப் பெரிய சோகம் என்னவென்றால், யார் இந்த நாவலை படிக்க வேண்டுமோ அவர்கள் படிக்கவில்லை! அவர்கள் இளைய ஆசியத் தொழிலாளி வர்க்கத்தினர். அவர்களுக்காகத்தான் இந்நாவல்.



ருஸ்டி சர்வதேச அளவில் பேசப்பட்டதென்பது 1980ஆம் ஆண்டு மிட்நைட் சில்ரன் நாவலும் ஷேம் நாவலும் (Midnight children shame) வெளியான பின்புதான் நேர்ந்தது. இரண்டுமே அற்புதமான புத்தகங்கள். இரண்டு நாவல்களுமே சுதந்திரத்துக்குப் பின்னே இந்தியா, பாகிஸ்தான் சமூகங்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனைகளைப் பேசுபவை. இங்கேயும் இவர் புனைவை உருவகமாற்று (Allegory) எனும் அளவில் துணைக் கண்டத்தின் வரலாற்று ரீதியிலான முக்கியமான நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட நாவல்களை அமைக்கிறார்.

மிட்நைட் சில்ரன் நாவலில் நேரு வம்சத்தினால் ஆதிக்கம் செலுத்தப் பட்டதும், காங்கிரஸ் கட்சியால் அதிகாரம் செலுத்தப் பட்டதுமான இந்தியாவையே சித்தரிக்கிறார். மிகக் கவனமாக அவர் நம்மை காஸ்மீர் யுத்தம், அவசரகாலப் பிரகடனம், அதன் விளைவாக நேரும் இந்திரா காந்தியின் படுகொலை என எடுத்துச் செல்கிறார். காங்கிரஸ் கட்சி மதச் சார்பின்மையை பேசிக்கொண்டே எவ்வாறு மதக் குழுக்களை ஒன்றுக்கொன்று எதிர் நிலையில் மோதவிட்டு தான் அரசியல் ஆதாயம் பெற்றது எனக்காட்டுகிறார். தேர்தல் இலாபம் தான் காங்கிரஸ் கட்சியின் நோக்கமாக இருந்தது என்பதையும் சுட்டுகிறார்.

மதத்துவேசத்தின் மூலமான மக்கள் கொலைகள் தொடர்ந்த நிகழ்வுகளாக ஆகாத வரையில், முஸ்லீம் லீக் கட்சி மிகக் குறைவான செல்வாக்கையே முஸ்லீம் மக்கள் மத்தியில் பெற்றிருந்தது எனும் உண்மையையும் திரை விலக்கிக் காட்டுகிறார் ருஸ்டி.

ஷேம் நாவலில் கொஞ்சக் காலமே நிலவிய மக்களாட்சி தவிர, பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்திய இராணுவ ஆட்சிகள் விளைவித்த சேதத்தை பாகிஸ்தான் அரசியலூடு பேசுகிறார் ருஸ்டி. பாகிஸ்தானில் நிலவிய குறுகியகால தேர்தல் மூலமான மக்களாட்சி கூட ஊழல் நிறைந்ததாகவும், வெட்கப் படத்தக்கதாகவுமே இருந்தது. நேருவையும், காந்தியையும் கடுமையாக விமர்சித்தது போலதான் ஷேம் நாவலில் பூட்டோவையும் தனது தந்தை தவறே செய்யமாட்டார் எனக் சொல்லும் பெனாஸிரையும் ருஸ்டி விமர்சிக்கிறார். வர்ஜின் அயர்ன் பேன்ட்ஸ் (Virgin Iron Pants) எனும் பாத்திரமே பெனாஸிரைக் குறிக்கும். இந்தியா பாகிஸ்தான் என இரு நாடுகள் பிரிந்ததை மிகக் கோபமாக தாக்குகிறார் ருஸ்டி. மிகப் பழமையானதொரு தேசத்தை துண்டாடிய அந்த மிகப் பிரசித்தமான விட்டில் பூச்சிமோகம் கொண்ட தேசப்பிரச்சனை, அது அல்லாவுக்கு பூச்சி கொறித்த சில ரொட்டித் துண்டுகளை கொடுத்தது, சில அழுக்குப் படிந்த மேற்கத்திய ஏக்கர் நிலங்களையும் சில காடுமண்டிய கிழக்கிந்திய சேதி நிலத்தையும் கொடுத்தது. சாத்தான்கள் மட்டுமே சந்தோஷப்படும் காரியம் இது என்கிறார் ருஸ்டி.

இந்த புத்தகங்கள் தெளிவாக சொல்வது என்னவென்றால், ருஸ்டிக்கு மட்டுமல்ல, பிரிட்டிஸ் அதிகாரம் முற்றுப்பெற்ற காலத்திய இந்தியாவில் வாழ்ந்த கோடானுகோடி இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் போன்ற எல்லாருக்குமே இந்த தேசப் பிரிவினை என்பது மகத்தான சோகம்தான்.

ஸல்மான் ருஸ்டி 1947ஆம் ஆண்டு முஸ்லீம் பெற்றோருக்கு பம்பாயில் பிறந்தார். பிரிவினைக்குபின் இவரது குடும்பம் பாகிஸ்தானிலுள்ள கராச்சிக்கு குடி பெயர்ந்தது. ஆனால் ருஸ்டி பிரிட்டனுக்கு வந்தார். இந்தப் புலம்பெயர்வு அனுபவம்- அந்நியருடன் இருக்கிற அனுபவம், வெளியாளாக இருக்கிற அனுபவம், சிறுபான்மை இனத்தவருக்கு எதிரான துவேசத்தை எதிர் கொள்கிறவனாக இருக்கிற அனுபவம்- ருஸ்டியின் படைப்புகளில் பிரிக்கப்பட முடியாத ஒரு உள்ளார்ந்த பகுதியாக அமைகிறது.

தனது இமேஜினரி ஹோம் லேண்ட்ஸ் (Imaginary Homelands) புத்தகத்தில்- விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பு - இலண்டனில் வாழும் ஈஸ்ட் எண்ட் (East End) பகுதி வங்களா சமூகத்தவர், பிரெஞ்சு ஹோநாட்ஸ் மற்றும் பிற குடியேற்றக்காரர்கள், அகதிகள் போன்றோரின் வழித் தோன்றல்கள் என்று ருஸ்டி குறிப்பிடுகிறார்.

மௌனமாக்கப்பட்ட ஒரு எழுத்தாளனின் சுயசரித அனுபவங்களை கூறும் நாவல் ஹருண் அண்ட் தீ ஸி ஆப் ஸ்ரோரிஸ் (Haroun and the Sea of Stories) இந்த நாவலின் பாத்திரமான ரஷீத், ஒரு அற்புதமான கதை சொல்லி தன் சக்தியை இழந்து விடுகிறான். கதை சொல்லும் திறனை அந்த வரப்பிரசாதத்தை இழந்து விடுகிறான்- கெட்ட ஆவிகள் அழிக்கப்பட்ட பின்பே அவன் தனது திறனை திரும்பவும் அடைகிறான்.

ருஸ்டிக்கு எதுவுமே அவருடைய எல்லைக்கு அப்பாற்பட்டதல்ல- அது தீர்க்கதரிசனங்களாகட்டும், கடவுள்களாகட்டும், கடவுள் தன்மை தொடுகிற அரசியல் வாதிகளாகட்டும், அல்லது ஹாலிவுட் நடிக நடிகையராகட்டும்-எல்லாருமே அவரின் படைப்புக்களில் அடங்குவர். இதுதான் ஒரு வகையில் அவரது படைப்புக்களை மிகுந்த அழகானதாக ஆக்கிறது.

சிலர் ருஸ்டியின் படைப்புக்களை வாசிக்க ஆரம்பித்துவிட்டு அவருடைய படைப்புக்கள் புரிந்துகொள்ள கடுமையாக இருக்கிறதென பாதியிலேயே விட்டுவிட்டிருக்கிறார்கள். ஒரு நவீன எழுத்தாளர் எனும் அளவில் அவரது மொழி நடை ஒரு சிக்கலான வகை மாதிரி மொழி நடை, ஒரேயொரு கருவை, தளத்தை எடுத்துக்கொண்டு அதற்குள் பல்வேறு முரண்பாடான கருத்துக்களை ஊடாடிப்பின்னி வரும் சிக்கலான மொழி (Complex Style) அவருடையது. சில வேளைகளில் அவரது பிரச்சனைகள் குழப்பமாகியிருப்பது போலத் தோன்றும். தெளிவற்றுத் தோன்றும். கடந்த காலத்திலிருந்து நிகழ் காலத்தில் குதித்து மறுபடி பின்னால் போய் வருவார். மதரீதியிலான ஐதீகங்களை அதிகமாக இவர் கையாளுவார். மாறுபட்ட கதைதாரைகளில் கற்பிதங்களினூடே கருத்துக்களை வெளியிடுவார். கதையில் இடம் பெறும் அனைத்து அம்சங்களுக்கும் இடையில்ஒரு இணைப்புச் சங்கிலியும் இருக்கும். சில பெயர்கள், இடங்கள், வரலாற்றுச் சம்பவங்கள் வாசகனுக்கு ஏற்கனவே பரிச்சயமானது போன்ற வேண்டுமென்று கட்டப்படாத ஒரு கற்பிதம் இருக்கும். இவையெல்லாமே வெகு சாதாரணமாக புரிந்து கொள்ள வேண்டும் என நினைப்பவர்களை சங்கடத்துக்கு உள்ளாக்கும். எப்படியாயினும் படிப்பவர்கள் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும். ஒரு நவீன எழுத்தாளராக ஸல்மான் ருஸ்டி எத்தனைதான் விமர்சனத்துக்குரிய பிரச்சனைகளைக் கொண்டிருந்தாலும், அவர் நமது தலைமுறையின் மிகச்சிறந்த அரசியல் படைப்பாளிகளில் ஒருவராக திகழ்கிறார்.

தமிழில் :- யமுனா ராஜேந்திரன்
நன்றி :. - Socialist Review / ஜுன் 1997 / இலண்டன்

**ருஸ்டிக்கு எதுவுமே அவருடைய எல்லைக்கு அப்பாற்பட்டதல்ல- அது தீர்க்கதரிசனங்களாகட்டும், கடவுள்களாகட்டும், கடவுள் தன்மை தொடுகிற அரசியல் வாதிகளாகட்டும், அல்லது ஹாலிவுட் நடிக நடிகையராகட்டும்-எல்லாருமே அவரின் படைப்புக்களில் அடங்குவர். இதுதான் ஒரு வகையில் அவரது படைப்புக்களை மிகுந்த அழகானதாக ஆக்கிறது.**



A drawing by a student of our School of Fine Arts, Jaffna.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'படைப்பாற்றல் இல்லாத சமூகம் எழுச்சிகொள்ள முடியாது'

## வணக்கம்

'அம்மா' மூன்றாவது இதழினையும் உரியகாலத்தில் வெளிக்கொணரமுடிந்தமைக்கு அம்மாவில் அக்கறையுள்ளோரின் எண்ணிக்கை அதிகரிப்பும் உழைப்புமே காரணமாகும்.
எல்லோரது உற்சாகமும் அம்மாவை மேலும்மேலும் செழுமைப்படுத்தும் என நம்பலாம்.

தரமான சிறுகதைநூல்கள், எழுத்தாளர் - அறிமுகங்கள், படைப்பாளிகளுடனான நேர்காணல் போன்ற அம்சங்களையும் அம்மாசேர்த்துக்கொள்ள விரும்புவதால் அக்கறையுள்ளோரை அக்கறை கொள்ளும்படி அம்மா வேண்டுகிறாள்.

அம்மா இரண்டாவது இதழ் 175 இதழ்கள் பிரதிசெய்யப்பட்டன. மேலதிகமாக இன்னும் தேவையிருக்கிறது. இந்த இதழ் 200 இதழ்கள் பிரதிசெய்யப்படுகிறது. இன்னும் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டுமென நண்பர் சிலர் வேண்டுகின்றனர்.
நல்லது தான். விருப்பம் தான்.
ஆனால் 'விதி' வலியதாச்சே. என்ன செய்வது. சென்ற இதழுக்கு அறுபது இதழ்கள் வரையிலேயே கைக்கு பணம் வந்து சேர்ந்தது. இதை விட தபாற்செலவுகளும் வேறு. நூறு இதழ்களுக்காவது கைக்குப்பணம் வந்து சேரும் நிலைவரும்போதே மேலதிகமாக யோசிக்கலாம்.

விமர்சனப்பக்கங்கள் அதிகமாகிப்போய்விட்டதாகவும் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.
இன்றையசூழலில் படைப்புகளின் தரத்தோடு, வாசகர்களின் தரத்தையும் உயர்த்தவேண்டிய தேவையும் நிறையவே இருப்பதால், இப்பக்கங்களே - இன்னும் காத்திரமாக வரும்பட்சத்தில் - அதிக பயனைத்தரக்கூடியன என்று அம்மா நம்புகிறாள்.

படைப்பாளிகள் பலரிடம் வாசகர்தரம் பற்றிய அல்லாடல் நிலவுகிறது.
'படைப்பு புரியாவிட்டால் மண்டையக்கொண்டுபோய் சுவரில மோது' என்ற எரிச்சலும் கூட எழுகிறது.
ஓர் வாசகனிடம் போய் 'ஏய் வாசகனே! உன்னுடைய தரத்தை உயர்த்து!' என்று கோருவதைவிட, வாசகனின் தரத்தையும் உயர்த்துமாறு படைப்பாளியிடம் கோருவதே நியாயமானது.

ஏனெனில் அவன் படைப்பாளி!

**"அம்மா"**

31. 08. 1997

தொடர்புகளுக்கு:
S. Manoharan
(Esc. E13)
210, Ave. du 8 Mai 1945,
93150 Le Blanc Mesnil, France.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்